உள் நாட்டுக் கழகங்கள்

(LOCAL BOARDS)

WITH A FOREWORD

BY

The Rt. Hon'ble V. S. Srinivasa Sastri, P.C.

T. SIVASANKARAM

உள்நாட்டுக் கழகங்கள்

(LOCAL BOARDS)

" எப்பொருளெத்தன்மைத் தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

—குறள்.

" *If you want your Country to be Self-governing, you must make use of all those opportunities for Self-government that Local Boards and Municipalities offer.*"

Professor Ratnaswami's Madras University convocation address on 2nd August 1934.

T. சிவசங்கரம்

 1934 [விலை ரூபா 1.

ACKNOWLEDGMENT.

I am indebted to Dr. V. A. Subramaniam, Sub-Asst. Surgeon, Bukkapatnam, for the Tamil rendering of this brochure from its Telugu original.

I also gratefully acknowledge the help rendered to me by my friend Mr. K. R. Krishna Iyer, Retired Forest Ranger, in going through the proofs of the book and correcting them.

I am greatly obliged to the Rt. Hon'ble Srinivasa Sastri P. C. for the Foreword and to the Hon'ble Dewan Bahadur S. Kumaraswami Reddiar for the Tamil introduction.

Lastly a word of praise is due to the Proprietors of the B. N. Press, in the Wallers Road of Narasingapuram, Mount Road for the speedy execution and neat get-up of the book.

THE AUTHOR.

FOREWORD.

The original of this book in Telugu is enriched by a short commendation from the pen of Dewan Bahadur N. Gopalaswami Iyengar. His unrivalled knowledge of local Government and profound solicitude for its advance along right lines give his observations* superlative value. I cannot do better than direct the reader's attention to them. Though I have been many years in public life, it has so happened that I have no direct knowledge of the working of a Local Board or a Municipality. My interest, however, in the subject has always been keen, and I yield to no one in appreciation of its supreme importance to the well-being of the people. Mr. Sivasankaram has put his finger unerringly on the weak points of our system and employed his gifts of genial humour and pleasing exhortation in describing its temptations and its opportunities of real service. He has noted with approbation my frequent suggestions for the instruction of Municipal councillors and Local Board members in the details of their many-sided work. Ideals of altruism and dedication of self to noble purposes are not less necessary in the sphere of local Government than in the large fields of provincial or national Government. This little manual is well adapted both to equip the young

---

* Reproduced at the end of the book.

aspirant with information and to inspire him with moral fervour.

Several causes have conspired to throw our local institutitons into a condition of discredit. Reforming zeal must be worked up to a high pitch of vigilance and courage before it can effect any tangible improvement. Above all, it seems to me essential that the ordinary citizen should recognise the vital and intimate interests that are entrusted to local authorities and that he should refuse to allow them to be manipulated by political parties for their own ends. The services engaged in education, sanitation, local works, and other such ways bearing closely on the lives of people mus tbe kept in the exercise of their proper functions and not converted into instruments for the aggrandisement of powerful politicians who are apt to consider their own ascendancy to be so important that all agencies may be legitimately coerced to subserve it. Mr. T. Sivasankaram does not indicate in these pages where he stands in this question of the relation between national and municipal politics. I have a hope that, with so just an appreciation as he has of the place of local bodies and local authorities in the public polity, he will not countenance the practice which has nearly established itself of the party in power using them as its appanage without proper regard to the vital interests in their keeping.

TIRUPPUR.
29th, July 1934 (Sd.) V. S. SRINIVASA SASTRI.

மதிப்புரை.

INTRODUCTION

by the Hon'ble Dewan Bahadur

S. Kumaraswamy Reddiar avl. B.A., B.L.,

(Education Minister, Government of Madras).

T. சிவசங்கரம் அவர்கள் "உள் நாட்டுக் கழகங்கள்" என்ற தலைப்பின் கீழ் இயற்றியுள்ள நூலில் பெரும்பாகத்தைப் படித்துப் பார்த்தேன். ஸ்தல ஆட்சி புரியும் நாட்டாண்மைக் கழகங்கள் நமது தேசத்தில் விரைந்து பரவிவரும் இந்நாளில் அக்கழகங்களின் உரிமைகளும் பொறுப்புகளும் என்ன, அவற்றை ஆளும் சட்டதிட்டங்கள் என்ன வென்பது போன்ற சகல விபரங்களும் நமது பொதுமக்கள் அறிய வேண்டியது அவசியம். அக்கழகங்களில் அங்கத்தினராகி ஆட்சி செலுத்துவோர் மட்டுமன்றி அவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமையுடைய பல மக்களுமே அவற்றை அறிய வேண்டும். ஸ்தல ஆட்சித் துரையில் திறமை அடைந்து நற்பெயர் பெறுவதே சுய ஆட்சிக்கு நாம் அருகரென வெளிப்படுத்துவதற்கு தக்க சான்ருகும். பொது ஜனங்களுக்கும் அரசியல் முறைகளைத் தெரிந்து

கொள்ள வேண்டுமென்ற ஆவல் எங்கும் பரவி வரு கிறது. ஆனால் அவ்வாவலை நிவிர்த்திப்பதற்கு எளி தில் யாவருக்கும் விளங்கத் தக்கனவாயும் நடையி லும் பொருளிலும் வழுவற்றதாயுமுள்ள பிரசுரங் கள் இன்னும் நம் நாட்டில் கிளம்பவில்லை. சிவசங்க ரம் அவர்கள் எழிதியிருக்கிற இந்நூல் அவ்வித நோக்கத்தைக் கொண்டே எழுதப்பட்டிருக்கிறது. அது தமிழ் நாட்டில் பலருக்கும் பயன்படுமென்ப தற்கு ஐயமில்லை. சரியான முறையில் கற்பித்தால் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கும் பயன்தரும்.

சென்னை
8-8-1934

S. குமாரசுவாமி.
(கல்வித்துறை அமைச்சன்)

முகவுரை

இப்புத்தகத்தில் இந்நாளைய அரசாட்சியின் பிழைகளை எடுத்துக்காட்டாமல் குடிஜனங்களுடைய குறைகளையே அழுத்திச் சொல்லுதல் பலர்க்கு வெறுப்பாகத் தோன்றலாகும். உலகத்தில் ஜனங்களை இரண்டு பிரிவினராக வகுக்கலாகும். தமது கொடிய நிலைமைக்கு சர்க்காரோ, அல்லது வேறு யாரோ உத்தரவாதிகளென்று நம்பி அவர்மேல் பழியைச் சுமத்தி இழந்து, கெட்டகாலம் எப்பொழுது ஒழியுமோவென்று ரோஷத்துடனும், துக்கத்துடனும் அழுதுகொண்டு சும்மாயிருப்பவர் ஓர் சார்பார். வாழ்வில் எத்தனை கஷ்டங்கள் வந்தபொழுதும், பஞ்ச பாண்டவர்களைப்போல், துணிவுடன் தாண்டிக் கொண்டு, தாண்டத் தாண்ட வல்லமை பெற்று, வாழ்க்கையே ஓர் விளையாட்டென்ற எண்ணத்துடனும் முன்வர முயல்வதேயன்றி, துணிவு பெற்று, தம்முடன் மற்றவரையும் மேலெழ முயல்பவர் மற்றொரு பிரிவைச் சேர்ந்தவராவர். நமது பட்டிக்காட்டு ஜனங்கள் முதல் பிரிவைச் சேர்ந்தவரென்பது அதிசயச் செய்தியன்று. நாட்டின் சர்க்காரையே நமக்கு இசைந்தாற்போல சரிப்படுத்திக்கொள்ள, முதல் சார்பைச் சேர்ந்தவரை இரண்டாவது வகுப்பினராக மாற்றுவதைவிட வேறு உபாயம் கிடை

யாது. சம்பூரண சுயராச்சியம் நமக்கு கிடைப்பதற் குள், நாட்டுப் புறங்களில் இந்த இரண்டாம் வகுப்பு ஜனங்களின் எண் உயர்ந்தாலன்றி, அது குடிகள் கேடுக்கே யாகும்.

இவ்வளர்ச்சிக்கு வழிகள் பின்வருமாறு. ஜனங்கள் தம்முள் தாம் சோதனை செய்து பிழை களைத்தேடி அப்பொழுதைக்கப்பொழுதே அவற் றைத் திருத்திக்கொண்டு நடந்துகொள்வது ஒன்று. சர்க்காரோ மற்றவரோ தமது முன்னேற்றத்திற்கு குறுக்கிடுகிறாரென்று தோன்றியபொழுது, அப்ப டிப்பட்டவரின் விகடமான நடத்தையிலேயே நமக்கு நன்மையைத் தரும் சாதனங்கள் இருக்கின்றனவா வென்று தேடி, அவற்றைத் துணைக் கருவிகளாகக் கொண்டு மேலேறி வர முயல்தல் மற்றொன்று. இப் புத்தகத்தில் சர்க்காருடைய பிழைகளை வற்புறுத்தா மல் ஜனங்களுடைய தப்புகளையே அழுத்தமாய்க் கூறுவதற்கு இது ஒரு காரணமாகும்.

சர்க்காருடைய தோஷங்களை எடுத்துக் காட்டி சீர்ப்படுத்த முயற்சிகள் நடந்துகொண்டே வருகின் றன. சுயராச்சியமே வேண்டுமென்று தேசத் தலை வர் போராடுகிறதற்காகவே இந்நாளைய அரசாங்கத் தினரே அரசாட்சி முறையை சீர்ப்படுத்த முனைந்து வருகின்றனர். அதற்குத் தகுந்தாற்போல் மாறுதல் களும் ஏற்படுகின்றன. இம்மாறுதல்கள் விரைவில் நடைபெற வில்லையே என்பது பலருடைய துக்கம்.

சமூகத்தில் ஜனங்களுடைய குடியறிவு (Civic Conscience) வளர்ந்து வரவர இந்த மாறுதல்களும் அதிக விரைவாய் ஏறிவரும். இவ்வறிவு வளர்ந்து வர வேண்டுமென்ருல் நமது பிழைகளை யறிந்து சீர்திருத்திக்கொள்ளும் திறமை வழக்கமாய் படியத்தகும். காந்தி மகான் மேற்கொண்டுள்ள காரிய தீக்ஷையில் பாதிக்கு மேற்பட்டது இதுவேயாகும். கோரமான உபவாச விரதம் பூண்டதும் இதற்கேயாம். அரசாட்சியின்மேல் எடுத்த கொடியை சுற்றிவைத்து, நாட்டில் தீண்டப்படாதவரை மந்தரபர்வதத்தைப்போல் உயர்த்த முயல்வதும் இதற்கேயாகும். இப்புத்தகத்தில் கவர்ன்மெண்டாரின் பிழைகளுக்கு அவ்வளவு இடங்கொடுக்கா திருப்பதற்கும் இது மற்ருெரு காரணமாகும்.

இந்நாளைய அரசாட்சியில் பிழைகளில்லாமலில்லை. எந்த அரசாட்சி முறையில் தான் பிழைகள் கிடையாது? அமெரிக்கா கண்டத்து ஐக்கிய மாகாண அரசாட்சி (Government of the United States of America) சம்பூரணமான சுயராச்சியத்தை நடத்துவதில் உயர்ந்த நிலையைச் சேர்ந்ததென்பது உலகிலேயே புகழைப் பெற்றதாகும். அப்படியிருந்தாலும் இந்நாளில் சர்க்கார் பொக்கிஷத்தில் பாரங்கள் பாரங்களாய் பொன் ஓர் மூலையில் குவிந்து வருகின்றது. ஆட்சி நடத்த போதிய வரும்படி கிடையாதென்று அரசாட்சி மந்திரிகள் மற்ருெரு

பக்கத்தில் கல்வரப்படுகின்றனர். நாட்டில், தான்யங்களும், விளைவுகளும் குவியல் குவியலாய்க் குவிந்து வருகின்றன. மற்ருெரு பக்கத்தில் கோடான கோடி ஜனங்கள் உண்டு உடுக்க வழி கிடையாமல் தெருக்கள் தோறும் பரிதவிக்கின்றனர்.

இப்பொழுது நமது நாட்டுஅரசாட்சி பரதேசத்தவருடையதா யிருப்பது வியாகூலத்திற்கு மூலமென்பது தலைவரின் கொள்கை. இதில் உண்மையில்லாமலில்லை. அஃதவ்வாறிருக்க, இந்நாளைய அரசாட்சியில் நாட்டின்வளர்ச்சிக்கு உதவக்கூடிய விஷயங்கள் சிலவிருக்கின்றன. அவை பின் வருமாறு. குடிஜனங்களில் ஜாதிமத பேதங்கள் அடிப்படமறைவது ஒன்று. இழிகுலத்தோர் எனப்படும் ஏழைகளை முன்னுக்குவர உதவிசெய்து அவர்களை அன்புடன் ஆதரிக்கக் கற்றுக்கொள்ளச்செய்வது இரண்டாவது. குமரிமுனையிலிருந்து இமயமலைவரையிலும், ஒருவயப்பட ஆட்சிமுறையில் நாட்டிலேயே தேசிய உணர்ச்சி பெருகி வருவது மூன்று. முற்றிலும் மறைந்து நிற்கும் சுதந்திர பாவங்களைப் பின்னும் ஜனங்கள் மனதில் கிளர்ச்சி செய்விப்பது நான்கு. இந்த இயக்கம், பொரி பாணம்போல் 'புஸ—புஸ—' வென்று எரிந்துவிடாது ஒரே நிலையில் எரியவைத்து அதன் மூலமாய் தேச பக்தியை ஜனங்களுக்குள் பரவ வைப்பது ஐந்தாவதாகும். வரவர குடிமக்களின் எண்ணத்திற்கு

உட்பட்டு அரசாட்சியை நடத்த முனேந்து நிற்பது ஆறு. காங்கிரஸ் பிரிவினர்களில் ஏற்பட்டிருக்கும் சங்க வல்லமைக்குக் காரணம் இவ்வுதவியின் பெருமையே யென்பதை மறந்துவிடலாகாது.

நமது தேசத்திற்கே இது ஒரு நெருக்கடியான சமயம். அரசாட்சி முறையில் இப்பொழுது நடந்து வரும் மாறுதல்களால் அரசியல் சுமை வரவர குடிமக்கள்மேல் அதிகரிக்காமற் போகாது. இவ்வண்ணம் உயர்ந்து வரும் சுமையைத் தாங்க ஜனங்களுக்கு பலமும் வளர்ந்து வந்தாலன்றி அச்சுமையைத் தாங்கமுடியாமல் தேசமே கவிழ்ந்துவிட நேரிடும். அத்தகைய வல்லமை பயிற்சியின்றி வராது. இப்புத்தகத்தில் விரிவாய் எடுத்துக் கூறியிருக்கும் உள்நாட்டுக் கழகங்கள் கிராமவாசிகள் அப்படிப்பட்ட வல்லமையைச் சம்பாதிப்பதற்கு உதவுகின்ற கருவிகளாகும். எந்த சர்க்காராயினும் குடிஜனங்களுடைய சம்மதத்துடன் நடத்தப்படும் நாளிலேயே அதை சுயராச்சிய அரசாட்சி என்று சொல்லப்படும் அந்தந்தகிராமங்களிலுள்ளஜனங்கள் இந்த உள்நாட்டுக் கூட்டங்களின் வழியாய் தமது சம்மதத்தை யனுசரித்து ஜனங்களுடைய நன்மைக்குரிய காரியங்களை நடத்திக்கொள்ள வல்லமையைப் பெற்றபொழுதே, மேலான நிலைமைகளில் அரசாங்க வியவகாரங்களைத் தாம் விரும்பியவாறு நடத்திக்கொள்ள வல்லமை பெறலாம்.

குடியரசின் முறையில் சர்க்காருக்கு அதிகாரங் கொடுப்பவர் குடி ஜனங்களே. சட்டங்களும் சாச னங்களுமே இவ்வதிகாரப் பத்திரங்கள். சாசன சபை களே இவற்றின் பிறப்பிடமாகும். இச்சபைகள் குடிமக்களால் எலெக்ஷன் மூலமாகத் தேர்ந்தெடுக் கப்பட்டவை. ஆனதுபற்றி சபையில் அதிகப்பட் டவரின் எண்ணத்தை முற்றிலும் குடிஜனங்க ளுடையதென்றே எண்ணுவது சம்பிரதாயமாகும். 'லோகல் போர்டு ஆக்ட்' (Local Board Act) என் பது இவ்வித அதிகாரப் பத்திரங்களுள் ஒன்ருகும். இதுவே இப்புத்தகத்தில் விரிவாய்க் கூறியுள்ள உள் நாட்டுக் கூட்டங்களை நிலைநிறுத்த ஏற்பட்டுள்ள சட் டங்களில் 14-வது. ஆனதுபற்றியே 1920-ம் வரு டத்து 14-ம் நெம்பர் 'ஆக்டு' என்று இதற்கு பெயர் வந்தது. அந்நாளைய சாசன சபை யங்கத்தினர் இதி லுள்ள விஷயங்களை ஒவ்வொரு பாகமாய் ஆராய்ச்சி செய்து சபையில் தீர்மானித்துள்ளவையே இதில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலமானது ஆங்கில மொழியில் எழுதியிருக்கப்பட்டிருக்கின்றது. இதை அரசாங்கத்தார் தெலுங்கிலும், தமிழிலும், மொழிபெயர்த்திருக்கின்ருர்கள். இதன் பாஷையை ஆங்கில மறியாத கிராமவாசிகள் தெரிந்துகொள் வது கடினமாகும். இதன் சுருக்கத்தை இதற்கு அனுபந்தமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அத் துடன் இப்புத்தகத்திலுள்ள அம்சங்களை சோதனை

செய்து பார்த்தால் ஆக்டின் உட்பொருள் வாசிப்போர்க்கு தெளிவாகும்.

கிராம பஞ்சாயத்து சபைகள், ஜில்லா போர்டுகள் எனப்படும் சபைகளே இந்த உள்நாட்டுக் கழகங்களாகும். இவை சுயராச்சிய சுமையைத் தாங்கப் பயிலும் பயிற்சி மாடங்கள் போன்றவையாம். 12 வருடங்களாய் இச்சபைகள் தேசமெங்கும் நிலைகொண்டு வேலைசெய்து வருகின்றன. இவ்விதமாய்க் குடிமக்களுக்கு அரசாட்சி முறையில் மெல்லமெல்ல அறிவொளி உண்டாய்வருகிறதும் உண்மையே. ஆயினும் இம்மாறுதலில் குடிமக்களின் நன்மையை நாடிய எண்ணம் அவ்வளவாகக் காணப்படுவதில்லை. தம்தம் பெருமையையே பலரை வசியப்படுத்தியிருப்பது துயரப்படத்தக்க செய்தியாகும். சிலவருஷங்களாய் எலெக்ஷன் காலங்களில் குக்கிராமங்களில் பொங்கிஎழும், பொறாமை, வயிற்றெரிச்சல், மூலை மூலைக்கு வியாபித்து பொறாமையை அடிப்பட பெயர்த்து எறிவதை யாவரும் அறிந்திருப்பார்கள். இப்படிப்பட்ட வேற்றுமையும், சங்கடங்களும் உள்ள சமயத்தில் குரோத விதைகள் நிலைகொண்டு உறுதியுடன் வளர்ந்து கிராம வாழ்க்கையையே சீரழியவைப்பது பயத்தை யுண்டாக்குகின்றது. இனி சுயராச்சியத்திற்கு இடம் எங்கே? குடியரசின் நிலை யெங்கே? நமது நாடு விடுதலையடைவது எப்பொழுது? இப் பிரமாதத்தைத் தடுக்க ஓர் உபாயமும் தோன்றவில்லை. இது காரி

ருள். நேரமோ நெருக்கடியானது. அறிவாளியன்றி வேறு வழி கிடையாது. எனக்கு இப்பொழுது 65 வயது. லோகல் போர்டு வியவகாரங்களில் 30 வருடங்கள் அனுபவம் எனக்கு இருக்கின்றது. இந்த உள்நாட்டு சபைகளின் காரிய முறையின் உட் பொருள் எனக்கு சிறிதே விளங்கி யிருக்கின்ற தென்று சொல்வேன். அறிந்ததை அடிப்படையாய் வாசிப்போர்க்கு அளிப்பதற்கே இதை எழுதலானேன். இக்காரிருளில், இவ்விதத் தடுமாற்றமுற்ற சமயத்தில் நூறிலொருவருக்கேனும் இதில் வரையப் பட்டுள்ளவை ஓர் கிரணமாய் வழிகாட்டி நின்றால் அடியேன் முயற்சி முற்றிலும் கனிந்ததென் றெண்ணுவேன்.

பெனுகொண்டா
1-7-1934.

T. சிவசங்கரம்

உள் நாட்டுக் கழகங்கள்.

I

அரசியல் முறை.

Government—What it Means.

ஓர் நாட்டில் குடி ஜனங்களை ஆண்டுவரும் அதிகார வர்க்கத்திற்கு "சர்க்கார்" என்று பெயர். இதையே "கவர்ன்மெண்ட்" என்பர். உலகின்கண்ள தேசங்கள் பல. ஒவ்வொன்றிற்கும் சர்க்கார் இருந்தே தீரும். ஆயினும், அரசியல் முறைகள் வெவ்வேறாயிருக்கும். எவ்வித சர்க்காருக்காயினும் குடி ஜனங்களின் நன்மையை நாடுவதே குறிப்பாம்.

நாகரீகமற்ற பண்டையநாளில் ஜனங்கள் காட்டில் வசித்து வருவர். அக்கூட்டங்களில் பலமுடையவன் எல்லோருக்கும் தலைவனாய் அவர்களுடைய யோக க்ஷேமங்களை விசாரித்துக் காத்து வந்தான். இதுவும், ஓர்வித சர்க்கார் முறையாகும். இப்பொழுதும் இத்தகைய வகுப்பினர்கள் உலகில் இல்லாமற் போகவில்லை. இக்கூட்டங்களே நாளடைவில் கிராமங்களாய், பட்டணங்களாய், நாடுகளாய்ப் பரவின. எண்ணிலும், அறிவிலும், குடி ஜனங்கள் வளர்ச்சி

பெற்று வரவே, தமக்குள் தாம் தருமசீலனைத் தேடி அரசனாய் ஏற்படுத்திக் கொண்டு அவன் ஆணைப்படி நடந்து நலம்பெற்று வந்தனர். ஜனகன், ஸ்ரீராமன், யுதிஷ்டிரன், அசோகன், சந்திரகுப்தன், ஆல்ப்ரெட், அக்பர், கிருஷ்ண தேவராயன், குலோத்துங்கன், இராஜராஜன் இவர்கள் யாவரும் இத்தகைய மன்னர் வகையைச் சேர்ந்தவர்களே.

பின்னே சில நாள்களுக்கு, அரசன் எவ்வளவு தருமசீலனாயினும், நல்லவனாயினும், ராச்சியாதிகாரம் முழுவதும், ஒருவனிடத்திலேயே நிலைகொண்டிருந்தால் இறுதியில் கேடு வந்துறும் என்று குடிமக்கள் அனுபவத்தினா லறியலாயினர். நாளடைவில் அரசனென்பவ னொருவனில்லாமலே ஜனங்கள் தம்முள் தாமே சபைகளாகக் கூடி சர்க்காரை நடத்திக் கொள்வது நலமென்ற எண்ணம் உலகத்தில் பலப்பட்டு வந்தது.

இம்மாறுதலான எண்ணத்திற்கு இந்நாளைய "ஸயாம்" (Siam) நாட்டு நிலைமைகள் சிறிதே உதாரணமாய்க் காண்கின்றன. இஃது நமது பாரத கண்டத்திற்கு தென்கிழக்கிலுள்ள துவீபகல்பமாகும். இந்நாட்டின் விஸ்தீரணம் இரண்டு லக்ஷம் சதுர மைல்களாம். ஜனத்தொகை நாலரைக் கோடி. மன்னன் பெயர் பிரஜாதிபன். அம்மன்னர் மரபில் ஏழாந்தரத்தவன் இம்மன்னன். 1925-ம் வருடத்தில் முடி சூடிய நாளிலிருந்து அரசியல் அதிகார மனைத்

தையும் தன் கையிலேயே யிருத்தி அமைச்சரின் உதவியாய் குடிமக்களுக்கு யாதொரு குறைவும் வராமல் நாட்டை யாண்டு வந்தான். இப்படி யிருந்தும் குடிகள் இருந்திருந்தாற்போல் சென்ற (1932) ஜூன் மாதக் கடைசியில் மன்னனை எதிர்த்து இராச்சியாதிகாரம் முழுவதையும், குடி ஜனங்களுடையதா யிருக்கவேண்டுமென்று பிடிவாதம் செய்தனர். நாட்டு சைனியத்தை தம் வயப்படுத்தித் தமது மன்னனைத் துணையற்றவனாக்கினர்.

இராச்சியாதிகாரம் தம்முடையதாயின் பிரஜாதிபன் சிங்காதனத்திலமர ஆக்ஷேபனையில்லையென்று வெளிப்படுத்தினர்.

இச்செய்கைக்கு ஆத்தானத்துப் புரோகிதர், 1932-ம் வருடம் டிஸெம்பர் மாதம் 10-ந் தேதியன்று பகல் 2 மணி—53 நிமிடங்களுக்கு சுபலக்கினமெனத் தீர்மானித்தனர். அச்சமயத்திற்குச் சரியாய் பிரஜாதிபன் திருமுடி யணிந்து சிங்காதனத்தில் அமர்ந்து அரசியல் அதிகாரம் முழுவதையும் குடி ஜனங்களுள் தலைமை வகித்தவருக்கு ஒப்புவித்ததாக பத்திரத்தையே எழுதி தனது முத்திரையிட்டான். அத்திருமுகத்தைச் சிறியதொரு பொற்றட்டிவிட்டு, அதை மற்றொரு பெரிய பொற்றட்டிவிட்டான். பின்னே மகாராஜன் தனது அரண்மனை உப்பரிகையை யடைந்து உயர்ந்த சாளரத்தில் நின்று, கீழேதிரண்டிருந்த குடி ஜனங்கள் யாவரும்

கேட்கும் வண்ணம் அதைக் காட்டியபடியே வாசித்தான். அத்தருணத்தில் ஆகாயத்தில் விமானங்களை பறக்கவைத்தனர். இருபத்தொரு முறை பீரங்கி வெடி முழக்கி அஃது நாட்டிற்கே சுபசமயமென வெளியிட்டனர். பியாங்காக் (Bangkok) என்ற தலை நகரிலுள்ள தேவாலயங்களின் கோவில் மணிகளெல்லாம் 'டங்', 'டங்' என முழங்கின.

இவ்வியக்கத்தின் திருமுகம் இருந்திருந்தாற் போல் பிறந்ததன்று. குடி ஜனங்கள் சபைகூடி இரண்டு வாரங்கள் நீடித்த ஆலோசனை செய்து இயற்றியதாகும். மன்னர் மன்னன் பௌத்த மதத்தினுய் இருக்கவேண்டுமென்றும், அரசாளர் பௌத்த மதத்தையே காக்கவேண்டுமென்றும், இராச்சியாதிகாரம் குடிகளிடமே இருக்கவேண்டுமென்றும், இவ்வியக்கத்தின் முக்கியாம்சங்கள். இவை குடிகள் பிற மதத்தைப் பின்பற்றினவராயினும் அரசாட்சி வேற்றுமையின்றி எல்லா ஜாதியாரையும், எல்லா மதத்தினரையும், ஒரேவிதமாய் ஆதரிக்கவேண்டு மென்றும் இத்திருமுகத்திலுள்ளதோர் விதியாகும். இனி மேற்பட சர்க்கார் நடத்தும் பெரியவர் கூட்டத்திற்கு "ஸ்டேட் கௌன்ஸில்" (State Council) என்று பெயர். எனில் குடிஜனங்களுடைய பிரதிநிதிகள் கூடிய சபைஎன்று பொருள்படும். இஃது எலெக்ஷன் முறையை யொட்டி நியமிக்கப்படவேண்டி யிருக்குமென்று வேருய்க் கூறவேண்டியதில்லை. இவ்வியக்கத்

தின் திருமுகம் தோன்றி வெளியான பின்பு மகாராஜன் சிங்காதனத்தில் கொலு வமர்ந்தான். குடிகள் அனைவருந் திரண்டு கூடினர். இவ்வியக்கத்திற்கு முயன்றவரான ஐம்பத்து மூன்று தலைவர்கள் சபையிலமர்ந்தனர். இவர்களுள் 15 பேர் நாட்டுப் படையில் அதிகாரம் பெற்றவர். 14 பேர் நாட்டுப் போர்க் கலங்களுக்குத் தலைவர். இருபத்து நான்குபேர் அரசியல் அதிகாரிகள். இவர்கள் அனைவரும் தலைவர்களாய் மன்னன் முன் நின்று மகாராஜனுக்கு பொற்றட்டுகளில் தூபதீபங் காட்டி, மலர்களைத் தூவி, இவ்வியக்கத்தை யியற்றியதில் தாம் செய்துள்ள பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொண்டனர். இத்தருணத்தில் பிரஜாதிபன் திருவாய் மலர்ந்தருளிய மொழிகள் பின்வருமாறு: "இந்நாள் நீவிர் நடந்துகொண்ட தன்மை எனக்குப் பேருவகையைத் தரத்தக்கதாகும். இதற்குக் காரணம் நீங்கள் மன்னிப்பு வேண்டியதன்று. உமது பிழைகளை முன்னுடியே பொறுத்துள்ளோம். நீங்கள் உமது நாட்டின் மேன்மையை அகத்தே யிருத்தி செய்த முயற்சியை முன்னதாகவே அறிந்துள்ளோம். இவ்வியக்கத்திற்கு என்னுலியன்ற வரையிலும் முயன்று உமக்கு உதவியாய் நின்றேன். நாட்டையே மேன்மை யடையச்செய்து இந்நிலைமைக்குக் கொண்டு வருவதில், என் மரபினரும், என் குடும்பத்தவரும் செய்துள்ள நன்மையை மன்னிப்புப் பத்திரத்தில் வெளிப்படையாய் பெயர்க்

கொண்டிருப்பது எமக்கு பரம சந்தோஷத்தை யளிக்கின்றது. 1932-ம் வருடம் ஜூன் மாதம் 24-ந்தேதி நீங்கள் எமக்கு வெளியிட்ட விண்ணப்பத்தில் நாட்டின் நன்மைக்காக யாமும், எம் வம்சத்தவரும் எவ்வித முயற்சியையும் செய்யவில்லை யென்று நிந்தனை செய்திருந்தீர்கள். இது எமக்கும் எமது மரபினர்க்கும் மனது நோவ இடங்கொடுத்திருந்தது. இப்பொழுது நீங்கள் அளித்து நிற்கும் மன்னிப்புப் பத்திரத்தில் இப்பிழைகளைத் திருத்தியுள்ளதனல் எமது மனதின் குறை தீர்ந்தது. இவ்வொழுக்கத்தில் உங்கள் பிழைகளை நீங்களே யறிந்து இம் மகா சபையில் பகிரங்கமாய் ஒப்புக்கொள்வதனல் சமூகத்தில் உமது நடவடிக்கைக்கே ஒழுங்கான நடையையும் உண்மை நிலையையும் அணிகலன்களாய் அமர்ந்து மிக அழகைத் தருவதாகின்றது.''

இக்காலத்திலும் பல நாடுகளில் அரசனென்பவனொருவனிருந்தாலும் ஆட்சி முறையை நிர்ணயிக்கும் அதிகாரம் உடையவர் குடி ஜனங்களே. இங்கிலாந்து தேசத்தில் பிரிடிஷ் அரசாட்சி முறை இதற்கு அடையாளமாகும். பிரிடிஷ் அரசாட்சிக்கே ஜார்ஜு சக்கரவர்த்தி சார்வபௌமனென்று எண்ணிக் கொள்ளப்பட்ட போதிலும், சர்க்கார் விதானத்தை நிர்ணயிப்பது 'பார்லிமெண்டு' சபையாகும். இது குடி ஜனங்கள் தம்முள் தாம் எலெக்ஷன் வழக்கமாய்த் தேர்ந்தெடுத்த பெரியாரின் கூட்டம். இவர்கள்

அப்பொழுதைக் கப்பொழுது சபை கூடி சாம்பிராச்சிய காரிய ஒழுங்குகளை மெஜாரிடி, மைனரிடி நியாயமாய் முடிவு செய்து வருவார்கள். பார்லிமெண்டுக்கு மிஞ்சி நடந்து கொள்வதற்கு சில பாகங்களில் மன்னர் மன்னனுக்கு அதிகாரம் உண்டென்பரெனினும், அதிலேயே சக்கரவர்த்திக்கு மரியாதை யதிகப்படுவதால் அத்தகைய விபரீதத்திற்கு இடங் கொடுப்பது மிக்க அபரூபமானதாகும்: இல்லை யென்றே கூற வேண்டும் போலும்.

அரசனென்ற பெயரில்லாமல் குடிமக்கள் தமக்குத் தாமே ஆண்டு வரும் நாடுகள் மேற் கூறியதை விட மிஞ்சிய பிரிவுக்குச் சேர்ந்தவையாகும். அத்தகைய சம்ஸ்தானங்கள் முந்திய நாட்களில் நமது நாட்டில் இருக்காமற் போகவில்லை. அப்பேர்ப்பட்ட நாடுகளுக்கு "குடியரசு இராச்சியங்கள்" என்று பெயர். ஆங்கில மொழியில் இவற்றை (Republics) "ரிபப்லிக்ஸ்" என்பார்கள். ஐரோப்பாக் கண்டத்தில், பிரான்ஸு, ஸ்விட்ஜர்லாந்து நாடுகளும், அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களும் (United States) இப்பிரிவுக்கு உதாஹரணங்களென்னலாம். இப்படிப் பட்ட இராச்சியங்களில் அரசாட்சியை ஏற்று, நடத்தி வருபவனுக்கு 'ப்ரெஸிடெண்டு' என்று பெயர். இந்த அதிகாரி குடி ஜனங்களால் மூன்று நான்கு வருடங்களுக்கு ஒரு முறை எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப் படுவான். வோட் கொடுக்கும் அதிகாரம் நமது நாட்

டைப்போல் சாசன சபையங்கத்தினர்க்கு மாத்திரம் அல்ல. நாட்டிலுள்ள வோட்டர்கள் எல்லோரும் அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பதைப் போலவே, இந்த ப்ரெஸிடெண்டையும் தேர்ந்தெடுப்பார்கள்.

இருபது வருடங்களுக்கு முன்பு ஆரம்பமான ஐரோப்பா கொடும்போர் முடிந்த பின்பு, பல நாடுகளிலும் குடிஜனங்களுள் அரசனென்ற சொல் இல்லாமலே தத்தம் சர்க்காரைத் தாங்களே நடத்திக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை விரைவில் முதிர்ந்து வருகின்றது. ரஷியா, ஜர்மனி சாம்பிராச்சியங்களும் இச்சமர் முடிந்த பின்பே தமது மன்னர்களை இறக்கி விட்டு இப்புதிய வழக்கத்தைப் பின்பற்றி நடந்து வருகின்றன.

II

சுயராச்சிய முறை.

Swaraj and its Implications.

நமது நாட்டிலும் சுமார் இருபத்தைந்து வருடங்களாய் பல திசைகளிலும் கேட்கப்படும் 'சுயராச்சியம்' என்ற வார்த்தை, இப்புதிய கோரிக்கையை ஜனங்களுக்குள் விரைவில் பரவி வருவதற்கு அறிகுறி. இதன் பொருள் பின்வருமாறு: அதிகாரிகள் யாராயினும் சரி, குடிஜனங்களுடைய சம்மதத்துடன் சர்க்காரை நடத்தும் ஒழுங்கென்பதாம். இதுவே

நாட்டிற்கு சுதந்திரத்தை யுண்டாக்குவதற்கு வேண்டிய சாதனமாகும். சுதந்திரமென்பது ஜனங்களுக்கு மிக உத்தமமான பாக்கியம். சமூகத்தில் இதை அனுபவித்து வரும் ஜனங்களுக்கே இதன் மதிப்பு தெரியும். பிரிட்டிஷ் அரசாட்சி முறையே நமது நாட்டில் மறந்திருந்த இக் கோரிக்கையை பிறப்பிப்பதற்கு மூலமாகின்றது. பிரிட்டிஷ் உறவினுல் நமக்கு உண்டாகிய நன்மைகளில்நாடெங்கும் இச்சுதந்திர எழுச்சி பின்னும் தோன்றிவருவது பெரிய உபகாரமென்றே சொல்லவேண்டும்.

இடுக்கண்களை விடுவித்தல்.

இவ்வளவே யல்ல. இந்நாட்டிற்கு சுயராச்சிய தடத்தை யளித்து இடுக்கண்களை விடுவிக்க வேண்டுமென்பது பிரிட்டிஷ் ஜனங்களுக்குள் உதாரகுணமுடையவர் எண்ணமாகும். இவ்வெண்ணமே பலப்பட்டு பிரிட்டிஷ்காரருடைய சங்கல்பமாக பார்லமெண்டு வாயிலாய் வெளித்தோன்றி பதினேழு வருடங்களாகின்றன. வீணுன சங்கல்பத்துடன் முடியவில்லை. சுயராச்சிய முறைக்கு ஜனங்களைத் தயார் செய்யுந் தீக்ஷையுடன் 1917-ம் வருடத்தில் கவர்னர்ஜனரலாயிருந்த செம்ஸ்பர்ட் பிரபுவும், இந்தியா நாட்டு மந்திரியாயிருந்த மாண்டேக்யு மஹானும், இப் பரத கண்டம் முழுவதையும் சுற்றிப் பார்த்து, தேசியத் தலைவர்களுடன் கலந்து யோசி

த்து, குடி மக்களுடைய சம்மதத்திற்கு உட்பட்ட அரசாட்சி முறையை நிலை நிறுத்துவது அவசரமாமென பார்லமெண்டாருக்கு திருமுகத்தை எழுதி வைத்தனர். கிராம ஜனங்களின் நன்மையை நாடி ஆட்சி முறையில் குடிகளுக்கே சம்பூரண சுதந்திர மிருக்க வேண்டுமென்பது இத்திருமுகத்திலுள்ள முக்கியாம்சமாகும். அதன் பிறகே 1919-ம் வருடத்தில் புதிய 'கவர்ன்மெண்டு ஆப் இந்தியா ஆக்ட்' (Government of India Act) என்பதை வெளியிட்டனர். காலக் கிரமத்தில் படிப்படியாய் குடிமக்களுக்கே உத்திரவாதியாகும் முறையை விளக்க வேண்டுமென்பது இதற்கு முதற் சூத்திரமாகும். முடிவில் சர்க்கார் மேல் அதிகார முடையவர் குடிமக்களே யென்பது இதன் தத்துவம். இதற்கே 'சுயராச்சிய'மென்று பெயர். இப்படிப்பட்ட புதிய முறையில் குடிமக்கள் சமுதாயத்தில், புத்திமான்களும், தைரியவான்களும், தியாக சீலரும், தரும துரைகளாய் விளங்கி வர வர சர்க்கார் நடக்கையும் அவர்களுக்குத் தகுந்தாற் போல் தீர்ந்து வரும்.

முயற்சி முறை.

இப் புதிய ஆக்ட்டை யனுசரித்தே சாம்பிராச்சிய சாசன சபையும், இராஜதானி சாசன சபைகளும் வேறு வேருய் நியமிக்கப்பட்டு பன்னிரண்டு வருடங்களாய் தொண்டியற்றி வருகின்றன. அதற்கு முன் இருந்ததைப்போ லல்லாது குடி ஜனங்களால்

தேர்ந்தெடுக்கப்பட்டவரின் எண்ணை யுயர்த்தியிருக்கின்றனர். இதுவுமல்லாமல், சென்னை கவர்ன்மெண்டைப் போன்ற இராஜதானி அரசாட்சி முறையில், சுகாதாரம், கல்வி, பொருளாதார முயற்சிகள், உள் நாட்டுச் சபைகள் முதலிய குடிகளின் நன்மையை நாடிய காரியப் பிரிவு முழுவதையும் பூரணமாய் அந்தந்த சாசன சபைகளின் மூலமாய் ஜனங்களுடைய சம்மதத்துடன் நடத்திவருவது இச்சாஸனம் பற்றியே. பாதைகளைச் சீர்ப்படுத்தல், பள்ளிக்கூடங்களின் பெருக்கு, நோயாளரின் சிகிச்சைக்கு வேண்டிய வசதிகளின் வளர்ச்சி, நாட்டுப் புறங்களில் வியாபித்து வருவது இம்மாறுதலுக்கு அறிகுறியாகும். இவ்வண்ணம் பதினன்கு வருடங்களாய் குடிகள் சுயராச்சிய முறையில் பயின்று வருகின்றனர். பின்னுமுள்ள இடுக்கண்களைப் போக்கி அரசாட்சியில் குடி ஜனங்களுடைய அதிகாரத்தை பின்னுஞ் சிறிது உயர்த்துவதற்குப் பார்லமெண்டார் தீர்மானித்திருக்கின்றனர். தீர்மானித்ததுடன் முடியவில்லை. லண்டன் மாநகரில், இரண்டு வருடங்களாய் வட்ட மேஜை மஹானடுகள் (Round Table Conferances) மும்முறை கூடியது இக்காரியத்தைக் குறித்துப் பேசி சாதிப்பதற்கேயாகும். நாட்டிற்கே விடுதலையைத் தருவிக்க வேண்டுமென்ற தலைவர்கள் முயற்சிகள்யாவும் திசைகளிலெங்கும் வியாபித்திருக்கின்றன. மற்றொரு புறத்தில் நாட்டுப்புற ஜனங்

களின் கொடிய நிலைமை மனதிற்குத் தோன்றிய பொழுது சுயராச்சிய சுமையைத் தாங்கி நிர்வகிப் பதற்குப் போதிய வல்லமை நமக்குளதாவென்ற பயம் தலைவர் பலருக்கு உள்ளுக்குள்ளே கள வரத்தை யுண்டாக்குகின்றது.

இத்தகைய வல்லமையை பெருக வைப்பதற்கு வழி பின்வருமாறாகும். சமுதாயத்திற்கேயன்றி ஒவ் வொருவரும் அண்டை வீட்டுக்காரனுடைய சுதந் திரத்திற்கு குறைவு வராமல் தன் லாபத்தையும் சிறிதே எதிர்பாராமல் தியாகம் செய்யும் மனதுடன் வாழ்க்கையை நடத்தக் கற்றுக்கொள்வதேயாகும். அவ்வண்ணம் கற்றுக்கொண்டாலன்றி சுதந்திர ருசி யையறிவது குடி ஜனங்களுக்கு இயலாது. "சுதந்தி ரத்தை விரும்புவோர்" என்பது (Lovers of Freedom) பிரிட்டிஷ் ஜனங்களுக்கே ஓர் பெருமையாகும். யான் 1930-ம் வருடத்தில் இங்கிலாந்திற்குச் சென்றிருந்த பொழுது அவர்களுடைய சுதந்திர விருப்பை நேரில் கவனித்து அதன் உட்பொருளை யறியலானேன். ரயில்வண்டிகளிலும், மோடார் பஸ்களிலும் பத்துக் கணக்காய் ஜனங்கள் பிரயாணம் செய்து வருவார் கள். இவ்விடத்தைப்போல் சத்தம் செய்யமாட்டார் கள். ஒருவர் ஒருவருடன் வார்த்தையாட வேண்டு மென்றாலும் "குஸு குஸு" வென்றுதான் வார்த் தையாடுவார்கள். திருவிழாக்களைப் போன்ற ஜனத் திரள்களிலும் அவ்வாறே நடந்துகொள்வார்கள்.

ரயில் ஸ்டேஷன்களிலும் டிக்கெட் வாங்கும் பொழுதும் ஒருவர் பின் ஒருவராய் வரிசையாய் எவ்வளவு பெரியவராயினும் தமது முறைக்காகக் காத்து நிற்பாரேயன்றி, நமது நாட்டைப்போல் டிக்கெட் விற்கும் ஜன்னலண்டையில் கூட்டங் கூட்டமாய் ஒருவரையொருவர் தள்ளிக் கொள்வதாயினும் கூக்குறலிட்டுத் திட்டிக்கொள்வதாயினும் அவர்கள் அறியாததாகும். மதுவிற்கும் கடைகளிலும் இவ்வாறே இருக்கும். இப்படிப்பட்ட விசித்திரமான நடவடிக்கையின் இரகசியம் யாதேனு மிருக்குமோவென்று எனக்குள் யான் யோசிக்கலானேன். ஒவ்வொருவனும் தனது அண்டை வீட்டுக்காரனுக்குத் தன்னால் எவ்விதத் துன்பமும் ஏற்படக் கூடாதென்பதும் அப்படி நடந்தால் அவனுடைய சுதந்திரத்திற்கு குறைவு செய்ததாகவும், அவனுடைய முழு எண்ணம். இவ்வெண்ணமே ஜனங்களுடைய தினசரி வியவகாரங்களில் ஊன்றி வியாபித்து அவர்களுடைய தேச ஒழுக்கமாய் அமர்ந்திருப்பதைக் கண்டேன். இவ்வொழுக்கமே அவர்களுடைய சுதந்திரத்தின் உருவம். ஒவ்வொருவருக்கும், சமூகத்தில் எல்லோருக்கும் இஃது அவர்களுக்கு விலையிலாச் செல்வமாகும்.

நாட்டுப்புறத் துன்பங்கள்.

நமது நாட்டிலோ சாதாரணமாய் சுதந்திரமென்ற சொல்லுக்கு பொருள் இதற்கு நேர் மாறுனதாகும். இந்தியா நாட்டு ஜனத்தொகை 35 கோடி

955

யில் ஏறக்குறைய 30 கோடி ஜனங்கள் குக்கிராமங்களில் வசிப்பவர்கள். குக் கிராமங்களின் முழுத் தொகை 7 லக்ஷங்கள். இவற்றைச் சேர்ந்த சிறு பட்டிகளுடைய எண் 20 லக்ஷங்கள். இராயர் நாட்டுப் பக்கங்களிலோ (Ceded Districts) கிராமம் கிராமத்திற்கு கக்ஷிகள் வியாபித்திருக்கின்றன. கிராமங்களில் தனக்கு மிஞ்சிய பெரியவன் கிடையாதென்று எண்ணப்பட வேண்டு மென்று பலருடைய துராசை. இதைச் சாதித்துக் கொள்ள வேண்டி அப்படிப் பட்டவர்கள் கிராம வாஸிகளின் மனோபாவங்களை ஒடிக்கி வைத்து அவர்களுடைய சுதந்திர புத்தியை மாய்த்துவிட இயற்றும் முயற்சிகள் பல்லாயிரமாகும். கிராம வாஸிகள் ஏழைகள் என்பது யாவரு மறிந்ததே யல்லவா! அவர்களுள் பலவான் ஒருவனிருந்தால் போதும், ஏழைகளைத் தனக்குக் கீழ்ப்படிந்து நடத்திவர முயன்றாலன்றி அக்கிராமத்தில் தனக்குச் சுதந்திரம் இல்லை யென்றே எண்ணுவான். உழவு காலத்தில் ஏழையானவன் தனது வெள்ளாமை வேலை முழுவதையும் விட்டு விட்டு தனது ஏருழும் கருவிகளை யெடுத்துக் கொண்டு மாடுகளையும் ஓட்டிக் கொண்டு போய் அப்பலவானுடைய பூமிகளை உழுது செப்பனிட வேண்டும். சர்க்கார் நிலத்தை (புறம் போக்கை) உழுது கஷ்டப் பட்டு பயிரை வளர்த்த ஏழை வேளாண்மைக்காரன் பலவானுக்கு ஓர் பாகம் பகிர்ந்து கொடுத்தல் தப்பா

ததாகும். பஞ்சாயத்து பிரஸிடெண்டு தெரு விளக்கு களில் சிறந்த தொன்றை தன் வீட்டின் முன் நாட்டி வைத்து ஏற்றிக் கொள்வது அவனுடைய சுதந்திரத் திற்கு குறிப்பாமென எண்ணுவான். அப்படிப் பட்டவன் காட்டு பஞ்சாயத்து சபைக்குப் ப்ரஸி டெண்டாயிருப்பானுகில் காட்டிலுள்ள கட்டைப் புல், தானும், தன் உறவினரும், அவர்களைச் சேர்ந் தவர்களும், எடுத்துக் கொண்டு போய் மிஞ் சியதே—இனி மிஞ்சுவது எங்கே ?—ஏழையினு டையது. இதுவும் அவனுடைய எண்ணத்தில் சுதந் திரமே. கோ-ஆபரேடிவ் ஸொஸைடீகளிலும் இதுவே கதி; ஸெக்ரடரீயோ, ப்ரெஸிடெண்டோ தானுகியும், வேறெவ்விதமாகியும், தமது அக்கரை களை முதலில் தீர்த்துக் கொள்வதற்காகவே ஸொ ஸைடீ தனத்தை உருஞ்சிவிட பார்ப்பார்களேயன்றி ஏழையின் அக்கரை நினைப்பிற்கு வருவது அறிதா கும். அம்மட்டில் துலைந்தால் கொஞ்சம் தேவலையே. ஸொஸைடீயதிகாரி தனது வாபற்றுக்காக ஏழையை ஜாமீந்தாராக உட்படுத்தியோ, அவனையே தனக்காக பத்திரத்தை வரைய வைத்தோ, தன் கடன் சுமை யை அனியாயமாய் அவன்மேல் சுமத்தி தான் தப் பித்துக்கொள்ள முயல்வது நமது கிராமங்களில் அபு ரூபமானதன்று. தமது கௌரவத்தை நிறுத்திக் கொள்ளச் செய்கின்ற கொடுமைகள் 'சிவசிவா' கூற முடியாதவையாகின்றன. கிராமத்திலுள்ள பெரிய

வர்களும் இதுவுமொருவிதமான சுதந்திரமென்று நினைத்திருப்பார்கள். கீழ்ப்படிந்து வராதவனுடைய பசுக்களை பௌண்டிலடைத்தல், அவன்மேல் பொய்க் கேசுகள் சுமற்றல் அவன் ஊரில் கொடுத்திருக்கும் கடன்கள் வசூலாகாத வண்ணம் தடுத்து அழவைத்தல், அவசரமான காலத்தில் கடன்கள் கிடைக்காத வாறு இடுக்கண்களுக் குள்ளாக்குதல், வேளாண்மை வாய்க்கால்களை மடக்கி துன்புறுத்தல், வண்ணான் அம்பட்டன் இவர்கள் வராவண்ணம் தடுத்து அவமானப்படுத்தல், இராக்காலங்களில் திருட்டுத் தனமாய்ப்பயிர்களை அறுத்து எடுத்துக்கொண்டுபோதல், செம்மறியாட்டுக் கூட்டங்களைக் காணமல் ஓட்டிக் கொண்டு போய் விடுதல், ஏற்ற மரங்களை வெட்டி வீழ்த்தல், கிணற்றில் தண்ணீரெடுக்க விடாமல் தடுத்தல், முதலிய இடுக்கண்களில்லாத கிராமங்கள் அரிதாகும். இப்படிப்பட்ட துன்பங்களே ஜனங்களுக் குள் ஓர் புறம் பயமும், மற்றொருபுறம் ரோஷமும் நிறுத்தாற்போல் இடமில்லாது ஆக்கிரமித்து நிற்கும். இப்பேர்ப்பட்ட பயம், ரோஷங்களினிடையே சுதந்திரபாவத்திற்கு இடமெங்கே? இத்தகைய நிலைமைகள் நாட்டிற்கே பவ ரோகத்தைப் போன்றவையாகும். இருந்திருந்தாற் போல் நூறு கிராமங்களை சோதனை செய்து காண்போமாயின் எண்பது கிராமங்கள் இப்படிப்பட்டவை யென்று வெளிப் படையாய்க் கூறலாகும்.

இஃது நிற்க இனி பெண் மக்கள் நிலைமைகளை விசாரிப்போம்: நாட்டில் பாதி பேர் பெண் மக்களே யல்லவா. இவர்களுக்குள்ளே கதிரவனொளியைக் கண்டிராது ஜனனவில் இருப்பவர் எத்தனை பேரோ? குழந்தைப் பருவத்திலேயே கலியாணம் செய்து வயது வருமுன்னரே மாமியார் வீட்டுக்கு அனுப்புவதும், அதனால் பலர் குழந்தையைப் பெறமுடியாமல் மரிப்பதும் நாம் கண்டுவரும் காட்சிகளே யாகும். ஓர் கிராமவாசக் குடும்பத்தில் கணவனிறந்த பெண்கள் படும் துன்பங்கள் விரித்துரைக்க முடியாதவை யாகும். தீண்டப்படாதாரின் கொடுமைகளோ, எண்ணற்றவை யென்பார். வீடுகளில் நாய்கள் கழுதைகள் ஆயினும், நடந்து செல்லலாமேயன்றி பள்ளி பறையர்கள் யென்பார் அடிவைப்பது அமங்களமாகும். அவர்கள் கிணற்றில் தண்ணீரைத் தொடக்கூடாது. அவர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றுக்கொள்ள வரக்கூடாது. இனி நகரவாஸத்திலோ ஹிந்துமகம்மதிய மதவேற்றுமைகளொரு பக்கமும், ஹிந்துமதத்திலேயே குல வேற்றுமைகள் மற்றொரு பக்கமுமாகச் செய்துவரும் கொடுமைகள் சுதந்திரமென்ற எண்ணத்திற்கே பிடி கொடாதவையாகின்றன.

இந்நிலைமைகளைப் போக்கடிப்பதற்கு முயற்சிகள் நடந்து கொண்டே வருகின்றன. பெண்கள் சபைகளாகக் கூடி தமது கொடிய நிலைமைகளைச்

சீர்ப்படுத்திக்கொள்ள முனைந்து வருகின்றனர். தீண்டப் படாதவருடைய இடுக்கண்களைப் போக்கி அவர்களை மனிதர்களாக்கி ஆதரிப்பதற்கு பெரிய பிரயத்தினங்கள் நடந்து வருவது புகழத்தக்கதாகும். இதற்கெனவே மகாத்துமா காந்தியவர்கள் கங்கணங் கட்டிக்கொண்டு திருத்தொண்டியற்றி வருவது நாட்டிற்கே பெரும் பாக்கியமாகின்றது. இக்காரிய முறையும் ஜனங்களுடைய மனதில் அறிவொளியை விளக்கிக் காட்டுகின்றது. இவையாவும் நன்மையேயாகின்றன. ஆயினும் பட்டிக் காட்டு ஜனங்களுடைய துன்பங்களைத் தவிர்ப்ப தெப்படி? இப்பவ ரோகத்திற்கு அஹிம்ஸா தத்துவமேயன்றி வேறொரு மருந்து கிடையாதென்பது மகாத்துமாவுடைய மதமாகும். உலகிற்கே இத்தருமத்தைப் போதித்து நல்வழிப்படுத்த வேண்டியே அவர் தீக்ஷைகொண்டிருக்கின்றார். கிராமமென்றில்லாது, நகரமென்றில்லாது குடிஜனங்கள் ஒவ்வொருவரும் தன்னால் தன் அண்டை வீட்டுக்காரனுக்கு எவ்விதமான கேடு நிகழுமோவென்ற பயத்துடன் தன் எண்ணத்தையும், சொல்லையும், காரியத்தையும், க்ஷணந்தோறும் அடக்கியாளப் பயின்றுவருவதே இதன் குறிப்பாகும். இதுவே சுயராச்சிய லக்ஷ்மி தோன்றி சாட்சியளிக்கச் செய்யும் தவமாகும். இத்துணைத்தவம் ஜனங்களுள் வியாபித்து வரவர அவர்கள் மனக்கூட்டத்தில் மலர்வதே உண்மையான சுதந்திரமாகும். இப் பாக்கியம்

யாரோ வெளியேயிருந்து கொண்டுவந்து வைக்கும் சுயராச்சிய முறையால் வந்து சேராது. குடி ஜனங்களின் மனதுகளில் உண்மையான மாறுதல்கள் ஏற்பட்டாலன்றி இது கைகூடாது. பத்து பேர் நன்மைக்காக தன் லாபத்தைச் சிறிதேனும் விட்டுக் கொடுக்கும் வழக்கம் ஒவ்வொருவரிடத்தும் உண்டானபொழுதே சுதந்திரமென்ற எண்ணம் மனத்தில் தோன்றுவதாகும். இப்பொழுது நாடெங்கும் வியாபித்து தொழிலியற்றிவரும் லோகல் போர்டு (Local Board) களைப் போன்ற உள்நாட்டுக் கூட்டங்கள் இப்படிப்பட்ட வழக்கத்திற்கு பயிற்சி சாலைகளாகின்றன. சுயராச்சிய முறை நாம் நினைத்துக் கொண்டதைவிட முன்னுடியாக விரைவில் வரவிருக்கின்றது. அதைத் தாங்கவேண்டிய வல்லமையைச் சேகரித்துக் கொள்வது இச்சமயத்தில் முதன் முதலாய்ச் செய்ய வேண்டிய வேலையாகும்.

III

ஆட்சி முறை.

Division of Administrative Functions.

சுயராச்சியம் சம்பூர்ணமாய் கிடைத்தபொழுது அதைத் தாங்குவதற்கு வல்லமையை முன்னதாகவே சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட வல்லமை யுண்டாக வேண்டுமெனில் குடிஜனங்களில்

ஒவ்வொருவரும் முதன் முதலாக இந்நாளைய ஆட்சி முறையில் தெரிந்துகொள்ள வேண்டிய தெவ்வளவோ யிருக்கின்றது. எப்படிப்பட்ட சர்க்காராயினும் ஜனங்களின் நன்மைக்கே யென்பதை மறக்கக் கூடாது. சர்க்காரென்பது ஓர் பெரிய இயந்திரம். சுயராச்சிய முறையில் இதை நடத்துவோர் குடி ஜனங்களே. இவ்வியந்திரத்தின் அமைப்பையும், நடக்கும் ஒழுங்கையும், ஜனங்கள் எவ்வளவு தெரிந்து கொண்டு நடந்து வருவார்களோ அவ்வளவுக் கவ்வளவு அச் சர்க்காரும் குடிகளுக்கு நன்மையை விளைவிக்கும். அப்படிக்கின்றி ஜனங்கள், வேண்டா வெறுப்புடன், 'நமக்கென்ன'வென்று கவனியாது காரிய பாகத்தை அதிகாரிகளுக்கே விட்டுவிட்டால், சிறிது காலத்திலேயே அதே சர்க்கார்—சுயராச்சியமாயினும் சரி—குடிகள் நெஞ்சுமீது பெரும் பாறையாய் வெறுப்பை உண்டாக்கிவிடும்.

கேந்திர பிரபுத்துவம்.

எத்தேசத்திலாயினும் ஆட்சிமுறை மூன்று அந்தஸ்து உடையதாக விருக்கும். வெளிப் பகைவரின்றும் நாட்டைக் காத்தல், வாழ்விற்காக புறநாடுகளில் குடியேறி நிற்கும் சுதேசத்தவரின் யோக க்ஷேமங்களை விசாரித்து சீர்ப்படுத்தல், நாட்டில் வாழும் ஜன சமூகத்தில் ஆபத்துகள் சம்பவித்தால் அவற்றைப் போக்கி சுகத்தை யளித்தல், இக்காரியங்களை நிறைவேற்ற வேண்டிய உபாயங்களைத்

தேடுதல், முதலிய காரியமுனைவு மேலணியைச் சேர்ந்த கேந்திர பிரபுத்து (Central Government) வத்தி னுடையதாகும். நமது நாட்டில் இந்தியா கவர்ன்மெண்டென்பது இதுவே. இதற்கு டில்லிநகர் தலைநகரம். கவர்னர் ஜனரல், அவருடைய மந்திரிக் குழாம், சாம்பிராச்சிய சாசன சபையுமே இதற்கு அங்கங்கள். இக்கேந்திர பிரபுத்துவத்திற்கு வேண்டிய வரவு செலவு திட்டங்கள்,இதர காரிய முறைகள் விதிப்பது சாம்பிராச்சிய சாசன சபையேயாகும். அச்சாசனங்களை யனுசரித்துக் காரியங்களை நடத்தி வைக்கும் பொறுப்பும் கவர்னர் ஜனரல், அவருடைய மந்திரிக் கூட்டம் இவருள் அமர்ந்திருக்கும்.

பிரதேச ஆட்சி.

இந்தியாவைப் போன்ற விஸ்தீரணமான தேசத்தை யாளுவதற்கு வெவ்வேறு பிரதேசங்களாகப் பகிர்ந்து, பிரத்தியேகமான அதிகார வர்க்கம் ஏற்பட்டாலன்றி ஆட்சித் தொழிலைச் சாதித்து வருவது இயலாத காரியம். அதற்காகவே இப் பரத கண்டம் சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், வடமேற்கு மாகாணங்களைப் போன்ற பதினான்கு வேவ்வேறு இராஜதானிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ராஜதானிகள் ஒவ்வொன்றுக்கும் ஓர் கவர்னர்,'கியாபினெட்' என்ற மந்திரி வர்க்கம், சாசன சபையுங்கூடி காரியங்களை நடத்தி வருகின்றனர். இத்துணைச் சபைகளுக்கே இராஜ

தானி அரசாட்சி (Provincial Governments) களென்று பெயர். இவர்களியற்றிவரும் காரியபாகமே பிரதேசஅரசாட்சியெனப்படுதலாகும். நமதுசென்னைக் கவர்ன்மெண்டு இந்த இரண்டாம் அணியைச் சேர்ந்ததாகும்.

குடிகளை யாதரித்தல், நியாய பரிசீலனை,கல்விப் பெருக்கு, ஜலாதாரங்கள், வேளாண்மை நெசவு முதலிய கைத்தொழில்களை வளர்த்து குடி ஜனங்கள் பொருள் சம்பாதிக்கத்தகுந்த அனுகூலங்களை யுண்டாக்குவது, பஞ்ச காலத்தில் வேண்டிய உதவிகளைச் செய்தல், குடிகளின் ஆரோக்கியம், போகுவரும் சாலைகளை திருத்தல், உள்நாட்டுச் சண்டைகளை யடக்கி சமாதானத்தை ஏற்படுத்தல், முதலான காரியங்கள் சென்னைக்கவர்ன்மெண்டைப்போன்ற இராஜதானி அரசாட்சிகள் செய்பவையாகும். காரிய ஒழுங்கினைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை யுடையது சாசன சபையே. அவ்வொழுக்கத்தைப் பின்பற்றி வேலைகளைச் செய்வது அதிகார வர்க்கத்தாரே.

உள்நாட்டு சுய ஆட்சி.

இக்காரிய முறையில், கிராமமென்றும் பட்டணமென்று மில்லாமல் தேசமெங்கும் குடி ஜனங்களின் சார்பாகவே அவர்களுடைய நன்மையை நேராகவே கவனித்து வருவதற்கு கவர்ன்மெண்டில் வேறான பிரிவு தனிப்பட ஒன்று உள்ளது. இதையே (Local

Self Government) "லோகல்ஸெல்ப் கவர்ன்மெண்ட் பிரிவு" என்பர். "செல்ப்" என்பதின் பொருள் "சுய" என்பதாகும். ஆட்சி முறையில் ஜனங்களுக்கு சுதந்திரத்திற்கு இடங் கொடுக்கத் தக்கதாயுள்ள தால் "சுய" என்ற பெயர் உரிச் சொல் (adjective)? சேர்க்கப்பட்டுள்ளது. இதையே "லோகல் போர்டு ஆக்டில் "லோகல் கவர்ன்மெண்டு" என்பார்கள். இக்கிளை ஆட்சி முறையில் மூன்ரும்படி யெனவாம்.

IV

சபை முறை.

(Place of Local Boards in the Scheme of Government).

ஜில்லா போர்டுகள், கிராம பஞ்சாயத்து போர்டு கள், முனிஸிபாலிடிகள், ஒவ்வொரு ஊரிலும் நிலை கொண்டு நாமறிந்தவாறு ஜனங்களுக்கு நன்மை யைத் தரும் காரியங்களை நடத்தி வருவது இக்கிளை (இராஜதானி சுய ஆட்சி கிளை)க்கு கீழ்ப்படிந்ததே யாகும். லோகல் போர்டுஆக்டு (Local Boards Act) முனிஸிபாலிடி ஆக்டு (Municipality Act) என்ற இரண்டு சட்டங்களும் இத்தகைய உள்நாட்டுக் கூட் டங்களை நியமிக்கும் விதியையும், காரிய முறையையும் விதிப்பவையாகும். இவற்றைப் போன்ற சட்டங்கள் பொம்பாய் வங்காளத்தைப் போன்ற மற்ற இராஜ

தானிகளிலும் வழக்கத்திலிருக்கின்றன. மற்ற எந்த நாட்டு அரசியல் முறையிலுமாயினும்—நாளைக்கே நமது நாட்டிற்கு சுயராச்சியம் கிடைத்தபோதிலும்—இத்துணைச் சட்டங்கள் இல்லாது வேலை நடவாது.

சபையியல்.

அந்தந்த இடங்களிலுள்ள குடி ஜனங்கள், ஆங்காங்கு கூடி, ஏற்ற வழியில் சமூகத்திற்கு நன்மை யளிப்பது இன்னதென்று திட்டப்படுத்திக் கொண்டு சுதந்திரத்துடன் நடந்து கொள்ளக் கற்க வேண்டு மென்பதே இச்சட்டங்களுடைய முக்கியமான விதியாகும். முன்னே நாளடைவில் நாட்டிற்குச் சம்பூரண சுயராச்சியம் கிடைத்து சுதந்திரம் உண்டான பொழுது ஜனங்கள் இச்சுமையைத்தாங்க வேண்டிய வல்லமையை யுண்டாக்குவதற்காகவே இந்த உள்நாட்டுக் கூட்டங்களின் தோற்றமாகும். எக்காரியத்தைச் செய்ய வேண்டிய போதிலும் வல்லமை, அறிவு, இவை பயிற்சியினாலேயே வரக்கூடியவையாகின்றன. இத்துணைச் சபைகள் நமக்கு நூதனமானவையன்று. ஆயிரம் வருடங்களாக அந்தந்த கிராமங்களிலுள்ள ஜனங்கள் சமூகத்தில் தத்தம் நன்மைகளை நாடி தெரிந்து சுதந்திரமாய்க் காரியங்களை நிறைவேற்றி வந்தனர். அந்நாளைய மணியக்காரர், கணக்கப் பிள்ளைகள் கிராமத்தில் பெரியவர் கூட்டத்திற்கு (அந்நாளைய கிராம பஞ்சாயத்து சபைகளுக்கு)க் கீழ்ப்படிந்து நடந்து வந்தனர். இப்பொ

முறைப் போல் தாலூக்கா தாசீல்தார்கள் குடியானவரை ஏளனமாகக் கருதுபவர் அல்லர். காரிய ஒழுங்கில் அதிகாரத்தை வேறு வேருக்கி யோக்கியதைக்குத் தக்கவாறு உத்தியோகஸ்தரை உத்திரவாதிகளாகச் செய்து வந்தால் மேல் விசாரணை இலகுவாகு மென்பது இந்நாளைய சர்க்கார் அதிகாரிகளின் எண்ணம். இவ்வெண்ணத்தை யனுசரித்து மணியக்காரர் கணக்கப்பிள்ளைகளுக்கு கிராமாதிகாரிகளென்று பெயரளித்து தாலூக்கா உத்தியோகஸ்தர் கௌரவித்து வருவார்கள். இக்காரணத்தினுல் குடியானவர்க்கு கௌரவமே குறைந்து விட்டது. நாட்டுப்புற ஜனங்களுடைய முந்திய சுதந்திரம் மறைவதற்கு மூலகாரணமும் அஃதேயாகும். இச் சுதந்திர பாவத்தை பின்னும் உயிர்பெறச் செய்து அதன் வாயிலாய் நாட்டிற்கே விடுதலையளிக்கவேண்டுமென்பது அரசியல் முறையில் தற்காலம் நிகழ்கின்ற மாறுதல்களின் குறிப்பாகும். இக்குறிப்பிற்குத் தகுந்தாற்போல் ஜனங்கள் அறிவுடையவர்களாய் முனைந்தாலன்றி அரசாங்கத்தவரும், காங்கிரெஸ்க்காரரும், நாட்டிற்கே சுயராச்சியத்தையளிக்கவேண்டுமென்று முயன்றுவருவது பயனற்றதாவதுடன், கேட்டிற்கே மூலமாகும்.

சர்க்கார், ஜனங்களின் நன்மைக்காகவே ஏற்பட்டிருக்கும் ஓர் பெரிய இயந்திரமென்றேன். லோகல் போர்டுகள், முனிஸிபாலிடிகள் என்ற உள்

நாட்டுக் கூட்டங்களும் அத்தகைய சிறிய சிறிய இயந்திரங்களேயாகும். நாட்டுப்புறத்து ஜனங்கள் அவற்றின் இடர்களை யறிந்து அவற்றை நடத்தக் கற்று வர வர நாளடைவில் சர்க்காரையே நடத்துவிக்கும் வல்லமையைப் பெறுவார்கள். முதன் முதலாய் இச் சிறிய இயந்திரங்களிலுள்ள இடர்களை வெளிப்படுத்தி நாட்டுப்புற மாந்தரின் கண்களைத் திறக்கவைப்பதற்கே யான் இப்புத்தகத்தை எழுத முதலிட்டது.

லோகல் போர்டு ஆக்டு.

லோகல் போர்டு ஆக்டு, முனிஸிபாலிடி ஆக்டு இவ்விரண்டும் நடத்தும் காரிய ஒழுங்கு முழுவதும் ஒன்றேயாகும். திருச்சி, மதுரை, காக்கினடாவைப் போன்ற பட்டணங்களுக்கு மாத்திரமே முனிஸிபாலிடி ஆக்டு உதவி வரும். பத்தாயிரம் ஜனத் தொகைக்கு உயர்ந்த நகரங்கள் முனிஸி பாலிட்டிகளாய் ஏற்படுவதற்குத் தகுந்தவை என்பது சாமானியமாய் அறியலாம். இவ்விரண்டு ஆக்டுகளையும் ஏற்படுத்தியது சென்னை சாசன சபையாகும். அச் சபையிலுள்ள மெம்பர்கள் நாட்டுப்புற ஜனங்களால் எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. ஆனது பற்றி இவ்விரண்டும் குடிமக்களுடைய சம்மதத்தினுல் விதிக்கப்பட்டவையாகின்றன.

இவ்விரண்டில் லோகல் போர்டு ஆக்டென்பது நகரங்களல்லாத நாட்டுப்புரங்களைச் சார்ந்ததாகும். இதனுள்ளே இருக்குங் உட்பொருளை இதை வாசிப்

போர்கள் அறிவார்களாகில் எத்தனை விதமாய் முயன்றால் சமூகத்தில் ஜனங்களுக்கு மேன்மையான நன்மைகளை யளிக்கக் கூடுமென்பதை யுணரலாம். அவ்வாறு உணர்ச்சி பெறுவிடில் இச்சபைகள் (லோகல் போர்டுகள்) கிராமத்துககக்ஷி வீரியங்களுக்கு உட்பட்டு சித்திர விசித்திரமான கேடுகளுக்கு மூலமாகுமென்பதை அனுபவத்தினால் அறியாதவர்கள் அரிதே. ஆதலால் இந்த ஆக்டின் மூலதத்துவத்தை சிறிய வார்த்தைகளினால் விளக்கிக் காட்டுகின்றேன்.

நாட்டின் விரிவின் நியமம்.

இச்சபைகள், கிராம பஞ்சாயத்து, ஜில்லா போர்டுகள் என்ற பெயர் கொண்டு இரண்டு வகுப்புகளாய் நாடெங்கும் வியாபித்து நிற்பதை ஜனங்களறிவார்கள். அவ்வவ்விடங்களிலுள்ள ஜனங்கள் அவ்வவ் விடங்களுக்குவேண்டிய அனுகூலங்களை தாமாகவே தமக்கு இசைந்தாற்போல, சுதந்திரமாய் திடப்படுத்திக் கொண்டு சாதித்துக்கொள்ளவேண்டுமென்பதே இச்சபைகளின் இயற்றத்திற்குக்குறிப்பு.

ஒவ்வொரு சிறிய ரெவின்யூ கிராமத்திற்கும் சிறிய சபை யொன்று கிராம பஞ்சாயத்து சபையென்ற பெயருடன் நிலை கொண்டிருப்பது சாமானியமாய் அறியக்கூடியதே. [செ. 6. (1)] ஒன்றைவிட அதிகப்பட்ட கிராமங்களைக் குறித்து முழு விஸ்தீரணத்தை பஞ்சாயத்துக்குச் சேர்ந்தவிடங்களாக அதிகப்படுத்துவதற்கும், அவ்வாறே புதியதாய்க்

கூடிய கிராமங்களை சமயத்திற்குத் தகுந்தவாறு எடுத்து விட்டு விரிவின் அளவைக் குறைப்பதற்கும் வழியுண்டு (செ. 5).

கிராம பஞ்சாயத்து சபைக்கு, அதன் விஸ்தீரணத்தையும், ஜனத் தொகையையும் அனுசரித்து 8 முதல் 14 வரையிலும் மெம்பர்கள் உள்பட எந்த போர்டுக்காகினும், இத்தனை பேரே மெம்பர்களிருக்க வேண்டுமென்னும் அதிகாரம் லோகல் கவர்ன்மெண்டாருடையது. அந்தந்த போர்டார் சமயத்திற்கேற்றபடி இவ்வெண்ணை மாற்றிக் கொள்வதற்கு இடமிருக்கின்றது. அத்தகைய மாறுதல்களைக் குறித்து முதலாகவே அந்தந்த போர்டார் தீர்மானஞ் செய்த பிறகு லோகல் கவர்ன்மெண்டார் சம்மதிக்க வேண்டும். (செ. 10).

எச்சபைக்காயினும் (லோகல் போர்டு) மெம்பர்கள் எலெக்ஷன் மூலமாகவே விதித்தவாறு (5-ம் அத்தியாயத்தில் காட்டியபடி) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவராவர். (செ. 6.)

எலெக்ஷன்கள்.

முன்னாளைய நாமினேஷன் வழக்கம் மறைந்தது. தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை யுடையவர்கள் அவ்வவ்விடங்களிலுள்ளவோட்டர்களே.பறையர், பள்ளிகளைப் போன்ற தீண்டப்படாதார் வகுப்பைச் சேர்ந்தவராயினும் தமக்காகவே பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்ட (reserved) இடங்களென்றிருக்காமல் எல்

லோருடனும்கூடி நின்று எலெக்ஷனில் போராட லாம். ரிஜர்வு (reserve) இடங்களுக்காயினும், சாமானிய இடங்களுக்காயினும், அவரிவரென்றில்லாது பட்டிகையில் காணப்படும், வோட்டர்கள்யாராயினும் தம் "வோட்டை" இஷ்டப்பட்ட காண்டிடேட்டுக்குக் கொடுக்க சுதந்திரப்பட்டவராவர். ரிஜர்வு இடங்களுக்கு நிற்கும் காண்டிடேட்டுகளுக்கு அவ்வக் குலத்தவரேயன்றிபிறர் யாரும் "வோட்" கொடுக்கக் கூடாதென்ற நிற்பந்தமும் கிடையாது. [செ. 47 (3)]

எலெக்ஷன் வேலைகளுக்காக டிஸ்டிரிக்டுபோர்டு விஸ்தீரணம் முழுவதும் டிவிஷன்களாகவும் சர்கில் களாகவும் பகுக்கப்படவேண்டும். (செ. 47) எந்த எந்த பிரிவுக்கு எத்தனை எத்தனை இடங்களைத் தனிமைப் படுத்த வேண்டுமோ (Reserve) அத்தகைய விடங் களில் எந்த எந்த மரபினர்க்கு எத்தனை எத்தனை இடங்கள் நிலைவிக்கப்படவேண்டுமோ, அதை டிஸ்ட் ரிக்ட் போர்டாருடன் கலந்து ஆலோசித்து லோகல் கவர்ன்மெண்டார் தீர்மானிப்பார்கள். (செ. 47).

எந்த எந்த வளையங்கள் (Circles) ரிஜர்வு இடங் களாகயிருக்கவேண்டுமோ, அவற்றிற்கு ஒன்றேஒன் றிற்கு மேலானவையாகவோ சாமானிய இடங்கள் நிர்ணயிக்கப்படும். எஞ்சிய பிரிவுகள் ஒவ்வொன் றும், ஒவ்வோர் இடத்திற்குமேற்பட்டதாக இருக்கக் கூடாது. பகுதிகள் தொகையில் எண்ணில் மாறு தல்கள் உண்டாக வேண்டுமெனில் அத்தகைய மாறு

தல் முன்வரும் எலெக்ஷன் காலத்திலல்லாது இடையில் வழக்கத்திற்கு வரக்கூடாதென்று கெஜிட்டில் பிரசுரம் செய்ய லோகல் கவர்ன்மெண்டுக்காரருக்கு அதிகாரம் உண்டு.

இத்தகைய மாறுதலுக்குத் தகுந்தவாறு எந்த புதிய பகுதிக்கு இருப்பவர்களில் எந்த மெம்பர் பிரதிநிதியாய் இருக்கவேண்டுமென்பதையும், அல்லது புதிதாக எலெக்ஷன் நடத்துவிப்பதற்கும் லோகல் கவர்ன்மெண்டார் தீர்மானிப்பார்கள். (செ. 47.) கிராம பஞ்சாயத்து போர்டுகளை வார்டுகளாக பகுப்பதற்கும், அத்தகைய பகுதிகளில் எந்த எந்த வகையார்க்கு எத்தனை எத்தனை ரிஜர்வு ஸ்தானங்கள் என்பதையும் அவரவர் ஜனத்தொகைக்கு வலுவிற்குத் தகுந்தவாறு நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். சாமானிய வளையங்களின் எண்ணை நிலைப்படுத்த மேற் கூறியுள்ள சூத்திரங்களே பயன்படுவன. (செ. 47—49.)

இவ்வுள்நாட்டுச் சபைகளில் அவரிவரென்றில்லாது, பெண்களுக்கும், கீழ்ச்சாதியாரைச் சேர்ந்த பள்ளி பறையர்களுக்கும் மெம்பர்களாக முன்னுக்கு வர அனுகூலம் ஏற்படுத்தப்பட்டிருப்பது இந்த ஆக்டு விதித்துள்ள புதிய தருமமாகும். சாமானிய எலெக்ஷனில் இத்தகையோர் மேல் கிளம்பமாட்டாரென்பது இந்த புதிய முறைக்குக் காரணமாகும். தேசீய தலைவர்களின் கொள்கையும் இதுவேயாகும்.

இதைக்கொண்டே ஓர் கிராமபஞ்சாயத்து முழுத் தொகையில் நாலில் ஒரு பங்குக்கு மீறாத இடங்களை அத்தகையோருக்கு 'ரிஜர்வு' செய்யும் அதிகாரம் லோகல் கவர்ன்மெண்டாருக்கு உண்டு. மகம்மதீயருக்கும், சுதேச கிருஸ்தவருக்கும், தீண்டப்படாதாருக்கும், பெண்களுக்கும், சில இடங்களைப் பிரத்தியேகப்படுத்தும் அதிகாரமும் அவருடையதேயாகும். ஜில்லா போர்டு எண்ணிலும் அவ்வண்ணமே மகம்மதியர், சுதேச கிருஸ்தவர், தீண்டப்படாதார், பெண்களேயன்றி ஐரோப்பியருக்கும், நமது நாட்டு வாசிகளாய வெள்ளைக்காரருக்கும், சில இடங்களை பிரத்யேகப்படுத்த ஏற்படுத்த அனுகூலமிருக்கின்றது. ஆயினும் இவ்வண்ணம் ரிஜர்வு செய்யவேண்டிய எண் அந்த அந்த போர்டின் முழுத்தொகையில் நாலில் ஒரு பாகத்திற்கு மிஞ்சக்கூடாது. அந்தந்த ஜாதியின் ஜனத் தொகையைக் குறித்தும், அவர்களுடைய முன்னேற்றத்தைப் பற்றியும், 'ரிஜர்வு' இடங்களை பின்னும் அவ்வச் சாதியாருக்கு பிரத்தியேகமாய் பகிர்ந்து கொடுக்கும் அதிகாரம் லோகல் கவர்ன்மெண்டாருடையது. (செ. 9). இத்தகைய சீர்திருத்தங்கள் ஒவ்வொன்றும் கிரமமாய் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டாலன்றி அமுலுக்குவரா. (செ. 215)

இம் முறையில் ரிஜர்வு இடங்களுக் குரிமையானவர் சாதாரண எலெக்ஷனில் காண்டிடேட்டுகளாக நின்று பிறருடன் போட்டி செய்யக் கூடாதென்ப

தல்ல. [செ. 9 (7)]ஓர் பஞ்சாயத்து சபைக்கு லோகல் கவர்ன்மெண்டார் மெம்பர்களின் எண்ணை பன்னிரண்டெனத் தீர்மானித் திருக்கின்ருர்களென் றெண்ணிக்கொள்வோம். அதில் நாலிலொரு பங்கை—மூன்று இடங்களை—கீழ்ச்சாதியார் தமக்கென்று உரிமைப் படுத்திக்கொள்வர். சாமானிய எலெக்ஷன் வரும்பொழுது பன்னிரண்டு இடங்களுக்கு எத்தனை பேராகிலும் காண்டிடேட்டுகளாக நிற்கலாமல்லவா? அத்தகை ரிஜர்வு இடங்களுக்கு அவர்களுக்குள் ஐந்து அல்லது ஆறுபேர் நிற்பராகில் அவர்களுக்குள் அதிகப்பட வோட்டுகள் சம்பாதித்த மூவர் மாத்திரம் மெம்பர்களாக எண்ணப்படுவார்கள். மிகுதியானவர்களின் வோட்டுகளை யனுசரித்து எவரெவர் வெற்றி பெற்ருரென்பது (கீழ்ச்சாதியா ராயினும் சரி) தீர்மானிக்கப்படும்.

காலாவதி.

எலெக்ஷனில் ஜயித்து வந்த ஒவ்வொரு மெம்பரும் மூன்று வருடங்கள் மாத்திரம் அந்த இடத்திலிருப்பார். (செ. 11). இது நவம்பர் ஒன்ருந் தேதியுடன் முடிவதாகும். இவ்வண்ணம் காலம் முடிந்து வந்ததனுல் படும் காலி இடத்திற்கு சாமானிய காலியிடம் (Ordinary Vacancy) என்று பெயர். [செ. 3 (13. எ)]. இந்த காலியிடம் நிறையவேண்டுமாயின், அந்தந்த ஆகஸ்டு, ஸெப்டெம்பர் மாதங்களில் முதன் முதலாக எலெக்ஷன்கள் நடைபெற

வேண்டும். ஏற்ற காரணங்களைக்கொண்டு செப்டெம்பர் மாதத்திற்குப் பின்னுடியேனும், அத்தகைய எலெக்ஷன் நடக்குமாறு நியமிப்பதற்கு லோகல் கவர்ன்மெண்டார் அதிகாரிகள். அவ்வண்ணம் தாமதப்பட்டு எலெக்ஷன் நடந்தபொழுது, ஜயித்த மெம்பர் உடனே தன் இடத்திற்கு வாலாமாயினும், மற்றவர்களுடன் மூன்று வருடங்கள் காலம் தனக்கு முடியாதபோதிலும் நவம்பர் முதல் தேதிக்கே அவருடைய இடமும் காலியாக வேண்டியதே. [செ.11-ஏ(3)].

மூன்று வருடங்கள் முடிவதனுல் உண்டாகும் காலி விடங்களேயன்றி, மெம்பர் இறந்ததனுலாவது, ராஜீனுமா கொடுத்து விட்டதனுலாவது, அபராதியாய் ஆறுமாதங்களுக்கு மேற்பட்ட காலம் சிக்ஷிக்கப் பட்டாலாவது, மீடிங்குகளுக்கு வராமல் அலக்ஷியமாயிருந்தாலாவது, அத்தகைய மெம்பருடைய வேலையுங் காலியாவதுண்டு. இத்தகைய காலி இடங்களுக்கு ஹங்காமி காலி (Casual Vacancy) என்று பெயர். [செ 3. (5. எ)]. இதற்கு மெம்பரை ஏற்படுத்துவதற்கும் எலெக்ஷன் விதிகளை யனுசரித்து வரவேண்டியதே முறை. அத்துணை எலெக்ஷனில் முன்வரும் மெம்பர், மூன்று வருடங்கள் கெடுவு தனக்கு முடியாத போதிலும், மற்றவர்களுடன் நவம்பர் முதல் தேதிக்கே தனது நிலையிலிருக்கக் கூடும். இத்தகைய காலி இடங்கள், நவம்பர் முதல் தேதிக்கு மூன்று மாதங்களுள் ஏற்படும் பக்ஷத்தில் அத்தகைய காலியிடத்தை

நிறப்ப வேண்டி பிரத்தியேகமாய் எலெக்ஷன் நடக்கக் கூடாதென்பது விதியாகும். (செ. 11)

ஓர் வேளை ஏதாவது பிரமாதமான காரணத்தினல் எண்ணிக் கொண்ட எலெக்ஷன் நின்று விடக்கூடும். அச்சமயத்தில் மற்றொரு எலெக்ஷன் அதிகாரிகளே நடத்துபவர்கள். இரண்டாவது முறையும் அவ்வண்ணமே எலெக்ஷன் நடவாது தடை ஏற்பட்டால், அந்த போர்டு மெம்பர்களே மீடிங்கில் வெளியாரில் யாரையேனும், தகுந்தவரைத் தேடி தம்முள் தாம் எடுத்துக் கொள்வதற்கு சுதந்திரப்பட்டவராவர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாயிருந்த போதிலும், மிகுந்தவருடன் நவம்பர் 1-ம் தேதிக்கு தமது பதவியை விட்டுவிட வேண்டியதே. (செ. 11).

ஒவ்வொரு போர்டுக்கும், எனில் கிராம பஞ்சாயத்து, ஜில்லா போர்டு, எதிலாகிலும், மெம்பர்களில் ஒருவரை ப்ரெஸிடெண்டாகவும், மற்றொருவரை வைஸ் ப்ரெஸிடெண்டாகவும், தம்மில் தாமே எலெக்ஷன் மூலமாக நியமித்துக் கொள்ள வேண்டியது இக்காலத்து விதி (செ. 12). இவ்வழக்கத்தைவிட போர்டு பிரதேசத்தில் உள்ள வோட்டர்கள் யாவரும் கலந்து ப்ரெஸிடெண்டையும், வைஸ் ப்ரெஸிடெண்டையும் தேர்ந்தெடுத்துக் கொள்வது மிகவும் உத்தமமான மார்க்கமாகும். அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் (United States) வோட்டர்கள் யாவரும் தத்

தம் பிரெஸிடெண்டை இவ்வண்ணமே தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்.

ப்ரேஸிடேண்டு, வைஸ் ப்ரேஸிடேண்டு.

மேற்கூறியவாறு, அந்தந்த இடங்களுக்கு, ப்ரெஸிடெண்டு, வைஸ் ப்ரெஸிடெண்டுகளையும், தேர்ந்தெடுத்துக் கொண்ட பொழுதே, அது ஒரு போர்டு என்று எண்ணிக் கொள்ளப்படுவது. முசிரி பஞ்சாயத்து போர்டு என்றும், மதுரை ஜில்லா போர்டு என்றும், அவ்வவ்விடங்களுக்கு இசைந்தாற் போல் லோகல் கவர்ன்மெண்டார் இட்ட பெயருடன் [செ. 4 (2). (a), 5 (1)] அவ்வச் சபைகள், வேலை நடத்திவரும். பழைய மெம்பர்கள் போனாலும், புதிய மெம்பர்கள் வந்தாலும், சபை குறைவின்றி நிலையாய் நிற்கும். ஒவ்வொரு போர்டுக்கும் சமூகத்தில் முத்திரை யொன்று இருந்தே தீரவேண்டும். போர்டு வேலைகளை நடத்துவதற்கு மற்றவர்களுடனுகிலும், கண்டிராக்டர்களுடனுகிலும் உடன்படிக்கை செய்து கொள்ளவும், அந்த போர்டுக்கே அதிகாரமிருக்கின்றது. அசையாப் பொருளெனினும், அசையும் பொருளெனினும், சம்பாதித்துக் கொள்ளும் அதிகாரமும் போர்டினுடையதே. காரிய நடையில் நியாய ஸ்தானங்களேரி வியவகாரங்களை ஆரம்பிப்பதற்கும், அல்லது தம்மேல் தாகல் செய்யப்பட்ட வியாஜ்ஜியங்களை எதிர்ப்பதற்கும் சுதந்திரமும் போர்டாருடையதே. ஆயினும் இத்தகைய வேலைகளில்

லோகல் கவர்ன்மெண்டுக்காரர் நியமிக்கும் விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொள்ளவேண்டுமென்பதும் விதி. [செ. 6. (3)]

போர்டுடைய காரிய நிலையில் ப்ரெஸிடெண்டுக்கே விதிக்கப்பட்டுள்ள வேலைகள் சில பிரத்தியேகமாயிருக்கின்றன. அந்த வேலைகளில் போர்டார் நுழையலாகாதென்பதும் 'ரூலா'கின்றது. அவ்வண்ணமே போர்டு வேலைகளிலும் ப்ரெஸிடெண்டு நுழையலாகாதென்பதும் சாதாரணமாயறியக்கூடியதேயாகும்.

யாதேனும் ஓர் கிராமத்திற்கு பிரத்தியேகமான போர்டு ஏற்படாத பக்ஷத்தில், அவ்விடத்தில் நடக்க வேண்டிய வேலைகளனைத்தும் ஜில்லா போர்டார்களால் செய்யப்படவேண்டியவையேயாகும். கிராம போர்டு பிரெஸிடெண்டு அதிகாரம் முழுவதும் ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டினுடையதாகவேயிருக்கும்.

அத்தகைய கிராமங்களிலிருந்து வசூலாகும் வரும்படி முழுவதும் ஜில்லா போர்டுக்காரருக்கு சேர வேண்டியதே. (செ. 6.)

நாடு முழுவதும் கிராமங்களால் நிறைந்திருக்கின்றனவென்றோம். கிராமம் ஒவ்வொன்றும் நல்ல நிலைமைக்கு வந்தாலன்றி நாடு முழுவதும் நற்கெதி பெறுதென்பதை இதை வாசிப்போர் மறந்துவிடலாகாது. கிராமங்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு

வரவேண்டுமென்ற அந்தந்த ஊர்க்காரரே, அக்கரையுடையவர்களாய், முனைந்து நிற்கக் கற்ருலன்றி வளர்ச்சிக்கு வேறு வழி கிடையாதென்பதையும் நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும். காரியபாரம் மேல்விழுந்தாலன்றி இப்படிப்பட்ட அக்கரை ஜனங்களிடம் தோன்றுவதற்கு சமயம் ஏற்படாது. இத்துடன் முடியவில்லை. சமூகத்தில் அண்டை அயலாருடைய நன்மையை நாடி சுகமாய் காலந்தள்ளுவதற்கு இச்சபைகளே பள்ளிக்கூடங்களாய் விளங்குகின்றன. இத்தகைய தூய்மையான வாழ்வு, ஆண்களென்றும், பெண்களென்றும், தீண்டப்படாதரென்றும் இல்லாமல் எல்லோருக்கும் லபிக்கும்படி செய்ய வேண்டியது நமது கடமையே. இத்தகைய அக்கரை அகன்றும் ஆழமாயும் கிராமம் கிராமமாய்ப் பாய்ந்து வியாபித்து விழுது வேரூன்றி மேலே மலர்வதே சுயராஜ்யம்.

V

தேர்ந்தெடுக்கும் முறை.

The Election System.

சர்க்காரை நடத்திக்கொள்வதில் அதிகாரம் குடிகளுடையதாய் இருக்கவேண்டுமென்பது சுயராச்சிய முறைக்கு லக்ஷணமென்று காட்டினேம். நம் நாட்டின் ஜனத்தொகை முப்பத்தைந்து கோடிகளாகும்.

இத்தனை பெயருக்கும் அதிகார முழுவதையும் இணைத்து வைக்க முடியுமா? ஆனது பற்றியே நாடெங்கும் குடிகளுடைய சபைகள் பிரிவுகளாய் வியாபித்திருப்பது. சாம்பிராச்சிய சாசன சபை, சென்னை சாசன சபையைப் போன்ற இராஜதானி சாசன சபை, அவற்றின்கீழ் முனிஸிப்பாலிடிகள், டிஸ்டிரிக்ட் போர்டு, கிராமபஞ்சாயத்துக்களைப் போன்ற உள் நாட்டுச் சபைகள், இவற்றிலெல்லா வற்றிலும், மெம்பர்களாயிருந்து வேலை செய்து வருபவர்கள் ஜனங்களால் எலெக்ஷன்களில் தேர்ந்தெடுக்கப்பட்டதலைவர்களே. அந்தந்தச் சபைகளுக்கு அத்துணைத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும், காரிய முறைக்கே 'எலெக்ஷன்' என்று பெயர். இது ஆங்கில மொழி. "தேர்ந்தெடுத்தல்" என்பது இதன் பொருள். ஆதல்பற்றியே இவ்வத்தியாயத்திற்கு "தேர்ந்தெடுக்கும் முறை"யென்று பெயரிடப்பட்டது.

எலெக்ஷன்கள் நாடெங்கும் பன்முறை நடந்து வருவதைக் காணுதவரரிதே. சாம்பிராச்சிய சாசன சபை முதல், பஞ்சாயத்து போர்டு வரையிலும், எச் சபைக்காயினும் எலெக்ஷன் முறை சாமானியமாய் ஒன்றேயாகும். எச்சபைக்கு எலெக்ஷன் நடக்க வேண்டி யிருந்தாலும், அது நடைபெருங் காலம் அதிகாரி முதன் முதலாய் வெளியிடுவார். அத்தகைய எலெக்ஷனில் யார்தான் மெம்பராய் இருக்க விரும்பி முன்நிற்கின்ருனே அவனையே 'கியாண்டிடேட்'

என்பது. 'வரன்' 'இச்சைகொண்டவன்' என்றும் நாம் பொருள் கூறலாம்.

எலெக்ஷன்.

ஓர் எலெக்ஷனில் கியாண்டிடேட்டாக முன் நிற்கவிரும்புவோன், தனது விருப்பத்தை எழுத்து மூலமாய் வெளியிடவேண்டியது முக்கிய விதியாம். இதற்கு காகிதம் அச்சடித்த பாரமாகும். (Form) எந்த வோட்டராயினும் இந்த காகிதத்தை சிலவில்லாமல் கேட்டு வாங்கிக்கொள்ள உரிமையுடையவனுயிருக்கின்முன். இதையே 'நாமினேஷன் பேபர்' என்பார்கள். தான் எந்த இடத்திற்கோ, அல்லது வார்டுக்கோ நிற்க விரும்பியதையும், அதில் குறிப்பிடவேண்டும். நிற்க விரும்பும் எந்த காண்டிடேட்டையும் முதலாக பெயரை நியமிக்க ஒருவனும், ஆமோதிக்க மற்றொருவனும் முன்வந்து இக்காகிதத்தில் கையெழுத்திட்டாலன்றி இது செல்லாது. 'ப்ரொபோஸர்' 'ஸெகண்டர்' என்பது இவ்விருவரேயாகும். அதன்பிறகே அக்காகிதத்தில் காண்டிடேட்டுடைய கையொப்பம் வேண்டி யிருக்கின்றது. இம்மூவரும் வோட்டர்களாயிருக்கவேண்டியது சரியேயல்லவா; ஒவ்வொருவரும், வோட்டர்கள் பட்டிகையில் தமக்குள்ள வரிசை எண்ணை தம் பெயர்களுக்குச் சரியாய் கண்டுபிடித்துக் கொள்ளவேண்டும். ஒரே இடத்திற்கு எத்தனை காண்டிடேட்டுகளாகிலும் போட்டியாக நின்று போராடுவதற்கும் உரிமையுள்ளவர்களே.

தாக்கல்.

இந்த நாமினேஷன் காகிதங்களை எலெக்ஷன் ஆபீஸரிடம் தாக்கல் செய்வதற்காகவே ஓர் நாளை நியமிப்பார்கள். அந்நாளும் வேளையும் மிஞ்சிவிட்டால் அது அங்கீகரிக்கப்படமாட்டாது. எலெக்ஷன் நாளுக்குமுன் ஒரு மாதத் திற்குமுன்பே ஏதாயினும் ஓர் நாளை இதற்கென்று குறிப்பிடுவது வழக்கம். காண்டிடேட் ஆகுபவர், இந்த நாளை முன்னடியே யறிந்து கவனத்திலிருத்த வேண்டியதாகும்.

ஓர் இடத்திற்கே, எத்தனை காண்டிடேட்டுகளாயினும் நின்று போட்டி செய்யக்கூடுமென்று கூறினேனல்லவா? அவரவர் தாக்கல் செய்யும் நாமினேஷன் காகிதங்களை எலெக்ஷன் ஆபீசர் தன் எதிரே ஆஜர் செய்த இரண்டு நாட்களுக்குள் சோதனை செய்வார். எந்நாளில் சோதனை செய்வதையும் முதலிலேயே வெளியிடுவது அவருடைய வேலை. அச்சமயத்தை கவனித்து கியாண்டிடேட்டுகள் இஷ்டப்பட்டால், தாம் எதிரே நின்று பிரமாதங்கள் நடக்காது பார்த்துக்கொள்வதற்கும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

வெளியிடல்.

எலெக்ஷன் ஆபீஸர் எந்த எந்த சர்கிலுக்கு எந்த எந்த கியாண்டிடேட்டின் நாமினேஷன் காகிதங்களை ஒப்புக்கொள்ளவேண்டுமோ அதை தீர்மானப்படுத்துவார். அவற்றிலுள்ள பெயர்களை ஓர்

பட்டிகையில் வரைந்து இந்த சர்கிலுக்கு இந்த கியாண்டிடேட் நின்றிருக்கின்றாரென்ற செய்தியை அவ்வவ்விடங்களில் பகிரங்கமான இடங்களிலெல்லாம் வெளியிடுவார்.

ஓட்டிங்கு பேபர், அல்லது பியாலட் பேபர்.

உடனே இந்த கியாண்டிடேட்டுகளுடைய பெயர்களுள்ள பட்டிகையை அச்சடிக்க வைப்பார்கள். எந்த சர்கிலில் எவ்வளவு பேர் வோட்டர்களிருக்கிறார்களோ அவ்வளவைவிட அதிகமான பிரதிகள் சித்தமாகும். இதுவே 'வோட்டிங்க் பேப்பர்' (Voting paper) எனப்படும். வோட்டர்கள் தாம் விரும்பிய கியாண்டிடேட்டுடைய பெயருக்கு எதிரே கத்திரிக் கீரல் போட்டு குறிப்பிடவேண்டியது இக்காகிதத்திலேயாகும்.

போலிங்கு ஸ்டேஷன் அல்லது "பூத்து"கள்.

ஒவ்வொரு சர்க்கிலின் விரிவை யனுசரித்தும் அதிலுள்ள வோட்டர்களின் எண்ணிற்குத் தகுந்தவாறும், ஆங்காங்கு சில இடங்களை எலெக்ஷன் ஆபீஸர் நியமிப்பார். சுற்றிமுற்றிலும் இருக்கும் கிராமங்களிலுள்ள வோட்டர்கள் தத்தம் பட்டிக்காடுகளிலிருந்து விடியற்காலத்திலேயே புறப்பட்டு வோட்டை எழுதிக்கொடுத்துவிட்டு பின்னால் மாலைவேளை தத்தம் வீடு திரும்பிச் செல்லக்கூடிய தூரத்திலேயே இவ்விடங்கள் ஏற்படுத்தப்படும். இவற்றையே

'போலிங்கு ஸ்டேஷன்கள்' அல்லது 'பூத்துகள்' என்பது.

பிரசுரம் செய்தல்.

இக்காரியங்கள் நடைபெற்று வருகையிலேயே எனில், அதற்கு முன் சில மாதங்களிலிருந்தே, வோட்டு பிச்சைக்காக கியாண்டிடேட்டுகள் நடத்தும் முறைகள் சித்திரவிசித்திரமானவை. அவர்களும், அவர் பந்துக்களும், சிநேகிதரும், மோட்டார் வண்டிகளிலேறி கிராமம் கிராமமாய்த் திரிவது இக்காலத்தில் நூதனமான காட்சியன்று. எங்கெந்த இடங்களில் சொல் வன்மையுடைய பலவான் எவனோ, எவன் சொல்லுக்கு அங்குள்ள வோட்டர்கள் உட்பட்டு நடந்து வருவார்களோ, அப்படிப்பட்டவனை ஒவ்வொரு கியாண்டிடேட்டும் தன் பக்கம் திருப்பிக் கொள்ள முயல்வது எலெக்ஷன் போர் முறையில் அஸ்திவாரம் போன்றதாகும். அவனை தூக்கி வைத்துப் புகழ்வர்; தன் குலத்தான் என்பார்கள்; தமக்கு நெறுங்கியவன் என்பர்; போட்டியாய் நிற்கும் கியாண்டிடேட் தமது ஜில்லாவைச் சேர்ந்தவனல்ல வென்பார்கள்; வேறான குலத்தான் என்பர்; தனது விரோதிக்கு வேண்டியவன் என்பார்கள். இலையில் சாதத்தை கையிலெடுத்துக் கொண்டு வோட்டு தனக்கு வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்தாலன்றி பிடியன்னமேனும் உண்ணமாட்டோமென்று பயமுறுத்துவர். இலவசப் பணமளிக்க

முயல்வர். எதிரியான கியாண்டிடேட்டுக்கு உதவி செய்ய முனைந்து நிற்பவன் தன் பகைவன் என்று வற்புறுத்திக் கூறுவர். வேறு விதங்களிலும் ஆசை காட்டுவார்கள். இத்துடன் அப்பலவான் சம்மதப் பட்டு தான் விரும்பியவனை எலெக்ஷனில் வெற்றி யடைவிக்க முடிவு செய்தானே, எதிர் கக்ஷியில் மற் றொரு பலவான் எழுந்து வருவான். இவ்விருவர் இடையில் கிராம வாஸத்து வோட்டர் கரும்பாலை யில் அகப்பட்டவனைப் போலாவான். (ஓர் சமயத் தில் இத்தகைய சக்களத்திப் போர் அவனுக்கு லா பத்தைத் தரக் கூடியதாகவு மிருக்கும்) தான் கூறிய வண்ணம் வழிக்கு வராமற் போவானாகில் அவனு டைய பசுக்களை பௌண்டிலடைப்பேன் என்று ஒருவன் மிரட்டுவான். கடனைக் கொடுத்தாலன்றி விடமாட்டேனென்று இன்னொருவன் பிடிவாதம்செய் வான். வெற்றிலையைக் கையில் பிடித்துக்கொண்டு தன் கக்ஷிக்காரனுக்கே வோட்டைக் கொடுக்கும் வரையிலுங் கேட்கமாட்டே னென்று மூன்றாமவன் மொண்டிபோடுவான். "உன் வயலுக்குத் தண்ணீர் பாய்வதை நான் பார்க்கிறேன் போடா! போ!" என்று பின்னுமொருவன் பயப்படுத்துவான்.

போட்டியாக நிற்கும் கியாண்டிடேட்டில் ஒரு வன், டிஸ்டிரிக்டு போர்டு பிரெஸிடெண்டாக இருக்க நேரிட்டால், மற்ற கியாண்டிடேட்டுக்கு திக்கே கிடையாது. அத்தகைய அதிகாரம் பெற்

றுள்ள கியாண்டிடேட் மாதங்களுக்கு முன்ன தாகவே போர்டு சிலவில் தன் எலெக்ஷன் வேலைக்காக பிரயாணம் செய்வான். தனக்கு வேண் டியவர்களே மற்ற சர்கில்களிலும் வெற்றி பெற்று வருவதற்கு வேண்டிய முயற்சி செய்வான். இதுவே யல்ல. தன்னை எதிர்த்து நிற்கும் கியாண்டிடேட்டுக் குப் பகையானவரைத் தேடி கையிலிருந்து சிலவுக் குக் கொடுத்து போட்டிக்காக நிற்கவைப்பது முண்டு. ஓவர்சியர்கள், கண்டிராக்டர்கள், பள்ளிக்கூட உபாத்தியாயர்கள், அவர்களைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குச் சேர்ந்தவர், ஆக எல்லோரும், தமக் குத் தோன்றிய வண்ணம், சிலர் பக்தியுடனும், மற் றுஞ் சிலர் பயத்துடனும், சிலர் இரகசியமாயும், மற் றுஞ் சிலர் வெளிப்படையாயும், தெரிந்தும், தெரியா மலும், பலவிதமாய், வோட்டர்களைப் புகழ்ந்தும், பயப்படுத்தியும், தமது மேலதிகாரி வெற்றி பெற வேண்டிய உபாயத்தைத் தேடுதல் வெள்ளிடைமலை யாம். இத்தகைய அதிகாரிகளாய் கியாண்டிடேட்டு கள் பக்கமிருக்கும் பலவான்கள் தமக்கு வேண் டியவர்களுக்கு வேலைகளோ கண்டிராக்டுகளோ, சேகரித்துக் கொள்வதற்கு எலெக்ஷன் காலமே சரியான சமயம். இச்சமயங்களில் வெற்றி பெற முயலும் கியாண்டிடேட்டு இல்லையென்று மாத் திரம் சொல்வது அபாயமானதாகும். வேலை கொடுப்பதற்கு காலியான விடங்கள் இருக்கமாட்

டா. அச்சமயங்களில் ஆபீஸ் குமாஸ்தா வொரு வன் சம்பளத்துடன் ரஜா வாங்கிக் கொள்வதும், அவ்வேலையில் ஒருவனை யமர்த்துவதும், எலெக்ஷன் முடிந்த மறுநாளே வீட்டுக்குச் செல்ல வழி காட்டு வதும், நடந்து வருவது அபூருபமானதன்று. மூன்று மைல் ரோட்டு கண்ட்ராக்டை எட்டு பெயருக்கு பங் கிட்டுக் கொடுப்பதும், எலெக்ஷன் முடிந்து முடிவு தெரியும் வரையில் 'டெண்டர்களை'த் திறந்து பாரா மலிருப்பதும் எலெக்ஷனுக்குத் துணை புரிபவர்களை சிதற விடாமல் பத்திரப்படுத்திக் கொள்ள உபாயங் கள். எந்த எந்த கண்டிராக்டர்கள் தான் ஜயம் பெற உதவினரோ, அவர்களுக்கு கண்ட்ராக்டு வேலை களே பரிசுகளாவன. இது பெரிய 'நியூஸென்ஸு' (உபத்திரவம்). ப்ரெஸிடெண்டாகவிருக்கும் அதிகாரி பின்னும் எலெக்ஷனுக்கு ப்ரெஸிடெண்டாக நிற்கக் கூடாதென்று ஆக்டையே திருத்துவது உத்தமமாக விருக்கும். ப்ரெஸிடெண்டாக வேண்டிய அதிகாரி எலெக்ஷனுக்கு நிற்க விரும்பினுல் ஓர் மாதத்திற்கு முன்பாகவே தன் ப்ரெஸிடெண்டு வேலைக்கு ராஜி னுமா கொடுத்து விட்டதாக எண்ணிக் கொள்ள ரூலை விதிப்பது யுக்தமாயிருக்கும்.

எவ்வாருயினு மென்ன! எலெக்ஷன் வழக்கத் தை விட்டு தப்பித்துக் கொள்ள வேறு வழி ஜனங்களுக்குக் கிடையாது. நாளைக்கே சம்பூரண சுயராஜ்யம் லபித்தபோதிலும், அதை நிறுத்திக்

கொள்ளப் போதிய வல்லமை எலெக்ஷன் மூல மன்றி கிடைப்பது சாத்தியமாகாதென முன்னிரண்டு அத்தியாயங்களில் விரித்துரைக்கப்பட்டது. நாட்டின் நலத்தை விரும்பியவர் எவராயினும் எலெக்ஷன் பெயரால் நடந்துவரும் வேற்றுமைகளைத் தடுக்க முயல்வது உண்மையான நாட்டின் ஊழியமாகும்.

இன்னார் இன்னாருக்கு வோட்டுக்கொடுப்பதை வெளியிடக் கூடாதென்றும், வெளிப்படையாயும், மறைவாயும், இலவசப்பணத்தினாலாகிலும், பயமுறுத்துவதனாலாகிலும் வோட்டர்களின் எலெக்ஷன் முறையின் மூலதருமமாகும். இந்த இரகசியமான சுதந்திர ஒழுக்கங்களை எக்காலத்திலும் ரக்ஷிப்பதற்காக மிகக் கடினமான அரசாங்க சாசனங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றை சூக்ஷுமமாய் எடுத்துக் காட்ட சமயம் இதுவே.

எலெக்ஷன் குற்றங்கள்.

எத்தகைய எலெக்ஷனிலாகிலும் மெம்பராய் வர விரும்புவோன் கியாண்டிடேட் என்றும், வோட்டைக் கொடுக்கும் அதிகாரம் உடையவன் வோட்டரென்றும் இதற்குமுன் குறிப்பிட்டுள்ளோம். போலிங் ஸ்டேஷனில் ஆபீஸராயினும், குமாஸ்தாக்களாயினும், வேறு யாராகிலும் இன்னார் இன்னாருக்கு வோட்டு கொடுத்த சங்கதி தமக்கு தெரிந்தபோதிலும் வெளியிடக்கூடாது. அவ்வண்ணம் வெளியிடுகின்ற

அபராதிக்கு ஏற்படுந் தண்டனை உயர்ந்தது ஆறு மாதம் கடுங்காவல். இதற்கு அபராதமும் சேர்த்து தண்டனை விதிக்கக் கூடும். இதுவே யன்றி அவ்வண்ணம் தண்டனையடைந்தவன் ஐந்துவருட காலம், தான் வோட்டராய்க் கூட இருக்கக்கூடாது. போர்டு சம்பந்தப்பட்ட எந்த எலெக்ஷனுக்காகிலும் கியாண்டிடேட்டாக நிற்கும் உரிமையையும் போக்கடித்துக் கொண்டவனாகின்றான் (செ. 59.)

எந்த வோட்டராயினும் தான் கியாண்டிடேட்டாக நிற்பதற்கும், நிற்காததற்கும், நின்றபின் விட்டுவிடுவதற்கும், மற்றொரு கியாண்டி டேட்டுக்குத் தான் உதவ விரும்பினால் வோட் கொடுப்பதற்கும், கொடுக்காமல் விடுவதற்கும் தனக்கு சம்பூரண சுதந்திரமுண்டென்பதை யறியவேண்டும். இதற்கு யாராகிலும் எவ்விதத்திலேனும் தடை செய்யக் கூடாது. ஆங்கில மொழியில் இதையே "எலெக்டொரல் ரைட்" என்பது. "எலெக்ஷன் உரிமை" என்பது இதன் பொருள். (பெனல் கோட் செ. 171 A. B. பார்க்க)

இலவசப் பணம்.

ஒரு வோட்டருடைய எலெக்ஷன் உரிமை விஷயத்தில் கியாண்டிடேட்டாகிலும், வேறு யாராகிலும், எவ்விதமான பொருளுதவி செய்தாலும் அஃது (Bribery) லஞ்சமென்ற பெயரை யடையும். [பெனல் கோட் செ. 171 B. (1)] சாப்பாடு போடல், தண்ணீர்

முதலானவற்றை யளித்தல், வேடிக்கைகளை யுண்டாக்கி சந்தோஷப்படுத்தல், சுவைதரும் உண்டிகளை யமர்த்தல் இவையாவும் அத்தகைய உதவிகளே. (பெனல் கோட் 171 C.)

ஒரு வோட்டர் தன் எலெக்ஷன் உரிமையைக் குறித்துத் தானகிலும்,வேறு யாராகிலும் பணம் வாங்கிக்கொள்ளுவதாக, சம்மதித்தால் போதும். அதுவும் 'இலவச' குற்றமேயாகும். [பெனல் கோட் 171. C. (1) ii] அவ்வண்ணம் இலவசப் பணங்கொடுப்பவன், கொடுக்க முயன்றாலும், கொடுக்க சம்மதித்தாலும் இலவசப்பணம் கொடுத்தபடி எண்ணிவிட வேண்டியதே. [பெனல் கோட் 171 B. (2)]

ஒருவன் அத்தகைய பணத்தை, மற்றவனிடமிருந்து வாங்கிக்கொண்டாலும், வாங்க சம்மதித்தாலும், அல்லது வாங்கிக்கொள்ள முயன்றாலும், அவன் இலவசப் பணம் வாங்கியபடியே யாகும்.

ஒருவன் இலவசப் பணத்தை எதற்காக வாங்குவானே, அக்காரியம் நிறைவேற உள்ளுக்குள்ளே இஷ்டப்படாதவனயினும் சரி, அல்லது தான் எவ்வேலை நடத்திவைக்க இலவசப் பணத்தை ஏற்றுக்கொள்வனே அவ்வேலை முடியாமற் போயினும் இலவசப் பணம் லஞ்சமாகவே எண்ணிக்கொள்ளப்படும். அப்படி வாங்கிய வோட்டரும் அபராதியே யாகின்றான். [பெ. கோ. செ. 171 B. (3)]

மிரட்டல்.

எவனுயினும் வேண்டுமென்று உத்தேசித்து மற்றவரது எலெக்ஷன் சுதந்திரத்திற்குத் தடையுண்டாக்குகின்ருனே அவன் (Undue Influence) 'மிரட்டல்' என்ற பிழையைச் செய்தவனுகின்ருன். வோட்டருக்காயினும், கியாண்டிடேட்டுக்காயினும், அவர்களைச் சேர்ந்தவர்க்காயினும், தீங்கிழைப்பதாக பயப்படுத்தினுலும், கடவுளுக்குத் தூரமாவானென்ருவது, நல்வழி தப்பியவனென்ருவது நம்பவைத்தாலும், அல்லது அவ்வண்ணம் நம்பும்படி முயன்ருலும், அப்படிப்பட்டவன் மிரட்டலுடன் எலெக்ஷன் சுதந்திரத்திற்குத் தடையேற்படுத்தினவனுகின்ருன்.

'லஞ்சம்' 'மிரட்டல்' என்ற குற்றங்களுக்கு தண்டனை உயர்ந்தது ஓர் வருடம் கடுங்காவற் சிறைவாசம். இத்துடன் அபராதப் பணமும் சேர்க்கப்படலாம்.

நடித்தல்.

ஒருவன் மற்ெருருவனுடைய பெயரால் வோட் கொடுப்பதற்காக போலிங்கு ஆபீஸரிடம் வோட் காகிதத்தைக் கேட்கின்ருனென்று வைத்துக்கொள்வோம். அவனுடையபெயரில்—அவன் இறந்திருந்தாலும் சரி—தானே வோட் காகிதத்தில் கத்திரி வரை போடுவான். தான் வோட்டராய் ஓர் முறை வோட் எழுதியும், அதே எலெக்ஷனில் மற்ெருருமுறை ஓட்

கொடுப்பான். இந்த அபராதம் செய்தவனும், அவனுக்கு உதவி செய்தவரும் 'நடித்தல்' (Personation) என்ற குற்றத்தைச் செய்தவராவர் (பெ. கோ. செ. 171 D.)

மேற்கூறிய 'நடித்தல்' என்ற குற்றத்திற்கு தண்டனை மிகுந்த பக்ஷம் ஓர் வருடம் கடுங்காவலுடன் சிறை இருத்தல். இத்துடன் அபராத பணமும் சேர்க்கப்படலாம். (பெனல் கோட் செ. 171 G.)

பொய்யான விஷயங்கள்.

ஓர் கியாண்டிடேட்டை எலெக்ஷனில் தோற்கடிப்பதற்கோ, வெற்றியடைவிப்பதற்கோ, யாராகிலும் அப்படிப்பட்ட கியாண்டிடேட்டின் ஒழுக்கத்தை யறிந்து அறிந்து பொய்யான விஷயங்களைப் பிரசுரிப்பதும் மற்றொரு எலெக்ஷன் குற்றமே. இதற்கு அபராதம் மாத்திரம் விதிக்கப்படும்.

எவ்வளவு வேண்டியவனா யிருந்தபோதிலும், ஓர் எலெக்ஷனில் தன் கியாண்டிடேட் வேற்றி பெருவதற்கு பிரத்தியேகமாய் கியாண்டிடேட்டானே எழுதிக்கொடுத்த அதிகாரப்பத்திரம் அன்றி, மீட்டிங்குகள் ஏற்படுத்தி பிரசங்கித்தாலும், மற்றொரு எலெக்ஷன் குற்றமாகும். இதற்கும் அபராதப் பணம் மாத்திரம் விதிக்கப்படும்.

கணக்குகள்.

சாம்பிராச்சிய சாசன சபைக்கும் (Legislative Assembly), இராஜதானி சாசன சபைக்கும்

கியாண்டிடேட்டுகளாய் நிற்பவர் தம் எலெக்ஷன் சிலவுகளைக் குறித்து வரவுசிலவு கணக்குகளை வைத்திருக்கவேண்டுமென்பது விதி. நாளடைவில் லோகல் போர்டு எலெக்ஷனிலும் அவ்வண்ணம் கணக்குகள் எழுதிவைக்க வேண்டுமென்று லோகல் கவர்ன்மெண்டார் கட்டளையிட அவ்வண்ணம் கணக்குகள் எழுதிவைக்காமலிருந்தால் அதையொரு குற்றமாகக் கருதலாகும். இதற்கு தண்டனை உயர்ந்தது ரூ. 500 அபராதமே.

வோட்டர்கள் பட்டிகை.

எந்த எலெக்ஷனுக்காகிலும், ஓட்டர்கள் பட்டிகை யில்லாமலிருக்காது. மழைக்கு மழைத்துளி எவ்வண்ணமோ, வெள்ளாமைக்கு விதைகள் எப்படியோ, அதிகாரத்திற்கு வோட்டுகள் அவ்வாறாகும். வோட்டென்பது சுயராச்சியத்திற்கு விதையாகும். வேளாண்மைக்காரனுடைய உயிரொளி. வோட் இல்லாத வேளாளன், தந்தியறுந்த தம்பூர் போலாகின்றான். வோட்டர்களாய் பட்டிகைக்குச் சேரக்கூடியவர் யாவரென நிர்ணயிப்பதற்கு விதிகளுமிருக்கின்றன. பிரிடிஷ் ஆளுகையின் கீழ்ப்பட்ட குடிமகனா யிருக்கவேண்டும். அவ்வரசாட்சிக்கு உட்பட்ட மைஸூர், ஹைதராபாத் முதலிய சுதேச சமஸ்தானங்களிலுள்ள குடிமக்களாயிருந்தாலும் போதும். எந்த வருடத்தில் வோட்டர்கள் பட்டிகை தயாராகின்றதோ அதற்கு முந்திய வருஷத்தி

லேயே வோட்டர் ஆகவிரும்புகிறவன் 21 வருடங்கள் குறையாதவயதுடையவனுகவிருக்கவேண்டும்.எலெக்ஷனுக்குப்பிந்திய வருடத்தில் குறைந்தது 120 நாட்களாயினும், தன் போர்டு பிரதேசத்தில் குடியிருந்தாலன்றி வேளாளனொருவன் பட்டிகையில் தாக்கலாவது முடியாது. (செ. 52). பைத்தியம், ஊமையுடன் கூடிய செவிடனுயிருந்தாலும், குஷ்டரோகியாயினும் தோஷமேயாகும். அப்படிப்பட்டவனும் பட்டிகையில் சேர்க்கப்பட மாட்டான். அப்படிப்பட்டவனுடைய பெயர் பட்டிகையிலிருந்த போதிலும் எலெக்ஷனில் வோட் செய்யும் அதிகாரம் அவனுக்குக் கிடையாது. [செ. 54 (2)]

எவ்வளவு குறைந்த மொத்தமாயினும் சரி, இந்தியா கவர்ன்மெண்டுக்காயினும், சென்னை கவர்ன்மெண்டுக்காயினும், வரி கொடுப்பவனுயிருந்தால் போதும். அப்படிப்பட்ட வேளாண்மைக்காரன் பட்டிகைக்குச் சேரத்தகுந்தவனுகிருன்.

அந்தந்த போர்டு பிரதேசத்தில் வேளாண்மைக்காரன், பட்டாவுடையவனுகவாவது, ஜமீன்தாராகவாவது இருக்கும் பண்ணைக்காரனுடைய வோட்டர்கள் பட்டிகையில் சேர அருகனுகின்ருன். தன் பெயரால் பட்டா இல்லாமலிருந்தும், எழுத்து மூலமாய் வெள்ளாமை செய்ய கரார் பத்திரத்தையுடையவனுயிருந்தாலும், பட்டாதாரின் கீழ் குத்தகைக்கு வெள்ளாமை விளைவிப்பவனுயிருந்தாலும்,

அப்படிப்பட்டவருக்கு உள்பட்டு வெள்ளாமை விளை விப்பவனு யிருந்தாலும் வோட்டர்கள்பட்டிகையில் சேரத்தகுந்தவன். சென்னை எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் (Madras Estates Land Act) படி பெரிய பண்ணயக்காரரும், மலையாள லாண்ட் ரிஜிஸ்ட்ரே ஷன் ஆக்டின்படி (Malabar Land Registration Act) ஜமீன்களையுடையவரும், வோட்டர்களாய் பட் டிகையில் சேரத்தகுந்தவர்களாயிருப்பார்கள். சிலர் கூட்டமாய்க் கலந்து கம்பெனியாக மேற் குறித்த வாறு வரி செலுத்துபவராயிருந்தால், அந்த கம் பெனியின் காரியதரிசியோ, அல்லது கம்பெனிக்கா ரர் நியமிக்கும் மற்ற எந்த மெம்பராகிலும் வோட்ட ராக இருக்க அருகனுகின்றான். ஒருமித்த பட்டாதார் களுடனும் ஒருமித்த குடும்பத்திலிருந்தும் பத்து பேர் சேர்ந்து குறிப்பிடப்பட்டவன் வோட்டரா யிருப்பதற்கு உரிமையுள்ளவன். வரி செலுத்தினு லும், செலுத்தாமற்போனபோதிலும் இராணுவத் தில் (பட்டாளத்தில்) வேலையிலிருந்து திரும்பி வந்த வனும், பென்ஷன் வாங்கிக் கொண்டவனும், வோட் டராய்ச் சேரத்தகுந்தவன்.

ஓர் வோட்டர் இரண்டு மூன்று விதங்களாய் பட்டிகைக்குச் சேரத்தகுந்தவனு யிருந்தால், தான் வசித்துவரும் ஸர்கிலிலோ வார்டிலோ தயாராகும் பட்டிகையில் ஒருதரம் பெயரை எழுதமுடியுமே யன்றி அதிகப்பட்டு வரைந்துவிட இயலாது. [செ. 52 (C)]

கியாண்டிடேட்.

ஓட்டராயிருப்பவர்கள் யாராயினும்,—பெண் பிள்ளைகளாயினும் சரி—கியாண்டிடேட்டுகளாய் நிற்பதற்குத் தகுந்தவரென்பது சாமானியவிதி. இதற்கும் சில இடையூறுகளுண்டு. கியாண்டிடேட்டாக நிற்க விரும்பும் வோட்டர் தன் நாமினேஷன் காகிதத்தை யளிக்கும் நாளில் பைத்தியம் பிடித்திருந்தாலும், ஊமை—செவிடா யிருந்தாலும், குஷ்டரோகியா யிருந்தாலும், கியாண்டிடேட்டாய் முன்வரத் தகுந்தவனல்ல. இன்ஸால்வெண்டு பத்திரம் கொடுத்தவனுடைய கதியும் இதுவே.

சம்பளம் வாங்கும் சர்க்கார் உத்தியோகியும், சம்பளமில்லாமல் கௌரவ மேஜிஸ்டிரேட்டும் (கிராம முனிஸீப்புக்குக் கிடையாது), நாமினேஷன் நாளில் போர்டிலிருந்து பீஸ் வாங்கி யிருந்த வக்கீல், கோர்டு வியவகாரத்தில் போர்ட்டுக்கு எதிராய் வகாலத் வாங்கினவன், போர்டுடன் ஏதாவது கண்டிராக்ட் சம்பந்தமுடையவன்—வோட்டர்கள் பட்டிகையில் பெயரிருந்தாலும்—கியாண்டி டேட்டாய் நிற்கலாகாது.

தற்காலம் மெம்பராயிருப்பவனும், உண் நடைபெற்ற எலெக்ஷனில் வெற்றிபெற்று மெம்பர்பதவி ஏற்றுக்கொள்ள காத்திருப்பவனும், கியாண்டிடேட்டாய் நிற்கக்கூடாது.

தற்காலம் மெம்பராக இருக்கும் ஒருவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருப்பவனாகிலும், அவ

னுக்கு மேற்பட்ட அதிகாரியானாலும் கியாண்டிடேட்டாய் நிற்பதற்கு அருகனல்ல.

இழிவாற் குற்றத்தைச் செய்து கிரிமினல் கோர்டில் ஆறுமாதங்களுக்கு மேற்பட்ட தண்டனை பெற்றவனாயின், தண்டனை முடிந்த ஐந்து வருடங்கள் வரையிலும் வோட்டராயிருந்தாலும் கியாண்டிடேட்டாக நிற்பதற்கு முடியாது. [அத்தகைய தண்டனையை இடையூறாக எண்ணிக்கொள்ளப்படாதென்று தீர்மானித்து மன்னிப்பதற்கு லோகல் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் உண்டு.] அப்பீலில் தண்டனை அடிபட்டுப்போனபோதிலும், அல்லது லோகல் கவர்ன்மெண்டார் மன்னித்துவிட்டபோதிலும், அக்குற்றம் அந்த கியாண்டிடேட்டைச் சாராது. ஒற்றுமையாமை யென்ற (Civil disobedience) பிரபுத்துவ நிந்தைக்கு சம்பந்தப்பட்டகுற்றத்தைச் செய்து தண்டனை யடைந்தவனுக்கும் இது இடையூறாக எண்ணப்படாது.

போலிங்க் பூத்துகளை நிச்சயப்படுத்திய பின்பு, எலெக்ஷன் நாளுக்கு முன்னதாகவே எந்த எந்த போலிங்க் ஸ்டேஷனுக்கு யார் யார்போலிங்க் ஆபீஸர்களோ, அஸிஸ்டண்டு போலிங்க் ஆபீஸர்களோ, எலெக்ஷன் ஆபீஸரால் தேர்ந்து அனுப்பப்படுவார்கள். அந்தந்த இடங்களுக்கு அந்தந்த உத்தியோகஸ்தர் சென்று குறித்தவேளைக்கு வேலையை ஆரம்பிப்பார்கள். வோட்டரென்று முன்னுக்கு வரும் ஒரு

வனுடைய பெயர் வோட்டர் பட்டிகையில் இருக்கின் றதா என்று கவனிப்பது அவ்வுத்தியோகஸ்தனு டயமைுதல்வேலை. அவனுடையபெயர் அதில்காணப் பட்டால் அவன் கைக்கு வோட்டிங்கு காகிதத்தைக் கொடுப்பார். வோட்டர் எழுதி வாசிக்கத் தெரிந் தவனயிருந்தால் பின்னல் வைக்கப்பட்டுள்ள மறை விடத்திற்குச் சென்று, யாரும் பாராவண்ணம், தான் விரும்பிய கியாண்டிடேட்டின் பெயருக்கு எதிரில் கத்திரிக்கோடிட்டு அது வெளிக்குக் காணுவண்ணம் அதை போலிங்க் ஆபீஸர் மேஜை மேலிருக்கும் பெட்டிகையின் துவாரத்தில் போடவேண்டும்.

போலிங்க் (வோட்போடுதல்).

படிக்கத்தெரியாத வோட்டர்கள், அந்தந்த கியாண்டிடேட் கேட்கும் வண்ணம், தாம் விரும்பிய வருடைய பெயரை வெளிப்படையாய்க் கூறவேண்டி வரும். இவ்வண்ணம் வெளிப்படையாய்க் கூறுவத னல் அப்படிப்பட்ட வோட்டருக்கு பின்னல் பற்பல துன்பங்கள்ஏற்படக்கூடும். வோட்டர்கள் படிக்களழு தத்தெரிந்துகொள்ளும்வரையில் இப்படிப்பட்டஇடுக் கண்களுக்கு அகப்படாமல் தப்பித்துக் கொள்வது முடியாத காரியம். (இம்முறையில் கல்வி கற்ற வோட் டர்களுடைய நடை யொழுக்கங்கள் சித்திர விசித் திரமானவைகளா யிருப்பதும்கூடும். தமக்கு சத்வாரி யானதனல் பார்க்க முடியாதென்றும், சுரம் வந்திருக் கிறதாகவும் அதனல்பேன கையில்பிடித்து எழுதி கத்

தரிக் குறிப்புப்போட வலுவு இல்லையென்றும், பொய்யான சாக்குகளைக் கூறி இரகசியத்தை வெளியாக்க முயல்வர். தனது கியாண்டிடேட் பக்கத்துத் தலைவனிடம் பயத்தினாலோ, அல்லது அவனது சங்கையைத் தவிர்க்கவோ, வாக்களித்துத் தப்புவனல்லவென்று கர்வத்துடன் வெளிப்படுத்தியோ, நடந்துகொள்வது அப்படிப்பட்ட வோட்டருடைய எண்ணமாயிருக்கலாகும். இத்தகைய நடத்தை மிக்க இழிவானதென்று எண்ண மாட்டார்கள். அய்யோ பாவம்! முக்கியமாய் கியாண்டிடேட்டுகளே இத்தகைய விபரீதங்களுக்கு உத்திரவாதிகளென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சமயங்களில் போலிங் ஆபீஸர் வோட்டருக்காக தானே கத்திரிக் கோடு போடுவார். எதிரேயிருக்கும் கியாண்டிடேட்டாவது, அவருடைய ஏஜண்டுகளாவது அந்த கத்தரிக்கோடு யாருக்கு விழுந்திருப்பதைக் கவனித்து வர அதிகாரம் பெற்றவர்களாவர்.

வோட்டு கொடுக்கும்நாள் மாலை 6 மணியானதும் அந்தந்த போலிங் ஆபீஸர்கள், தத்தம் வோட்டு காகிதப் பெட்டிகளை (Ballot boxes) துணிகளால் மூடிதைத்து அரக்குமுத்திரையிட்டு போலீஸார் வசம் அனுப்புவர். இக்காரிய ஒழுங்கைக் கவனிக்கும் பொழுது, வோட் எவ்வளவு இரகசியமாயிருப்பதும், அதன் உண்மை விலையும் மிக முக்கியமானவையென்று வாசிப்போர்க்குத் தெரியவரும்.

வோட்டுகளைக் கணக்கிடல்.

எந்நாளில் வோட்டுகள் கணக்கிடப் படவேண்டு மென்பதும் (Counting) எலெக்ஷன் ஆபீஸரால் முதலிலேயே தெரிவிக்கப்படும். கியாண்டிடேட்டும் அவருடைய ஏஜண்டுகளும் அச்சமயத்தில் எதிரே நின்று தவறுகள் நடந்தேரின் கவனித்துச் சீர்திருத்த அதிகாரம்பெற்றவராவர். போலிங்க்ஆபீஸராய் இருக்கின்றவர் முன்னிலையில் வெளிப்படையாய் வோட்டு காகிதங்களை சோதனை செய்து எந்த எந்த கியாண்டிடேட்டுக்கு எத்தனை எத்தனை வோட்டுகள் வந்திருக்கின்றனவென்று எண்ணுவார். முதலில் ரிஜர்வு இடங்களுக்கு நின்றவர்களில் அதிகப்பட்ட வோட் சம்பாதித்தவரை வெளியிடுவார். மிகுந்தவர்களில் யாருக்கு அதிகப்பட வோட்டுகள் வந்தனவோ அவர் ஜெயித்ததாக வெளிப்படையாய் எல்லோர் முன்னும் வெளியிடுவார்.

எலெக்ஷன் வெற்றி தோல்விகளில், தோற்றுப் போன கியாண்டிடேட் தகரார் விண்ணப்பம் தாக்கல் செய்து விசாரிக்கக் கேட்டுக்கொள்ளும் அதிகாரமுடையவனாகின்றார். எலெக்ஷன் டிஸ்திரிக்ட் போர்டைச் சேர்ந்ததாகில், அந்த இடத்து சப்ஜட்ஜோ அல்லது ஜில்லா ஜட்ஜோ விசாரிப்பதற்கு அதிகாரமுடையவர்கள். பஞ்சாயத்து போர்டுகள் தகரார்களை (Election disputes) டிஸ்டிரிக்ட் முன்ஸீப் விசாரிப்பார். இத்தகைய தகரார் விண்ணப்பங்கள்

எலெக்ஷன் வெற்றி தோல்விகளை வெளியிட்ட 15 நாட்களில் தாக்கல் செய்தாலன்றி செல்லா.

எலெக்ஷன் தகரார்கள்.

தகரார், டிஸ்டிரிக்டு போர்டைச் சம்பந்தப்பட்டதாக விருந்தால் ரூ. 200-ம், பஞ்சாயத்து எலெக்ஷன் தகரார்களுக்கு ரூ. 25-ம், தாமதமின்றி விண்ணப்பத்துடன் செலுத்திவிட வேண்டுமென்பது சட்டம்.

வென்ற கியாண்டிடேட், இலவசப்பணம், வெருட்டல், என்ற குற்றத்தை யியற்றியுள்ளான் என்று ருசுவானல், அந்த எலெக்ஷன் முழுதும் ரத்து செய்யப்படும்.

சட்டங்களுக்கும் ரூல்களுக்கும் மாருய் நடந்ததாகத்தெரிந்தபோதும், நாமினேஷன் பேப்பர் தாக்கல் செய்து கொள்வதிலோ, வோட் காகிதத்தை யங்கீகரிப்பதிலோ, சட்டத்திற்கு விபரீதமாயிற்றென ருசுவானபோதிலும், நியாயாதிபதி எலெக்ஷனையே ரத்து செய்துவிடக் கூடும். அத்தகைய தீர்ப்புக்கு அப்பீலே கிடையாது.

இப்படிப்பட்ட தகரார்களின் விசாரணையைக் குறித்த ரூல்கள் போர்டு செண்டு ஜார்ஜ் கெஜிட்டில் (Fort Saint George Gazette) 22-3-32-ந் தேதி சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இத்தனை நியமங்களுக்கு உள்பட்டு நடைபெறும் உள்நாட்டுச் சபையே லோகல் போர்டு என்று அழைக்கப் பெறும். யாதேனும் ஓர் குறித்த நாளி

லும், நேரத்திலும், அதே எலெக்ஷன் ஆபிஸர் ப்ரெஸிடெண்டு எலெக்ஷனை நடத்துவார். அதன் பின் மற்றொருநாள் மீட்டிங்கில் வைஸ் ப்ரெஸி டெண்டு தேர்ந்தெடுக்கப் படுவார்.

இடையூறுகள்.

எலெக்ஷனில் மெம்பரான பின்பும் வேறிடத்தில் குறித்துள்ள காரணங்களால் அந்த மெம்பர் இருந்திருந்தாற்போல் தன் பதவியை இழப்பதும் நேரிடும். மெம்பரானவன் தனது பிரதேசத்தில் சம்பூரணமாய் வசித்து வராமற்போனாலும், தன் பதவியை இழந்து விடுவான். தான் கடைசியாய் ஆஜரான மீட்டிங்கு தேதியிலிருந்து மூன்று மாதங்களில் நோட்டீஸ் கிடைத்தும், ஆஜராகத்தவறினாலும், அதனிடையே இரண்டு மீட்டிங்குகளாகிலும் கூடாமற்போனால், தான் ஆஜரான மீட்டிங்கிற்குப் பின் வரிசைக் கிரமமாய் இரண்டு மீட்டிங்குகளுக்கு வராமற்போனாலும், அவனுடைய மெம்பர் வேலையை இழந்துவிட வேண்டியதே. அர்ஜெண்டு மீட்டிங்குகளும் ஸ்பெஷல் மீட்டிங்குகளும் இதில் கணக்குக்கு வரமாட்டாதவை யாகின்றன. (செ. 56 h)

கிரிமினல் குற்றத்தை யியற்றி தெண்டனை பெற்றதால் மெம்பர் வேலையை இழந்தவனா யிருக்குங்கால், அத்தெண்டனை அப்பீல் அடிபட்டுப் போனாலும், கவர்ன்மெண்டார் அந்த அபவாதத்தை மன்னித்தபோதிலும், அத்தகைய மெம்பர் பின்னும்

வேலையைப்பெற்று தன்மூன்று வருடங்களில் மிகுந்த காலம் முழுவதிலும் மெம்பராக விருக்க அருகனு வான். அதனிடையே அந்த காலி யிடத்திற்கு எலெக் ஷன் நடந்து மற்றொரு மெம்பர் அவனுக்குப் பதி லாய் தேர்ந்தெடுக்கப்பட்டு மெம்பர் பதவியை யடைந்திருப்பானுகில் அவன் தன் இடத்தை பழைய மெம்பருக்கு விட்டுக் கொடுத்துவிட வேண்டியதே யாகும்.

மேற்குறித்தவாறு மீட்டிங்குகளுக்கு வராமல், மெம்பரொருவர் தன் இடத்தை இழந்துவிடும் பொழுது, அச்செய்தியை ப்ரெஸிடெண்டு உடனே அந்த மெம்பருக்கு தெரிவிப்பதுடன் பின்னுல் மீட் டிங்கில் போர்டாருக்கு அதை யறிவிப்பது விதியா கும். அதனுள்ளேனும், அல்லது தனக்குத் தெரிந்த பின் 15 நாட்களிலேனும், தன்னை மெம்பராகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தானுகவே விண்ணப்பம் கொடுத்தால் அதன்மேல் போர்டார், விண்ணப்பத்தை யங்கீகரித்துக் கொள்வதற்கும், தள்ளிவிடுவதற்கும் சுதந்திர முடையவராவர். இவ் வண்ணம் ஓர் மெம்பர் இரண்டு தடவைக்கு மேற் பட்டு மன்னிக்கப்படார். (செ. 56)

ப்ரெஸிடெண்டு, வைஸ் ப்ரெஸிடெண்டாயிருக் கும் மெம்பர்கள், மூன்று வருடங்கள் முடிவதினுலோ, மற்றெக் காரணத்தினுலோ மெம்பர் வேலையை விட்டு விட நேரிடுமாயின், ப்ரெஸிடெண்டு, வைஸ் ப்ரெஸி

டெண்டு நிலைமைகளும் அத்துடன் முடிந்து விடுவன வாகும்.

அப்படிப்பட்ட அதிகார நிலைமைகளிலிருக்கும் பொழுதே ப்ரெஸிடெண்டாகிலும், வைஸ் ப்ரெஸி டெண்டாகிலும், வேறொருபோர்டுக்கு ப்ரெஸிடெண் டாகவாவது, வைஸ் ப்ரெஸிடெண்டாக வாவது, எலெக்ஷன் ஆனபொழுது, தன் முன் நிலைமையை விட்டுவிடவேண்டும். கிராம பஞ்சாயத்து ப்ரெஸி டெண்டு, ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டு ஆன போதிலும், இரண்டு போர்டுகளுக்கு ஒருவனே ப்ரெஸிடெண்டாக விருக்க முடியாது.

ப்ரெஸிடெண்டாகிலும், வைஸ் ப்ரெஸிடெண் டாகிலும் அதே நிலைமைகளுக்கு திரும்பித் திரும்பி நின்று போரிடுவதற்கும் உரிமை உண்டு (செ. 15).

ராஜினமாக்கள்.

மெம்பர் ப்ரெஸிடெண்டு வைஸ் ப்ரெஸிடெ ண்டு, இவர்கள் தத்தம்ஸ்தானங்களுக்குராஜினமாவை கொடுத்து விட்டுவிடுவதற்கு அவர்களுக்கு சுதந் திரமுண்டு. தத்தம் பிரதேசங்களில் வோட்டர்கள் எலெக்ஷன்களில் அத்தகைய மெம்பர்களை யனுப்பி யிருப்பதால் அவர்களுடைய சம்மதத்தைப்பெறாமலே தம் இடங்களை விட்டு விடுவது மரியாதையன்று. மெம்பராகிலும், வைஸ் ப்ரெஸிடெண்டாகிலும், தம் பதவிகளை விட்டுவிட விரும்புவார்களாகில், ராஜின மாவை ப்ரெஸிடெண்டிடம் சேர்க்கவேண்டும். அவ்

வண்ணம் ப்ரெஸிடெண்டிடம் கிடைத்தது முதல்தன் மெம்பர் பதவியை இழந்தவனுகின்ருன். ப்ரெஸிடெண்டு ராஜிஞமா யளித்துவிட எண்ணியபொழுது மாத்திரம், அதை யங்கீகரிக்கும் அதிகாரம் போர்டினுடையதே யாகின்றது. அதுவும் மீட்டிங்கில் கொடுத்தாலன்றி செல்லாது (செ. 16)

ஆக்ஷேபனேகள்.

மெம்பர்கள்மேல்சிற்சில தகரார்கள் வரலாகும். தன்பெயர் வோட்டர்கள் பட்டிகையில் இல்லாமல் எலெக்ஷனில் வென்று வந்தானென்ற ஆக்ஷேபனே வரலாம். [செ. 56. (1)]. எலெக்ஷன் இரகசியங்களே வெளியிட்டதற்காக அப்பதவியிலிருக்கக் கூடாதென்ற நிந்தனேக்குட்படவுங் கூடும். கிரிமினல் குற்றஞ்செய்து சிக்ஷைபெற்றவனென்ருே, செவிடன் ஊமையென்ருே குஷ்டரோகி யென்ருே, இன்ஸால்வெண்டு கொடுத்தவனென்ருே, போர்டாருடன் கண்டிராக்டுக்குச் சம்பந்தப்பட்டவனென்ருே ஆக்டில் 55-ம் செக்ஷனில் கூறியுள்ள மற்றெக் காரணத்தினுலோ, அபராதத்திற்கு உட்படுவானுகில் அப்படிப்பட்ட மெம்பர் தன் வேலேயை இழந்து விடுவானென்று காட்டினுமேல்லவா.

பரிகாரம் செய்ய அதிகாரம்.

இத்தகைய ஆக்ஷேபனேகளால் தகரார்கள் உண்டானபொழுது விசாரித்து உண்மை வெளிப்படுத்தும் அதிகாரம் அவ்விடத்தைச் சேர்ந்த ஜில்லா

ஜட்ஜைச் சேர்ந்ததாகும். குற்றஞ் சாட்டப்பட்ட வனுயினும், அல்லது வேருெரு மெம்பராகிலும், போர்டுக் காரராகிலும், பன்னிரண்டு அணு பில்லை (முத்திரைத் தலை)யுடன் விண்ணப்பத்தை யளித்து தகராறை பரிகாரஞ் செய்யவேண்டிக் கொள்ளலாம். அப்படி ஜட்ஜு விசாரித்து முடிவு கூறியபொழுது அந்த முடிவிக்குமேல் பட்டு அப்பீலே கிடையாது. அது விசாரணையிலிருக்கும் வரையிலும் ஆக்ஷேபிக் கப்பட்டவன் மெம்பராய் இருக்க அருகனுனவன். (செ. 57)

இவ்வத்தியாயம் முடியுமுன் கிராம வாசிகள் முக்கியமாய் கிரகிக்கவேண்டிய எலெக்ஷன் தத்து வம் பின்னுமொன்றுளது. நாட்டிற்கு சுதந்திரம் கிடைக்கவேண்டுமென்பது உத்தமமான கோரிக்கை யே யாகும். இஃது பக்தர் நாடும் மோக்ஷத்தைப் போன்றது. இத்தகைய சுதந்திரத்தை நாட்டிற்கு அளிக்கவேண்டியே மகாத்துமா காந்தியைப் போ ன்ற தலைவர்களும் பிரிட்டிஷ் பார்லிமெண்டாரும் இப்பொழுது ஓய்வு ஒழிவின்றி முயன்று வருகின்ற னர். நாட்டிற்கே சுதந்திரத்தை நிலை நிறுத்த வேண்டுமாயின் எலெக்ஷன் முறையின்றி வேருெரு வழியுங் கிடையாது, இம் முறை நமக்குப் புதியது மாகாது. கியாண்டி டேட்டுகளில் தகுந்தவனைக் கண்டு பிடித்துப் பொருக்கி யெடுப்பதில் ஒவ்வொரு வோட்டருடைய மனே சுதந்திரமே முக்கியமாய்

பவித்திரமான சாதனமாகின்றது. இத்தகைய எலெக்ஷன் உரிமைக்கு மிரட்டுதல், இலவசப் பணமளித்தல் முதலாகிய காரணங்களால் கெட்ட பெயர் ஏற்படுகின்றது. இத்தகைய பிரமாதங்களைத் தவிர்ப்பதற்காக வேண்டியே பெனல் கோட்டிலே யே புதிதான செக்ஷன்களை யுண்டாக்கி யிருப்பதைக் குறித்து இதற்கு முன்பாகவே விரித்துரைத்திருக் கின்றது. பட்டிக்காட்டு வோட்டர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாத போதிலும், கியாண்டிடேட்டு களின் யோக்கியதை, அயோக்கியதை தாமா கவே தெரிந்து நிச்சயிக்குமவ்வளவு பகுத்தறி வில்லாமற் போகவில்லை. எலெக்ஷன் காலத்தில் வோட்டர்களை நிர்ப்பந்தஞ் செய்யாமல் சுயேச்சை யாக விட்டு விடுவதே நாட்டிற்குச் செய்யும் பெரிய உபகாரமாகும். சரியான கியாண்டிடேட்டை தெரிந் தெடுப்பதில் வோட்டரானவன் ஒவ்வொரு வேளை அறியாமல் பிழை செய்வானுயினும், மறு சமயத்தில் திருத்திக்கொள்வான். அப்படிக் கின்றி, கிராம முனிஸீப்போ, கணக்கப்பிள்ளையோ, வோட்டிங்கு நாளில் மற்ற எந்த பலவானே, வோட்டர்களை செம்மறியாட்டுக் கூட்டங்களைப்போல் போலிங்கு பூத்துகளுக்கு ஓட்டிக்கொண்டு வந்து அவர்களுடைய மனோசுதந்திரங்களின்மேல் பெரும்பாறையைத் தூக் கிப் போட்டு தாம் காட்டியவர்களுக்கே வோட்டைக் கொடுக்கும்படி நிர்ப்பந்தஞ் செய்வதும், அப்படிக்

கொடுக்காதவரைத் துன்பப் படுத்துவதும், நாட்டிற்கே துரோகஞ் செய்ததைப் போலாகும். வோட்டுகள் எழுதவைக்கும் நாளில் ஜில்லா முழுவதிலும் நூறு நூருய்க்கூடி போலிங்கு பூத்துகளில் நடக்கும் கொஞ்சுமொழிகளும், மிரட்டல்களும், பேரங்களும் விசித்திரமானவை. அந்தந்த கிராமங்களிலிருந்து வரும் வோட்டர்கள் சுயமாய்த் தாம் தாமாகவே புறப்பட்டு வருவது அபுரூபமான காட்சியாகும். ஒவ்வொரு கூட்டத்தின் பின்னேயும், பலமுடையவனெருவன் அவர்களுக்குக் காவலாளனுய் எந்த கியாண்டி டேட்டால் தனக்கு அதிகமான லாபம் கிடைக்குமோ அவனுக்கே உதவிசெய்யக் காத்திருப்பான். கியாண்டி டேட்டுனுடைய யோக்கியதையை குறித்து அந்த காவலாளன் வோட்டர் மனத்திற்கு வரவிட மாட்டான். கியாண்டிடேட்டானவன் அச்சமயத்தில் வோட்டர்களுடன் வேறுவேருய்க் கலந்து தன் யோக்கியதையைப் பற்றி தெரியப்படுத்த சமயமிருக்கவே இருக்காது. ஆதலால் அத்துளி நேரத்தில் காவலாளனே யண்டிக் கெஞ்சுவதை விட வேறு புகலிடம் ஏது! இதுவே காற்று, காவலாளன் எடுப்பதே தூற்று. வோட்டர் காவலாளனே எதிர்த்து சுதந்திரத்துடன் தான் விரும்பிய கியாண்டிடேட்டு பெயரால் வோட்டு கொடுக்க முனேந்து வரவும் தைரியமிருக்காது. ஓர் வேளை துடுக்காய் எந்த வேளையிலாவது கிரகசாரம் போதாமல் முயன்ருனே, எல்

லோர்க்குங் கேட்கும்படியாக காவலாளன் வோட்டருடைய பசுக்களை பௌண்டுக்கு ஓட்டுவேனென்றோ, வீட்டு வரி தொழில்வரிகளை யுயர்த்தி விடச் செய்வேனென்றோ, கடனைக்கொடுத்துவிட்டுப் போவென்றோ, மிரட்டுவான். இத்தகைய மிரட்டு, கூட்டங் கூட்டத்திற்கே பயத்தை விளைவிப்பதாகும். எதிராளியான கியாண்டிடேட்டுக்கு அகப்படாமல் வோட்டிங்கு நேரம் வரும் வரையில் சில கியாண்டிடேட்டுகள் தமது கூட்டத்தாரை காலியான அறைகளில் அடைத்துப் பூட்டி பத்திரப்படுத்துவதும் உண்டு. விருந்துகள், தாம்பூலங்கள், தக்ஷிணைகள், தாராளமாய் வழங்கப்படுவன. காவலாளர் வோட்டர்களை கூட்டங் கூட்டமாய் அழைத்துக்கொண்டுபோய் கள்ளுக்கடையில் அவர்களுக்கு மூக்கு வரையிலும் கள்ளை யூற்றி, சமயத்திற்கு ஏற்றவாறு தூக்கிவைத்துப் புகழ்வதும் உண்டு. இந்த மந்திரம் செல்லாத போகுமாகில் கைப்போர் வரையிலும் நடப்பதும் இயல்பாகின்றது. சிற்சில இடங்களில் பாதரக்ஷைகளுங் கைகளில் ஆயுதங்களாய் விளங்குவது கடைசி சாதனமாகும். ஒவ்வொரு போலிங்கு பூத்திலும், வோட்டிங்கு நாட்களில் இத்தகைய துன்பங்கள் நடந்து வருகின்றன வென்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமன்று. ஜில்லா எங்கும் இப்படிப் பட்ட போலிங்கு பூத்துகள் நூறுக்கணக்காய் நிலை கொள்வதும், ஒரே நேரத்தில் ஜில்லாவிலிருக்கும் பட்டிக்காட்டு ஜனங்களனைவரும்

அந்ததந்த பூத்துகளுக்கு குவியல் குவியல்களாய்த் திரண்டுவருவதும், அவரவர்க் காவலாளர்கள் வோட்டர்களுடைய மனோ பாவங்களை ஒடுக்கி தமக்கு வேண்டிய கியாண்டிடேட்டுக்கு மாத்திரம் பலவந்தமாய் வோட்டு போடவைத்துக்கொள்வதும், நாட்டில் சுதந்திரபாவம் முளையெடுப்பதற்கே இடையூருன காரணங்கள். இத்தகைய எலெக்ஷன்கள், லோகல் போர்டுகளுக்கோ, சாசன சபைகளுக்கோ இடையிடையே வருடந்தோறும் நடந்து கொண்டே வருகின்றன. இப்படிப்பட்ட சமயங்களில் பட்டிக்காட்டு ஜனங்களுடைய மனோ சுதந்திரங்கள் மடிந்துவிடாமல் தப்பாது. இப்படியானல் நாட்டில் சுயராச்சிய உணர்ச்சி வளர்வதெப்படி? இந்நிலைமைகளில் குடிமக்களின் நன்மையை நாடுவோர் கியாண்டிடேட்டுகளாய் நின்று நெறிபெற வழி இப்படிப்பட்ட வீரவைரப் பிரபாவங்கள் எக்காலத்திலும் பரவி யிருக்குமாயின் நாட்டிற்கு விடுதலை எங்கிருந்து வரும்? நாட்டின் 'சுதந்திர'மென்ற வார்த்தையே வீண்வார்த்தை. 'சுயராச்சியம்' என்ற கூக்குறல் பழிப்பேயாகும். 'பரத் மாதாகு ஜெய்' யென்ற மொழிகளும் டம்பவார்த்தையுமாகும்.

VI

காரிய முறை.

Duties of Local Boards.

இங்ஙனம் சட்டப்படி சிறப்புடன் நிலை நிறுத்தப்பட்ட சபைகள் என்ன வேலை செய்வதற்கென்பதைப்பற்றி இனி விசாரிப்போம். அவ்வவ்விடங்களில் உள்ள ஜனங்களின் க்ஷேமம், ஆரோக்கியம், மற்ற அனுகூலங்கள், அறிவு விளக்கம், சந்தோஷங்களைச் சேகரிப்பதற்கென்று இக் கூட்டங்களின் குறிப்பென்பதை இதற்குமுன் காட்டியிருந்தோம். இவற்றையடைய யடைய ஜனங்களும் சிறந்து விளங்குவர். ஜனங்களின் சிறப்பே நாட்டின் சிறப்பாகின்றது.

ஓர் குடும்பத்தில் ஒருவனுக்கு நான்குபேர் புத்திரர்கள் இருக்கின்றார்களென வைத்துக் கொள்வோம். அவர்கள் வளர்ந்து, தத்தம் முயற்சிகளால் ஆரோக்கிய முடையவராயும், பலமுடையவராயும், அறிவாளருமாய் உழவுதொழிலோ, வியாபாரமோ, மற்று ஏதாவது ஒரு வேலையையோ கைக்கொண்டு, தரும சிந்தையுடையவராய் பிறர்க்குத் துன்பமில்லாமல் சுதந்திரத்துடன் வாழநேர்ந்து தமது வீட்டு வியவகாரங்களையும் தாமாகவே சமாளித்துக்கொள்ளக்கற்றுக்

கொண்டபொழுதே அந்த குடும்பம் உத்தம நிலேயி லிருக்கின்றதென்போம். இப்படிப்பட்ட குடும்பங் களுடன் நிறைந்திருக்கும் ஒவ்வொரு கிராமமும் ஓங்கி வளர வேண்டுமென்ன, சமூகமுறையில் ஜனங்க ளுடைய சுகாதாரம் முதலானவை கவனிக்கத்தக் கனவாகும். இதற்கு காற்று, சூரியனெளியுள்ள வீடுகள், உள்ளும்வெளியும் சுத்தமாயிருத்தல், குடிக்க சுத்தமான தண்ணீர், வரப்போக தெருக்களும் பாதைகளும் நோயாளருக்குச் சிகிச்சை, குழந் தைகள் கல்விகற்க பள்ளிக்கூடங்கள், வயதுசென்ற பெரியாருக்கு மனவமைதி வளர்ச்சிக்கு புத்தகாலயங் கள், இளேஞரின் சரீரங்கள் பலமுடையனவா யிருக்க உடன் பயிற்சிசாலேகள் முதலான சாதனங் கள் அவசியமானவை. இத்தகைய சாதனங்கள் ஒவ்வொரு வீட்டிலுமிருக்க முயல்வது கூடாத காரியம். அவ்வவ்வூராரே சமூகத்தில் அமர்த்தி நடத்திக்கொள்ளத் தக்கவையாகும். இப்படிப்பட்ட காரியங்களே இவ்வண்ணம் ஜனங்களின் நன்மைக் காக நிலேகொள்ள வைப்பதற்கே லோகல் போர்டு களேப்போன்ற உள்நாட்டு சபைகள் ஏற்படுத்தப் படுவதாகும். இத்தகைய சபைகள் ஒவ்வொன்ருய் நாடெங்குந் தோன்றி தொழிலியற்றக் கற்ருலன்றி நாட்டின் வளர்ச்சி கனவேயாகும்.

இக்காரியங்கள் ஒவ்வொன்றையும் வேறு வேருய் விரித்துரைப்போம்.

ரோட்டுகள்.

ரோட்டுகள், வண்டிநடைப்பாதைகள், கால் நடை வழிகள், திசை திசைகளில் செல்வதை எவ்வூரிலும் பார்க்கக்கூடியதே. இவ்வழிகளுக்கு நதிகள், வாய்க்கால்கள், வரட்டாறுகள், ஓடைகள் முதலானவை குறிக்கிடும்போது பெரிய வாராவதிகளோ, பாலங்களோ இரண்டுபக்கங்களிலும்கருங்கற்களினல் கட்டப்பட்ட கற்பரப்புகளோ, கட்டப்பட்டிருப்பதையுங் கண்டிருக்கின்ரேம். இப்படிப்பட்ட பாதைகள் முதலானவை வருடந்தோறும் ஒழுங்குபடுத்தப்பட்டாலன்றி அவை பாழடைந்துபோய் விடும். அவசரமானபடிக்கெல்லாம் புதிய பாதைகள் போடவேண்டியிருக்கும். பாலங்களைக் கட்டவேண்டியிருக்கும். சீர்த்திருத்த வேண்டியிருக்கும். வயல்களுக்கு எருவு வண்டிகளடிக்கவும், சந்தைகளுக்கு சாமான்களைக் கொண்டுசெல்லவும், வெள்ளாமைக்குச் செல்லும் எருதுகள் பசுக்களின் வரத்துபோக்குகளுக்கும், ஜனங்கள் ஓர் ஊரிலிருந்து மற்ரெரு ஊருக்கு பிரயாணப்பட்டுப் போவதற்கும், ரோட்டுகள், பாதைகள் எவ்வளவோ முக்கியமானவை யென்பதை யறியாதவரில்லை. இருபுறங்களில் மரங்களை நாட்ட வைத்து வளர்த்து, நடந்து செல்லும் பிரயாணிகளுக்கும், பாரங்களை இழுத்துச் செல்லும் எருதுகளுக்கும் நிழலை யுண்டாக்கி சிரமத்தைக் குறைப்பதும், பாதைகளைச் சீர்ப்படுத்துவதில் சேர்ந்ததேயாகும். இம்

மாதிரி மரங்கள், புளியமரம், வேப்பமரம், மாமரம் முதலிய மரங்களாயின் அந்தந்த போர்டுகளுக்கு ஆதாயத்தை யளிப்பவையாகும். கிராமம் எல்லைகளுக்குள் இருக்கும் பாதைகளை யொழுங்குபடுத்தி காத்து வரும் பாரம் அந்தந்த கிராமபஞ்சாயத்தைச் சார்ந்தது. ஒருதாலூக்கா பிரதேசத்தில் பலகிராமங்களை யொட்டி அடுத்த தாலூக்கா எல்லைவரையிலும் வியாபித்துவருபவை அதைவிட பெரிய ரகத்தைச் சேர்ந்தவை. ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லா எல்லைகள் வரையிலும் வியாபித்து இராஜதானிகளுக்கே வழி காட்டும், ராஜபாட்டைகள் தாலூகா ரோட்டுகளுக்கு மேலானவை யாகின்றன. இவற்றையே ‘ டிரங்கு ’ (Trunk) ரோட்டுகளென்பது. தாலூகா ரோட்டுகளைப்போன்ற சிறிய பாட்டைகளையும் ஜில்லா போர்டுக்காரர் ஜில்லா ரோட்டுகளாய் பாவித்து போஷித்து வருவதற்கும் அதிகாரம் உண்டு. இப்படிப்பட்ட பாதைகளை ஆண்டாண்டு தோறும், அந்தந்த உள்நாட்டு சபைகள் சீர்ப்படுத்தாவிடில், அவை சீரழிந்துபோக போக்கு வரவுகளுக்கு இடையூறு ஏற்படுவது திண்ணம். இவ்வம்சங்களை நீடித்து ஆலோசிப்போமாகில் ரோட்டுகள் குடிநன்மைக்கு எவ்வளவு முக்கியமானவை யென்பது வாசிப்போர் தெரிந்து கொள்ளலாகும்.

சத்திரங்கள் பங்களாக்கள்.

சத்திரங்கள், பிரயாணிகள் தங்கும் பங்களாக்கள், முதலியவை நாட்டுப் புறங்களில் பஞ்சாயத்து போர்டாரும் அவற்றைவிட பெரியவகுப்பைச் சேர்ந்த பங்களாக்களைப் போன்ற இளைப்பாறு மிடங்களை டிஸ்டிரிக்ட்போர்டாரும், அமர்த்தி நடத்தப்படுபவை. பழையகட்டிடங்களுக்கு வேண்டிய ரிப்பேர்களை வருடா வருடஞ் செய்விப்பதும், ஒவ்வொன்றிற்கும் தகுந்த வேலையாளை நியமித்து பிரயாணிகளுக்கு அனுகூலமாகும் வண்ணம் பரிசுத்தப்படுத்துவதும், வேண்டிய சாமான்களைச் சேர்த்துவைப்பதும், வேண்டிய இடங்களில் திரவிய மிருக்கும்போது புதியவற்றைக் கட்டுதலும் அந்தந்த விடத்து போர்டாரைச் சேர்ந்த கடமையாகின்றன.

விளக்குகள்.

ராத்திரி இருளில் நடக்கும் ஜனங்களுடைய உபயோகத்திற்காகத் தெருக்களில் ஆங்காங்கு ராந்தல் தூண்களைநாட்டி விளக்கேற்றுவதும் அந்தந்த கிராம பஞ்சாயத்துகளின்வேலை. அத்தகைய பஞ்சாயத்துகள் இல்லாத இடங்களில் டிஸ்டிரிக்ட் போர்டார் இவ்வேலையை நடத்திவரலாகும். இந்த விளக்குகளை தினந்தோறும்துடைத்து, தக்கசமயங்களில் ஏற்றுவதற்கும், அதற்குவேண்டிய திரி மண்ணெண்ணெய் கண்ணாடி சிம்னிக்கள் முதலிய செலவுகளைச் செய்துவருவது அந்தந்த போர்டாரைச் சேர்ந்தது. சில பஞ்சாயத்துக

ளில் சில வேலையாட்கள் விளக்குகளை சிற்சில விடங்களில் ஏற்றவே ஏற்றமாட்டார்கள். ஏற்றியவைகளில் சிலவற்றில் வேண்டியமட்டும் எண்ணெயையும் போடமாட்டார்கள். மெம்பர்களும் கிராம ஜனங்களும் இத்தகைய குறைவுகளைக் கவனித்து அப்போதைக் கப்போதே ப்ரெஸிடெண்டிடம் உரைத்து சீர்ப் படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிக் கவனியாது அலக்ஷியமாய் இருந்தால் நஷ்டப்படுவது கடைசியில் சமுதாயத்தில் கிராமமென்றே யுணர வேண்டும்.

கல்வி.

ஜனங்களுடைய அறிவு வளர்ச்சிக்கு வாசித்தல் எழுதல் கணக்குபோடல் இவை முக்கியமானவை யென்பது யாவரு மறிந்த செய்தியே. "வித்தியா விஹீன: பசு" (கல்வி கற்காதவன் பசுவென்பது இதன் பொருள்) என்ற முதுமொழு இக்காலத்தில் உள்ளவர்க்குச் சரியாகும். எந்த போர்டு பிரதேசத்தி லாவது படிக்கவும் எழுதவும் தெரிந்தவர்களின் தொகை நூற்றுக்குப் பத்து பேராவது இருப் பார்களோ இருக்கமாட்டார்களோ சந்தேகமான செய்தியே. நாட்டில் வேளாண்மை கைத்தொழிலை வளர்க்கவேண்டியே கவர்ன்மெண்ட் வேளாண்மைக் கிளை உத்தியோகஸ்தர் வியவசாய பஞ்சாங்கங்கள் என்ற பெயரால் ஆயிரக் கணக்கான புத்தகங் களை அச்சடித்து குறைந்த விலைக்கு பட்டிக்காட்டு ஜனங்களுக்குச் சேரவைக்கின்றனர். தாம் ஆராய்ச்

சியால் நிலங்களை சாரவந்தமாகச் செய்வதற்கும், சுளுவான வழியில் எருவுவகைகளைத் தேடி சேகரித்துக் கொள்ளுவதற்கும், புதிதான பயிர்களைப் பரீக்ஷை செய்து ஆரம்பிக்கும் விஷயத்திலும், அப்பொழுதைக் கப்பொழுது தாள்களில் பிரசுரித்து கிராமங் கிரமமாய்ப் பங்கிட்டுக் கொடுப்பார்கள். நாளை நமக்கு சுயராச்சியம் கிடைத்தபொழுது இத் துணைப் பிரசுரங்கள் பின்னும் அதிகப்படுவனவே. இவ்வண்ணம் ஜனங்களின் ஆரோக்கியம் வளர வேண்டிய உபயோகமான சங்கதிகளை ஆரோக்கிய இலா உத்தியோகஸ்தர் வெளியிட்டு வருவார்கள். ஒற்றுமைச் சங்கங்களென்ற பெயருடன் நாடெங்கும் பரவியிருக்கும் அச் சங்க உத்தியோகஸ்தர் செல்வ நிலையை பல விதங்களாய் வெளியிட வேண்டியே வெளியிடும் பிரசுரங்களும் அவ்வாறே வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறு குடிமக்களின் நன்மையை நாடியே ஏற்பட்டுள்ள சர்க்கார் டிபார்டுமெண்டுகளும் இப்பத்திரங்களுக்காக ஆண்டாண்டு இலக்ஷக்கணக்கான பணத்தைச் சிலவிட்டு வருகின்றன. இச்சிலவுகளை யெல்லாம் குடியானவன் கொடுக்கும் நிலவரி வீட்டுவரிகளிலிருந்தே சிலவு செய்கின்றனர். பட்டிக்காடுகளில் இவ்வண்ணம் வெளியான பத்திரங்களை வாசித்து அறிபவர் எண்ணவேண்டிய மட்டும் இல்லையானால், இம்முயற்சிகளெல்லாம்வீணாய்ப் போகுமல்லவா! இது அவ்வாறிருக்கட்டும். வேளா

ளர் ரிவின்யூ கிளையாருடன் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பல விருக்கின்றன. நிலத்து சப் டிவிஷன்கள், ஆக்கிரமித்த விடங்களின்மேல் ஆக்ஷேபணைகள், பசல் உயர்தல், தீர்வை உயர்தல், தகாவி கடன்கள், சர்வேகற்களைநாட்டுதல், பட்டாக்கள் வரைதல், சர்க்கார் வரிசெலுத்தல் முதலாகிய விஷயங்களில் படிக்க எழுதவராத வேளாளனுடைய கஷ்டங்கள் அதிகப்பட்டவையாகும். இக்காலத்தில் பட்டிக்காட்டு வியாபாரங்களை வளர்ப்பதற்கும், எந்த எந்த வெள்ளாமை எவ்வெவ்விடங்களில் எவ்வளவு கிராக்கியாயிருப்பதையும், அந்தந்த பொருள்களுடைய விலையேற்றக் குறைவு எப்படியிருப்பதென்பதையும், தினசரி பத்திரிகைகளின் வாயிலாய் அறிவது எளிதாகும். மதுவிலக்கல், தீண்டாமையையொழித்தல், முதலிய சங்கதிகளைக்குறித்து நாட்டு பாஷைகளில் வியாசங்கள் பெருகி வருகின்றன. அவ்வண்ணம் வளர்ந்து வருவதற்கும், இப் பெரிய முயற்சிக்குத் தகுந்தவாறு ஜனத்திரளில் கல்வி வளர பள்ளிக்கூடங்களை நிலைவித்து நன்மையளிப்பது கிராம பஞ்சாயத்து சபைகளுக்கு மிகவும் பெரிய பொறுப்பாக வாசிப்போர் அறியவேண்டியதாகும்.

மேலான கல்வி வளர்ச்சிக்கு, ஹைஸ்கூல்களைப் போன்ற பெரிய பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தி காத்துவரும் அதிகாரம் டிஸ்டிரிக்ட் போர்டாரைச்

சேர்ந்ததாகும். நெசவு, மரவேலை, கருமான்களைப் போன்ற கைத்தொழில்களை கற்றுக்கொடுப்பதற்கும், சித்திரங்கள் வரைதல், சிற்பத் தொழில் போன்ற இனிய கலைகளை பிள்ளைகளுக்குக் கற்பிக்கத் தகுந்த பாடசாலைகளை ஏற்படுத்தி நடத்திவரும் பொறுப்பும் அவர்களுடையதே. பள்ளிச்சிறுர்க்கு போசன வசதிகளை நியமித்தலும் டிஸ்டிரிக்ட் போர்டாரைச் சேர்ந்ததே.

மியாஜிக் ராந்தல்கள் (பூதக்கண்ணுடி விளக்குகள்) ஸினிமாக்களைப் போன்ற இயந்திரங்களை மோட்டார் வண்டிகளில் வைத்து சித்திரபிரதர்சனங்களால் பட்டிக்காட்டு ஜனங்களுடைய அறிவை வளர்த்தி வருவதும் டிஸ்டிரிக்ட் போர்டார் கவனித்துவரவேண்டியதாகும்.

புத்தகாலயங்கள்.

கிராம பள்ளிக்கூடங்களில், பிள்ளைகள் கற்ற கல்வியை வயது வந்து வளர்ந்தபின் மறக்காவண்ணம் முயன்று வரவேண்டுமென்ருல், புத்தகாலயங்கள் முக்கியமானவை. சிறிய கிராமங்களில் வீட்டிற்கு வீட்டிற்கு புத்தகங்களையேனும், பத்திரிகைகளையேனும், தனித்தனியாய் வரவழைத்துக் கொள்ள வேண்டுமென்பது இயலாத காரியம். சிலவும் அதிகப்படும். இதுவுமன்றி கிராமத்தில் கல்விகற்றவர்கள் நால்வர்கலந்து ஓரிடத்தில் வாசித்தவிஷயங்களைக் குறித்து வார்த்தையாடுவதற்கு புத்தகாலயங்கள் தகுதியான

விடங்கள். நாள் வேலை முடிந்தபின்பு மாலை வேளை களில் வேளாண்மைக்காரரை வரவழைத்து தினசரி பத்திரிகைகளை வாசித்து தேச தேச வர்த்தமானங் களை யறிவிப்பதற்கும் இவை தகுந்த விடங்களாகின் றன. வாசிப்பதற்கும், கேட்பதற்கும் ஆசை வளர வளர ஜனங்களுடைய புத்தியும் பெருக வழியாவது சகஜமாகும். குடிஜனங்களுள் இவ்வாசை வளர்ச்சி பெறவே புத்தகாலயங்களிலிருந்து புத்தகங்களைச் சுமந்து சென்று கிராமம் கிராமமாய் வீடுகள்தோ றும் அளித்து வாசித்த பின்பு அவற்றைப் பின்னும் வாங்கி புதிய புத்தகங்களை யளித்து வருவது சிற்சில விடங்களில் புதிய வழக்கமாய் இருக்கிறது. இதற்குத் தகுந்தாற்போல் கிராம ஜனங்களும் கல்வி கற்க அக்கரையுடையவராவது முக்கியமானதாகும். லோகல் போர்டுகளைப் போன்ற உள்நாட்டுக் கூட்டங்கள், சென்னை சட்ட சபைகளைப் போன்ற சாசன சபைகள் சாம்ராச்சிய சாசன சபை கள் இவையாவும், வருடம் முழுவதும் சபைகளைக் கூட்டி உழைத்தே வருகின்றன. அவ்வச்சபைகளில் நடைபெறும் விஷயங்களனைத்தும் தினசரி பத்திரி கைகளில் வெளியிடப்பட்டு வருகின்றன. ஜனங்கள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகைகளை ஓதி சங்கதி களை யறிந்து வருவது சுயராச்சிய முறையின் வளர்ச் சிக்குக் குறிப்பாகின்றது. இக்காரியப் பகுதியில் பட்டிக்காடுகளி லிருக்கவேண்டிய புத்தகாலயங்கள்

எத்துணை யுதவியைத்தருவனவோ இதை வாசிப் போர் அறியவேண்டியதாகும். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள நாடுகளில் நடைபெறும் விஷயங்களை தினசரி பத்திரிகைகளின் மூலமாய் மூன்றும் நாளிலேயே எந்த கிராமத்திலாயினும் அறிந்துகொள்ள வேண்டிய வசதிகள் இக்காலத்தில் பலஉள. "ஆகாயவாணி" அல்லது "கம்பியற்ற தந்தி சமாச்சார" மென்ற புதிய இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆங்கிலத்தில் இதற்கு "வைர்லெஸ்" (Wireless) என்று பெயர். இதனுடைய விலையும் வரவர சரசமாய்க் குறைந்து கொண்டே வருகின்றது. ரூ. 150. சிலவு செய்தால் எந்த கிராமத்திலாயினும் புத்தகாலயங்களில் வைத்துக் கொள்ளலாம். சென்னப்பட்டணம் முதலிய தூரமான விடங்களில் பாடப்படுஞ் சங்கீதமாவது, வாசிக்கப்படும் வாத்தியங்களாவது, தத்தம் கிராமங்களில் அப்பொழுதைக்கப்பொழுதே கேட்டு சந்தோஷப்படுவது இவ்வியந்திரத்தினால் எளிதாகும். வேளாண்மை வளர்ச்சி, சுகாதார நீதிகள், முதலாகிய விஷயங்களைக் குறித்து சென்னப்பட்டணத்தைப் போன்ற தூரமான விடங்களில் உபன்னியாசங்கள் நடைபெறுமாயின் இவ் வியந்திரங்களின் மூலமாய் அப்பொழுதைக்கப்பொழுதே கேட்கக் கூடும். எந்த பஞ்சாயத்து போர்டுக்காரராவது தமது வரி வசூலிலிருந்து இப்படிப்பட்ட இயந்திரங்க

ளுக்காக சிலவு செய்ய அதிகாரமுடையவராவர். புத்த காலயங்கள் நிலையாய் நடைபெறுவனவாயில் இராஜ தானி அரசாட்சியார் அவ்வவற்றிற்குத் தக்கவாறு பொருளுதவியுஞ் செய்து வருவார்கள். இவ்வம்சங் களைக் கவனிக்குமிடத்து கிராமவாழ்க்கைக்கு புத்த காலயங்கள் எவ்வளவு முக்கியமானவையோ தெரிந்து கொள்ளலாகும்.

தூய்மை.

சுத்தமாயிருத்தலையே ஆங்கில மொழியில் ஸ்யானிடேஷன் (Sanitation) என்பர். தூய்மை யென்பது இதன் பொருள். இது பலருமறிந்த விஷ யமே. இதற்கு இணையான தமிழ்ப்பதமே தூய்மை யென்பதாம். இங்கிலாந்திலுள்ள பட்டிக்காடுகளைப் பார்த்திருக்கின்றேன். அங்கு வசிப்பவரின் தூய்மை அறிவு (Sanitary conscience) மிக்க சிலாக்கியமா னது. அவர்கள் கிழிசல், கந்தை குப்பை இவற்றை வழிகளில் எறிந்து வருவது பிழையாமென எண் ணுவர். வழிகளில் எச்சல்துப்புவது அவர்கள் அறியா ததே. நமது நாடுகளைப்போல் வெளிப்பிரதேசங்களில் மல மூத்திரங்களைக் கழிக்கமாட்டார்கள். இவ்விஷ யத்தில் நமது நாட்டு பட்டிக்காடுகளின் கதி சகிக்க முடியாததாகும். எங்கு பார்த்தாலும் மனிதர் வரப் போக்குகளுக்கு தடையேற்படும் சந்து பொந்து களே. இதற்கு உதவியாய் பொது நிலத்தை ஆக்கிர மித்துக் கொள்பவைகளுக்குக் கணக்கே இராது.

வீட்டிற்குமுன் ஜலதாரைத் தண்ணீர் ததும்பி நின்று கெடுக்காத வழிகளே யரிது. வீட்டுப் பிள்ளைகளின் மலமூத்திரங்களுக்குப் புகலிடமும் அச்சந்துகளே. இவற்றைக் கூட்டிச் சுத்தப்படுத்தவும் அனுகூலங் குறைவே. சிற்சில விடங்களில் காற்றும், கதிரவ னொளியும் பிரவேசிக்க இடமுமிராது. ஊரைச் சுற்றி லும் பயிரிடப்படும் வயல்களிருப்பதனல் வெள்ளா மைக் காலத்தில் பாதைகளை எருக்குழிகளாய் உபயோகித்து கால்வைப்பதற்கே இடமில்லாது செய்துவைப்பது ஜனங்களுக்கு அசிங்கமாகத் தோ ன்றுதலே கிடையாது. இத்தகைய வழக்கங்களை நீக்கிவிட ஓர் பிடியாய் பத்துபேர் கலந்து முயல்வ தும் இல்லை. கிராமத்தைச் சுற்றிலும் இவ்வாறு நாளுக்குநாள் வியாபித்து வரும் மல மூத்திரங்கள், மழையில் நனைந்து வெய்யலில் உணர்ந்து தூசிமாதிரி கிளம்பி காற்றில் கலந்து ஜனங்களுடைய மூக்கிலும் வாயிலும் அவர்களறியாமலே செல்லும். சப்பாத்தி கள்ளி முதலாகிய முட்செடிகளும் பூண்டுகளும் கிரா மங்களை வளைத்துச் சுற்றி "இனி ஏதடா கதி" என்னு மவ்வளவு இடையூற்றை விளைவித்திருந்தன. தெய் வச்செயலாய் இது ஒருவிதமான புழுவினல் நாசமடை ந்து வருவது நாட்டிற்கு விலையிலாச்செல்வ மென் னத்தகும். இஃதவ்வாறிருக்க ஊரைச் சுற்றிலும், பாழுங் குழிகளிலும், பாழுங் கிணறுகளிலும் நீர் நின்று குளிர்ச்சுர (Malaria) கொசுக்களுக்கு இருப்

பிடமும் வளர்ப்பிடமுமா யிருப்பது சுகாதாரத்திற்கு மற்றுமொரு அபாயகரமாகின்ற விஷயமே. எருக்குழிகளில் இருக்கும் ஈரமும் இக்கொசுக்களுக்கு இருப்பிடமாகின்றது. இந்நிலைமைகளில், காலரா, ப்ளேக், பெரியம்மையைப் போன்ற கொடிய வியாதிகள் தோன்றுமாயின், இனி சொல்லவேண்டியதில்லை. தீயிக்குக் காற்று உதவியவாறே. இப்பிரமாதங்கள் நினைவுக்கு வருமாயின் இந்நிலைமைகளைச் சீர்ப்படுத்த எத்தகைய பெரும் முயற்சிகள் வேண்டியிருக்குமென்பதும் தெளிவாகின்றது. ஆக்கிரமித்துள்ள நிலப்பரப்புகளை மீட்டுக்கொள்வதும், தினந்தோறும் அல்லது இடையிடையே பாதைகளைக் கூட்டுதல், பாழுங் கிணறுகள், குழிகள் முதலியவற்றை மண்ணைப்போட்டு மூடிவிடுதல், அசுத்த ஜலம் இறங்கும் குழிகள் ஜலதாரைகள் இவைகளிலுள்ள அழுக்குத் தண்ணீரை அடிக்கடி எடுத்து சுத்தப்படுத்துதல், சாத்தியமான பொழுது வீதிகளிலும், பாதைகளினோரங்களிலும், இருபுறங்களிலும், வாய்க்கால்களை வெட்டி அவற்றின் வழியாய்க் கிராமத்தில் திரண்டுவரும் அழுக்கு நீரை வெளிப்படுத்தல், எருக்குழிகளை கிராமத்திற்குத் தூரமான விடங்களில் குழிகளைத் தோண்டி அவற்றின் மேலாக ஒரு திரை மண்ணால் மூடிவைத்தல், முதலாகிய வேலைகளெல்லாம் கிராம பஞ்சாயத்துகள் கவனித்துச் செய்யவேண்டிய காரியங்களாகும்.

மலங்கழிக்குமிடங்கள்.

மலங்கழிக்கு மிடங்களைச் செம்மை செய்தல் எல்லாவற்றையும் விட முக்கியமானது. இவ்விஷயத்தில் நமது நாட்டு மாந்தர் வெட்கமென்பதே இல்லாது நடந்துவருவது மானத்திற்கே குறைவாகின்றது. இக்குறைவை சமூகத்தில் ஜனத்திரள் போக்கடித்துக்கொள்ளும்வரையில் எவ்வித முயற்சியும் பயனளிக்காதென்பது திண்ணம். முதன் முதலாய்த் தாய்தந்தையர் தமது குழந்தைகளை தெருக்களில் மல மூத்திரத்தைக் கழிக்கவிடாமல் பழக்குவாராயின் நாளடைவில் வயது வரவே அவர்களுக்கே வெட்கந் தோன்றி மரியாதையுடன் நடந்துவர சிறுவர் சிறுமிகள் கற்றுக்கொள்வார்கள். கற்றவராயினும் தத்தம் வீட்டுமலங்கழிக்கும் இடங்களைச் சுத்தமாய் வைத்திருப்பதும் அரிதே. மலத்தின் மேல் அமரும் ஈக்கள் கடைசியாய் சமைத்த சமையல்களின்மேல் அமர்ந்து வருவது அபூருபமான காட்சியன்று. கக்கூஸுகளைச் சுத்தஞ் செய்யுந் தோட்டிகளுக்கு கடைசியில் வேண்டியமட்டுந் தண்ணீரையேனும் ஊற்றமாட்டார்கள். பட்டிக் காடுகளில் இவ்வேலைக்கு வேண்டிய கக்கூஸுகள் இல்லையெனவே கூறலாகும். கிராமபஞ்சாயத்துகள் உள்ள விடங்களிலும் நூற்றிற்கு பத்திலேனும் வெளிக்குச் செல்ல மறைவிடங்களைக் கட்டியிருக்கின்றார்களோ வென்பது சந்தேகமே. மனிதர்களுடைய

மலத்தில் உள்ள எருவின் விலே ஜனங்களுக்குத் தெரியாமற் போவது இந்நிலைமைக்கு ஓர் காரணமாகின்றது. ஜப்பான் தேசத்தில் கல்வி கற்றுவரும் இளைஞர்கள் மனிதர்கள் மலத்தை கைப்பிடியுள்ள இருப்புத்தொட்டிகளால், நமது பக்கத்தில் பசுக்களின் சாணத்தை யெடுத்துப் போவதைப்போல், வீடுகளிலிருந்து வயல்களுக்குச் சுமந்து செல்வார்கள். இங்கிலாந்தில் ஜனங்களுக்கு சுத்தமாயிருக்கும் அறிவு அதிகமென்றேன். நமது பக்கத்தைப்போல் அந்தந்த நாட்டு பட்டிக்காடுகளில் கக்கூஸுகளைச் சுத்தஞ்செய்ய பறையர் சக்கிலிகளைப் போன்ற தீண்டப்படாத ஜாதியார் பிரத்தியேகமாய்க் கிடையவே கிடையாது. இவ்வேலையை அவ்வவ் வீட்டார் தமக்குத் தாமாகவே அசிங்கப்படாமல் சீராய் செம்மைப் படுத்திக் கொள்வார்கள். வீட்டின் பின்கொல்லையில் மரக்குடிசையொன்றை நிறுத்தி, அதனுள் பெரிய துவாரமுள்ள மரபெஞ்சுபலகை யொன்றையும், அதன்கீழ் சாம்பல் நிறைத்த (பாதி வரையிலும்) ஓர் கைப்பிடியுள்ள தொட்டியும், வைத்திருப்பார்கள். அதே குடிசையில் ஓர் மூலையில் எண்ணெய் டப்பாவைப் போன்ற பாத்திரத்தில் சாம்பலும், மர அகப்பையுமிருக்கும். துவாரமுள்ள அப்பலகையின்மேல் உட்கார்ந்து மல விசர்ஜனஞ் செய்தபின்பு அருகே நிற்கும் தகர டப்பாவிலிருந்தும் சாம்பலே மர அகப்பையால் எடுத்து மலத்தின்மேல் போடுவார்கள்.

சாம்பலுக்கு துர்நாற்றத்தைப் போக்கடிக்கும் வல்லமையிருக்கின்றது. வீட்டிலுள்ளோர் யாராயினும், ஆணுகிலும்,பெண்ணுகிலும்,இடையிடையே, பெஞ்சு பலகையின் கீழுள்ள பக்கெட்டை கைப்பிடியால் வெளியே யிழுத்து சற்றே அப்பாலிருக்கும் குழியில் கவிழ்த்து மண்ணைப்போட்டு மூடிவிடுவார்கள். பின்னுல் உடனே சோப்பால் கைகளைக் கழுவிக்கொள்வார்கள். குழியிலுள்ள எருவு நாளடைவில் கொல்லையில் வளர்க்கும் காய்கரித் தோட்டத்திற்கு விலையுள்ள எருவாக மாறும். நமது நாட்டில் கிராம பஞ்சாயத்துகள் இருக்கும் இடங்களிலும்-அவ்வளவேன்-முனிஸிபாலிட்டிகளிலும், கக்கூஸுகளைக் கட்டி வைப்பதில் ஒழுங்கென்பது சிறிதேனுங் காண்பதில்லை. பலவிடங்களில் நாற்புரங்களிலும் சுவர் எழுப்பியுள்ள கட்டடமே கக்கூஸ் என்ற பெயர் பெறும். உட்சென்றவர்களெல்லாம் ஒன்ருய் உட்கார்ந்துவிடவேண்டியதே. இவ்வழக்கத்தினுல் மரியாதை வெட்கம் என்பவை அடியுடன்நசிக்கின்றன. உள்ளேயிருந்து வெளியே வரும் ஜனங்களுடைய கால்களில் ஒட்டிக்கொண்டு வரும் கசுமலம் வீடுகள் வரையிலும் வராமல் தப்பாது. வீட்டு ஆண்மக்களும், கிராம பஞ்சாயத்து சபைகளும் இக்காரிய முறையில் ஒழுங்குபடுத்த வேண்டியவை எவ்வளவோ யிருக்கின்றன. வீட்டுக் கொல்லைகளிலோ அல்லது வைக்கோற்போர்களினருகேயோ, குழிகளைத் தோ

ண்டி குறுக்கே இரண்டு கற்களைப்போட்டுச் சுற்றிலும் மறைவாயிருக்க சுவர்களை யெழுப்பி அவ்வறைகளையே கக்கூஸுகளாக வழங்கி வரலாம். உபயோகப்படுத்தும் பொழுதெல்லாம் உடனுக்குடனே சிறிது மண்ணையோ சாம்பலையோ, அதன் மேல் போட்டுவிடுவதானல், தோட்டி யென்பவனொருவனில்லாமலே அஸஹ்யமாகாவண்ணம், குடி ஜனங்கள் வாழ்வதற்கு வழியாயிருக்கும்.

கிராம பஞ்சாயத்துக்காரர் கக்கூஸுகளைப் புதிய மாதிரியாகக் கட்ட வைக்கலாகும். தரையில் 20 அடி யாழத்துடன் சிறிது அகன்ற குழிகளை வெட்டி அதன்மேல் ஓர் துவாரமுள்ள கல்லையிட்டு இத்தகைய குழிகளை வரிசையாய்த் தோண்டி சுற்றிலும் சுவர்களினல் அறை அறைகளாக வகுத்து விடுவதே இப்புதிய மாதிரியாகும். கும்பகோணத்தில் சில நாட்களுக்குமுன் நடந்த மகாமக யாத்திரையின் ஜனத்திரளுக்கு இத்தகைய கக்கூஸுகளையே நிலத்தில் வெட்டி வழங்கினர். இவ்வுபாயத்தினல் தோட்டியினுதவியே தேவையிராது. மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கோ ஓர் முறை மேல்கற்களை எடுத்துவிட்டு உள்ளிருக்கும் எருவை யெடுத்து உபயோகித்துக் கொள்ளலாம். இவ் வழக்கத்தினல் பஞ்சாயத்துசபைக்கு ஆதாயமும் வரும். மறுபடியும் அக்குழிகளை அதே கற்களினல் மூடி முன்போல் வழங்கலாம். கக்

கூஸைச் சுத்தஞ்செய்ய பிரத்தியேகமாய்த் தோட்டி யொருவன் தேவையென்ற எண்ணமிருக்கும் வரை யில் நமது 'ரோங்தை' யான வேலேகளேத் துலேப்பது வுஞ் சாத்தியமாகாது. தீண்டாமையென்ற கொடுமை யைப் போக்கடிப்பதும் கடினமேயாகின்றது. மனி தர்களுடைய மலம் எருவென்று பாவித்து அவ்வவ் வீட்டுக்காரர் இங்கிலாந்து, ஜப்பான் தேசங்களி லிருப்பதைப்போல் மாந்தர் தாமாகவே கவனிப்பா ராயின் இப்பெரிய முயற்சிக்கு வழியும்ஏற்படும். இவ் விஷயங்களில் சமூகத்தில் ஜனங்களுடைய மனோநிலே களில் மாறுதல் தோன்றினலல்லது வேறு கதியே கிடையாது. சுகாதார டிபார்ட்டுமெண்டாரை விசா ரித்தால் இத்தகைய கக்கூஸுகளேக்கட்ட எஸ்டி மேட்டுகளும், ப்ளானுகளேயுஞ் சித்தஞ் செய்து கொடுப்பார்கள். இப்படிப்பட்ட கக்கூஸுகளே ஒவ் வொரு பஞ்சாயத்துக்காரரும் முக்கியமான விடங் களிலிலாயினுங் கட்டுவதற்கு முயலவேண்டும்.

வதைச் சாலேகள்.

உண்பதற்காக செம்மறியாடுகள், வெள்ளாடு கள், சில விடங்களில் பெரிய மாடுகள், எருதுகள், ஒவ்வோர் கிராமத்திலும் தினந்தோறுங் கொல்லப் படுகின்றன. புலால் விற்று வாழ்வை நடத்திவரும் கசாப்புக்காரர் சில ஊர்களிலிருக்கின்றார்கள். இப் பிராணிகளே அவரவர் முறையின்றித்தமக்குத்தோன் றியவாறு எவ்விடங்களிலேயும் கொன்று வருவார்

களாகில் கிராமத்தில் கசுமலம் அதிகரித்து வருவது திண்ணம். இதைத் தடுக்கவேண்டி இப்பிராணிகளை வதைக்க ஊருக்கு கண்ணுக்கு அகப்படாத தூரத்தில் ஓர் இடத்தை ஏற்படுத்திஅதைச் சரியாய்க் கட்டித் தினந்தோறும்தண்ணீரால் கழுவிசுத்தமாய் வைத்திருக்கவேண்டும். இதுவும் அந்தந்தகிராம பஞ்சாயத்து சபைகள் செய்துவரவேண்டிய வேலையே.

சந்தைகள்.

ஜனங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கவும் விற்கவும் சந்தைகள் முக்கியமான தென்பதை அறியாதவர் அரிது. சந்தைகளில்இதைவிடமேலான உபயோகம் மற்றொன்றுளது. குயவர் கம்மாளர் நெசவு நெய்பவர் மரவேலையாளர் முதலிய கைத்தொழிலாளர் தாம் செய்த பொருள்களைக் கொண்டு வந்து விற்று அதனல் உண்டுடுக்க வழியுண்டாவது சந்தைகளினுலே யாகும். இப்படிப்பட்ட சந்தைகள் ஒவ்வொரு தாலூக்காவிலும், ஆங்காங்கு சில பெரிய ஊர்களில் கூடினுற் போதும். சந்தைகளுக்குச் சாமான்களைக்கொண்டுவருவதற்காக வண்டிப்பாதைகளைச் செம்மை செய்து வைத்தல், அங்கு திரண்ட ஜனத்திரளுக்கும், வாயிலாப்பிராணிகட்கும் தண்ணீர் வசதிகளை யமைத்தல், விற்பனைக்காக வந்திருக்கும் சாமான்களுக்கு வேண்டிய கடைகளை யமர்த்தல், விற்பனைக்காக வரும் பசுக்களுக்கு நிழலைத் தரும் செடிகளை நட்டு பாதுகாத்தல், சாமான்களைக்

கொண்டுவந்த வண்டிகள் நிற்கத் தகுந்த நீர் வசதி யுடன் வண்டிமோடுகளை நிலைநிறுத்தல், முதலாகிய வேலைகளை நடத்தி வைத்தல், பஞ்சாயத்துக்களுடைய வேலைகளைச் சேர்ந்தனவேயாகும்.

தேர் திருநாள்கள்.

திருவிழாக்கள் பெரிய சந்தைகள் ஆண்டாண்டு நடைபெறும் கிராமங்கள், நாடு முழுவதிலும் ஆங் காங்கு இருந்தே தீரும். இச்சமயத்தில் யாத்திரிகர் கணக்கின்றி வருவார்கள். அங்ஙனம் வருவோர்க்கு கக்கூஸுகள், நீர் வசதி, விளக்கு வைத்தல், முத லாகிய அனுகூலங்களை யுண்டாக்கிக் கொடுப்பதும், அவ்வவ்விடத்து போர்டாரைச் சேர்ந்தது. பட்டிக் காடுகளில் நடைபெறுஞ் சிறிய சிறிய திருவிழாக் களுக்கு இத்தகைய வசதிகளை யுண்டாக்க அவ்வவ் விடத்து கிராம பஞ்சாயத்துக்காரர் கையாண்டு வர வேண்டிய விஷயங்களாகும். பெரிய திருவிழாக்களை ஜில்லா போர்டுக்காரர் கவனித்து வருவார்கள்.

உடற்பயிற்சி சாலைகள்.

நாட்டின் வளர்ச்சிக்கு அதில் வாழும் குடிமக் கள் உடல் வன்மையுடையவராயிருத்தலே குறிப்பா கும். இவ்வுடல், சுகங்களை யனுபவிப்பதற்கென் றெண்ணுவோர் அறிவற்றவர். நாட்டின் நன்மையை நாடி நல்ல காரியங்களைச் செய்ய உதவுவதே இவ் வுடலின் குறிப்பென்பதை யுணர்ந்தோர் அறிவாளர். சுகங்களை மிதமாய் அனுபவித்து சந்தோஷப்படுவ

தற்காயினும், அல்லது இதையே தக்க கருவியென எண்ணி பேரின்பத்தை யடைய முயல்வதாயினும், உடலுக்கு வலுவில்லாது போனல் பயன்படாது. இத்தகைய வல்லமை, அப்பியாசத்தினுலும், பயிற்சியினுலும் வரப்பட்டது. இப்பயிற்சிக்கு பயிற்சிச் சாலைகள் அவசியமானவை. இப்பயிற்சி சாலைகள் விஜய நகர சாம்பிராச்சிய நாளிலும் நாடெங்கும் நிலை பெற்று வந்தன. பயிற்சிச் சாலைகளின் பலவிதப் பயிற்சிகளினுல் அந்நாள் மனிதர் உடல் வன்மை யுடையவராய் நெடுநாள் வாழ்ந்திருந்தனர். நாட்டின் பாதுகாப்புக்காக சைனியத்தைத் திரட்டுதல் அக்காலத்தில் மிக எளிதாயிருந்தது. இந்நாளைய மாந்தரின் பலமோ மிகக் குறைந்ததாயிருக்கின்றது. சுயராச்சியம் கிடைத்தபொழுது நாட்டின் பாதுகாப்புக்கு வேண்டிய சைனியம் முழுவதையும் நாமாகவே திரட்டி சித்தப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். பலவான்களான இளைஞர் கிராமங்களி லிருந்து வளர்ந்து வந்தாலன்றி இது சாத்திய மாகாது. ஆனதுபற்றியே இத்தகைய உடற்பயிற்சிச் சாலைகளை கிராமங்கள்தோறும் நிலைநாட்டி அவற்றிற்கு வேண்டிய உதவிப் பொருள்களை யமர்த்திக் காப்பதும் கிராமபஞ்சாயத்துக்களைச் சேர்ந்ததே.

உத்தியான வனங்கள்.

ஜனங்களுடைய மனதுக்கு சந்தோஷத்தை யுண்டாக்கக் கூடியவை—எனில் வாழ்வில் ஆனந்த

மும், ஆரோக்கியத்தையு முண்டுபடுத்துபவை—உத்தியான வனங்கள். (பூஞ்சோலைகள்). சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய நகர்களில் இப்படிப்பட்ட பூஞ்சோலைகளை யுண்டாக்கி அவற்றில் சங்கீதம், மேளங்களைப் போன்ற செவிப்புலனுக்கு இனிமை தருங் கலைகளை மாந்தர்க்கு ஆனந்தமளிப்பதற்கெனவே நடத்திவருவார்கள். இத்தகைய அனுகூலங்கள் ஜனங்களுடைய அவாவைப் பெருக்கி அவர்களுடைய இயல்புக்கு இளமையையுந் தருகின்றன. பலவிதங்களில் மனது தூய்மையடையவும் இவை விலைமதிக்கத்தகாத உதவியைத் தருவனவாகின்றன. ஆனதுபற்றியே பூஞ்சோலைகளை யமர்த்துவது குடிமக்கள் நன்மையை நாடிய விஷயங்களென்று லோகல் போர்டுக்காருடைய வேலைகளிலொன்ருய் விதிக்கப்பட்டு இருக்கிறது. நீர் வசதி ஏராளமாயுள்ள விடங்களிலும், ஆற்றங்கரையிலுள்ள கிராமங்களிலும் இத்தகைய பூஞ்சோலைகளை நாட்டவைப்பது அந்தந்த பஞ்சாயத்து போர்டுக்குக் கஷ்டமாயிராது.

சீரான வீடுகள்.

கிராமங்களை ஒழுங்கான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமெனில், இப்பொழுதிருக்கும் வீடுகளைத் தரைமட்டம் இடித்து வீழ்த்தி காற்றும், வெளிச்சமும் ஏராளமாக உட்புகும்வண்ணம் வசதிகளை ஏற்படுத்தி புதிதான வீடுகளை, வரிசையாய்க் கட்டிவைக்கவேண்

டும். இவ்வேலைக்கு கிராமத்தைச் சுற்றியிருக்கும் இடங்களை விரிவாக்கி அவற்றை வீட்டு மனைகளாக வகுத்து தேவையானவருக்கு பங்கிட்டுக் கொடுக்கலாம். புதிய வீடுகளைக்கட்டி கவர்ன்மெண்டுக்காரரும் பஞ்சாயத்துப் போர்டுக்காரருக்கு வேண்டிய கடனையுமளிப்பர். இக்கடனை வாங்கி சற்றே உயர்ந்த வட்டிக்கு வீட்டைக் கட்டிக்கொள்ள விரும்புங் குடியானவர்க்குக் கடனுகக்கொடுத்து வருடத்திற்கு இவ்வளவென்று தீர்மானித்து வட்டியையும், முதலையும், நீண்டகாலம் வசூல் செய்துவிடலாம். இப்படி வீடுகளைக் கட்டுவதற்கு முன்பாக கவர்ன்மெண்டு சுகாதாரக் கிளையாருடன் கலந்து அவர்கள் வரைந்து கொடுக்கும் பிளான்போலவே வீடுகளைக் கட்டவேண்டும். இப்பிளான்களில் புதிய விதமான கக்கூஸுகளைக் கட்டுவதற்கும், அழுக்குநீர் வெளியே செல்ல புதிய வழிகளையும், கண்களுக்கு அசங்கியமாகாத யோசனைகளை, சுகாதாரக் கிளை உத்தியோகஸ்தர் காண்பித்து வருவார்கள். கிராம வாழ் நிலங்களை கண்களுக்கு இனிமையாக யமர்த்தி இவ்வண்ணம் செம்மைசெய்தல் கிராம பஞ்சாயத்துக்காரருடைய வேலை. அக்கரை, ஒற்றுமையான எண்ணம், உதார குணம், அழகில் விருப்பம், சமூகத்தில் ஜனங்களுக்குண்டாகுமானுல் பயமில்லாமல் இவ்வேலைகளைச் சாதித்துக்கொள்ளலாம். இவ்வண்ணம் கிராமங்களைச் சீர்ப்படுத்த அந்தந்தக் கிராமத்துப் பஞ்சாயத்து சபை

யார் முனைந்து வேலை செய்தாலன்றி நாடு வளர்ச்சி யடையாது.

தண்ணீர் அனுகூலங்கள்.

அந்தந்த கிராமங்களில் ஜனங்களுடைய ஸ்நான பானங்களுக்கும் (நீர் ஆடல், குடிப்பது), துணிகளைத்தோய்ப்பதற்கும், ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் காட்டி கழுவுவதற்கும், தக்க அனுகூலங்களை ஏற்படுத்துவதும் பட்டிக்காட்டு பஞ்சாயத்துக்களுடைய வேலையே. நடைக்கிணறுகள், சேந்து கிணறுகள், ஏரிகள், வாய்க்கால்கள், கவலைக் கிணறுகள், உள்ள விடங்களில் ஆறுகள், அவ்வாறுகளில் நீர்வற்றினுல் ஊற்றுகள், இவையாவும் கிராமங்களில் உள்ள நீர்நிலை யாதாரங்கள். கிணற்றுகளில் பல உப்புத் தண்ணீர்உடையனவாயிருக்கின்றன. களிமண்வயல்களுள்ள கிராமங்களில் தண்ணீர்க்குறை யதிகம். இப்படிப்பட்ட கிராமங்களில் இறங்குங் கிணறு ஒன்றிருக்குமாயின், குடிப்பதற்கும், துணிகள் தோய்ப்பதற்கும், நீராடுவதற்கும், நாற்காற் பிராணிகளைக் கழுவுவதற்கும், அக்கிணற்று நீரையே வழங்கி வருவார்கள். நீர்க்குழிகள், ஏரிகள், வாய்க்கால்கள், ஆறுகள் போன்ற நீர் நிலைகளில் நமது ஜனங்கள் மல ஜலங்கழிப்பது மிகக் கெட்ட பழக்கமுமாகின்றது. வடக்கே கோதாவரி, கிருஷ்ணு, தெற்கே காவேரியைப் போன்ற புண்ணிய நதிகளும் இத்தகைய அவமானத்திற் குட்படுவது யாவருங் கண்ட

செய்தியேயாகும். இறங்குங்கிணறுகளிலும், குட்டைகளிலும், ஏரிகளிலும், ஜனங்கள் தண்ணீர்கொண்டு வரச் செல்கையில் தமது கால்களைத் தண்ணீரில் நனைக்காமல் வராமற் தப்பாது. தாம் தண்ணீர் கொண்டுவரச் சுமந்து செல்லும் குடங்களையும், மட்பாண்டங்களையும், அந்நீரிலேயே கழுவி, கழுவின அழுக்கு நீரை அத்தண்ணீரிலேயே ஊற்றுவார்கள். வடி கட்டுவதற்காக உபயோகிக்குந் துணியையும் அதிலேயே பிழிந்து வருவது கெடுதியெனவுந் தோன்ரூது. அவ்வண்ணம் மொண்டு கொள்கின்ற நீரைக் கையாலள்ளி வாயில்ஊற்றிக்கொண்டு கொப்பளித்து அதிலேயே உமிழ்வதும் பலர் செய்யும்வேலையே. இத்தகைய துர்நடத்தைகள் அந்தந்த கிராமத்தின் சுகாதாரத்திற்கே மிக்க அபாயத்தைத் தருவனவாகும். காலரா புழுக்கள் பிறந்து வளர்வது நீரிலேயே. குளிர்ச்சுர கொஸுக்களுக்கும் தண்ணீரே பிறப்பிடம். இப்படியிருக்க ஜனங்கள் குடிப்பதற்காக வழங்கி வரும் தண்ணீர் சுத்தமா யிருக்கவேண்டியது எவ்வளவு முக்கியான காரியமென்பதை வாசிப்போர் தெரிந்து கொள்ளலாம். இறைக்குங் கிணரூயிருந்தால் இப்படிப்பட்ட பிரமாதங்களுக்கு இடமே குறையுமென்னலாம். குழாய்க் கிணறுகள் அவற்றைவிட மேலானவையாகும். இவற்றை நாற்றுக்கணக்கான அடிகள் வரையிலும் இறக்கி நீரின் மட்டத்திலிருந்து நிலமட்டம் வரையில் குழாய்களை ஒன்றின்மே

லொன்ருய் நிறுத்தி கடைசியாக மேல் பாகத்தில் ஒரு குழாயைத் திருப்பி அதற்கு 'பம்பு' ஒன்றை பிணைத்து அதன் உதவியால் தண்ணீரைப் பாத்திரத்திற்குள் வரவழைத்துக்கொள்வது புதியதோர் தந்திரம். இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகளிலிருந்து வரும் தண்ணீர் சுத்தமானதாய் ஆரோக்கியத்தைத் தருவதாகின்றது. அதற்கு முன்பாக நடை கிணறுகளால் வரும் நரம்புச் சிலந்தியென்ற வியாதி இப்பொழுது முற்றிலும் மறைந்துவிட்டது. முக்கியமாய் களிமண் நிலங்களுள்ள கிராமங்களில் இப்படிப்பட்ட கிணறுகளைத் துளைப்பது மிக்க அவசரமான வேலையாகும். முன் நடந்தேறிய கும்பகோண மகாமக உற்சவத்திலும், திரண்டுவரும் ஜனங்களுடைய உபயோகத்திற் கெனவே இக் குழாய்க் கிணறுகள் பலவற்றைத் துளைத்திருந்தனர். சென்ற பத்து வருடங்களாக அந்தந்த போர்டார் தத்தம் பிரதேசங்களில் வெட்டிய குழாய் கிணறுகளின் தொகை உயர்ந்தே வந்திருக்கின்றது. நம்நாட்டில் தீண்டப்படாதாரென்பவர்களுக்கு வேறு வேருக கிணறுகளை வெட்டிக்கொடுக்கவேண்டுமென்பது ஓர் இடையூருகவிருக்கின்றது. போர்டுக்காரரால் அமர்த்தப்பட்ட எக் கிணற்றிலாயினும் தீண்டப்படாதார் கூட உபயோகித்துக்கொள்ள எத்தகைய தடையும் இருக்கக்கூடாதென்று புதியனவான சாசனங்கள் ஏற்படுகின்றன. இது தர்மமாகும். அப்படியிருந்தாலும் தீன்

டப்படாதார் ஊர்க்கிணறுகளை அணுகவே யணுக மாட்டார்கள். உயர்ந்த ஜாதியார் என்றவர் யுகயுகங் களாய் அவர்களை இழிவாய் விலக்கியிருப்பதே இத ற்கு மூலகாரணமென்று மகாத்துமா காந்தியைப் போன்ற தேசீயத் தலைவரின் உண்மையான எண் ணமாயிருக்கின்றது. இந்நிலைமைகளை ஏற்றத்தாழ் வின்றி பார்ப்போமாகில் கிராம ஜனங்களுக்கு நல்ல தண்ணீரைச் சம்பாதித்துக் கொடுப்பது (கிடைக்கும் படி உதவுவது) பஞ்சாயத்துக்காரருடைய வேலை களில் எல்லாவற்றைவிட மிகச் சிறந்த தென்பது வெளியாகின்றது. இவ்விஷயத்திலும் மாந்தருடைய மன ஒழுக்கத்தில் மாறுதல் தோன்றினலொழிய எத் தனை முயற்சிகளாயினும் வீணாய்ப்போகுமென்பதற் கையமேயில்லை.

வேறு காரியங்கள்.

இவையுமன்றி அக்கரை வளர வளர பத்து பேர் நன்மைக்காக பட்டிக்காடு பட்டிக்காடாய்ச் சென்று சாதிக்கவேண்டிய வேலைகள் எத்தனையோ விருக்கின்றன. பட்டிக்காட்டு ரோட்டுகளுக்கு இரு புறங்களிலும் மரங்களை நட்டுவைத்தல், ஜனசமூகத் திற்கு உபயோகப்படும் வேலிகள், தோப்புகள், புறம்போக்கு நிலங்கள், மேய உதவும் வயல்கள், கட் டடங்கள், சாவடிகள் நீரோடைகள் முதலியவற்றிற் குக் குறுக்காய் போட்டிருக்கும் கற்பரப்புகள் முத லானவற்றை தம் சுவாதீனத்திற்குட்படுத்தி பாது

காத்து வருதல், கிராமத்தைச் சுற்றிலுமுள்ள பிர தேசங்களை விரிவுடையனவாகச் செய்து அவ்விடங் களில் பலரும் வீடுகள் கட்டிக்கொள்ள இஷ்டப் பட்டபொழுது கோணமாணைகள் சந்துபொந்துகள் இல்லாமல் அழுக்குநீர் ஜலதாரைகளுக்கும், கக்கூ ஸுகளுக்கும் சரியான இடங்களையமர்த்தி அழகான அகன்ற தெருக்களுடன் வீடுகள் கட்டிக்கொள்ள நியமித்து உதவுதல், ஜனன மரண எண்களை மாதந் தோறும் கவனித்து அதனுல் பட்டிக்காட்டு ஆரோக் கிய நிலைமைகளை பார்வையிலிருத்தித் தக்கபடி தவிர்த்தல், நாற்காற் பிராணிகளுக்காக ஏற்பட்டி ருக்கும் பௌண்டுகளை வசப்படுத்திக் கொண்டு சமா ளித்துவருதல்,திருடர்தொல்லையையொழிக்கவேண்டி கிராமத்தைக் காவலாளரால் காத்து வருதல், குரங்கு களைப்பிடித்துக் காடேற்றுதல், வேளாண்மை வாழ் வைக் கவனித்து அதன் வளர்ச்சிக்கு வேண்டிய வழிகளைத் தேடி உதவுவது, பசுக்களின் நோய்க ளுக்கு சிகிச்சைகளைக் கண்டுபிடித்து அவற்றின் க்ஷேமத்தைக் கவனித்து வருதல், மாந்தருடைய ஜீவிய நிலைகளுக்காக சிறிய சிறிய கைத்தொழில் களைக் கண்டுபிடித்து பெருகவைத்துச் சந்தோஷ மடையச் செய்தல், பள்ளிக்கூடங்களையும் பட்டிக் காட்டு ஆஸ்பத்திரிகளையும் நிறுத்தி மேற்பார்த்து வருதல், இவைமுதலாகிய ஜனஹித காரியங்களனைத் தையும் லோகல் கவர்ன்மெண்டார் இயற்றியுள்ள

விதிகளுக்குட்பட்டு நடத்திவைக்க கிராமபஞ்சாயத்துப் போர்டுக்காரருக்கு சுதந்திரம் உண்டு.

கிராமத்தைச்சேர்ந்த காடுகள்.

வேளாளரின் வேலைகளுக்காக, வேளாண்மைக் கருவிகள், அடுப்பெறிக்க விறகு, பசுக்களுக்கு புல், வேண்டுமெனில், அந்தந்தக் கிராமத்து காடுகளே ஆதாரங்களாகுவன. இத்தகைய காடுகள் பல பாரெஸ்டு பஞ்சாயத்து சபைகளென்ற தனிப்பட்ட சிறிய சிறிய சபைகளின் அதிகாரத்துக்குட்பட் டிருக்கின்றன. அத்தகைய காடுகளை கிராம பஞ்சாயத்துகளுக்குத் தகுந்த விதிகளுக்கு உட்பட்டு லோகல் கவர்ன்மெண்டார் சுவாதீனம் செய்துவைக்கச் சுதந்திரமுடையவர்களாவர். அவ்வண்ணம் சுவாதீனமாகும் பொழுது அக்காடுகளைவளர்த்து போஷித்து ஜனங்களுக்கு உபயோகமாகும் வண்ணம் உழைத்துவர கிராம பஞ்சாயத்து சபைகளுக்கு அதிகாரமுண்டு.

வேளாண்மை ஜலாதாரங்கள்.

பட்டிக்காட்டு வேளாண்மைக்கு, ஏரிகள், குட்டைகள், வாய்க்கால்களைப் போன்ற நீர் நிறைந்த விடங்கள் உயிரொளி தருபவையாம். இவற்றை நல்ல நிலைமையில் வைத்திருக்கும் வேலையை ரிவின்யூ இலாக்காக்காரர் நடத்தி வருகின்றனர். இவ்வழக்கத்தினல் கிராம முனிசிப்பும், தண்ணீர் பாய்ச்சுவோனும், அவர்களுக்குத் தோன்றிய வண்ணம் தண்ணீரை வேளாளருக்குப் பங்கிட்டுக் கொடுப்பர்.

இதனுல் சிற்சில ஊர்களில் இடையூறுகள் உண்டா கின்றன. இவ் விடுக்கண்களைத் தவிர்ப்பதற்கெனவே ஆங்காங்கு சில கிராமங்களில் இர்ரிகேஷன் பஞ்சாயத்து சபைகள் தோன்றியிருப்பது. இவற்றிற்குப் பதிலாய் இக்காரியங்களை கிராம பஞ்சாயத்துக்காரருக்கே ஒப்புவித்து நடத்திவைக்க வேண்டுமென்பதற்கு லோகல் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு. அவ்வண்ணம் வெளியானபோது பஞ்சாயத்து சபைகள் செய்து வரும் காரிய வரிசையில் இது மற்றென்ருக விருக்கும். கிராம பஞ்சாயத்துக்கள் இல்லாத விடங்களில் மேற்கூறிய காரியங்களனைத்தையும் டிஸ்ட்ரிக்ட் போர்டுக்காரரே நடத்திவரவேண்டியதென்று காட்டியுள்ளோம். இதற்கு இசைந்தாற்போல வியாக்ஸினேட்டர்களை (அம்மை குத்துவோரை) நியமித்து குழந்தைகளுக்கு அம்மைப்பால் போட வைப்பதும் அவருடைய வேலையே.

டிஸ்டிரிக்டு போர்டுக்காரர் செய்யவேண்டிய காரியங்கள் பின்னுஞ் சிலவிருக்கின்றன. ஹெல்தாபீஸர்களுடைய வேலைக்காரர் சம்பளங்கள், பிரயாண பத்தாப்பணங்களைக் கொடுத்தல், ஜில்லா முழுவதற்கும் அவசரமாய் வேண்டியபொழுது எக்காலத்திலேனும், ஜனங்களுடைய ஆரோக்கியத்திற்கு அபாயம் நேரிடுமாகில் அவற்றை யகற்ற அதிகப்பட்ட வைத்தியர்களையும், மந்திரசாநிகளையும், வியாக்ஸினேட்டர்களையும், நியமித்து நல்வழிப் படுத்தல்,

தக்கவர்களைத் தேடி இவ்வேலைகளில் நன்றாகப் பழக்கி வேலைகளளித்தல், பெரிய ஆஸ்பத்திரிகளை நிலைவித்து சிகிச்சை முறைகளையமர்த்தி நடத்துவது, பசு வைத்தியசாலைகளை ஸ்தாபித்து வாயில்லாப் பிராணிகளின் சிகிச்சைக்கு வேண்டிய அனுகூலங்களை யுண்டாக்குதல், ஜில்லாவில் முக்கியமாய் வேண்டிய விடங்களில் நீர் நிலைகளை யுண்டாக்கி அங்கு குழாய்களை வைத்து அவற்றின் வழியாய்க் குடிப்பதற்கு ஜனங்களுக்கு சுத்தமான தண்ணீரைத் தருவித்து உதவுவது, ரைல்வழிகள் டிராம்வண்டிகள், மோட்டார் வண்டிகளைப்போன்ற பிரயாண சாதனங்களைச் சேகரித்து நடத்துவது, முதலாகிய வேலைகளே டிஸ்டிரிக்டு போர்டார் செய்யக்கூடியவை. இத்தகைய முயற்சிகள் ஜில்லா முழுவதிற்கும் உபயோகப்படுவனவாகும். கிராம பஞ்சாயத்துகள் சிறிய சபைகளானதினால் இத்தகைய பெரிய வேலைகள் டிஸ்டிரிக்டு போர்டார் மேல் விழுவது.

இதுவேயன்றி. லோகல் போர்டு ஆக்டில் கூறியிராத மற்ற எவ்வேலையை யாயினும், ஆட்சி செய்யும் மற்றெக் கிளை காரியங்களாயினும், லோகல் கவர்ன்மெண்டுக்காரர், எந்த போர்டுக்காகிலும் ஒப்புவித்து நடத்திவைக்க வேண்டுமென்று உத்திரவிட சுதந்திரமுடையவர். ஜனங்களுடைய அறிவொழுக்கமும், தியாக புத்தியும், பிறர் நன்மையடைய வேண்டு

மென்ற எண்ணமும், வளர்ந்து வருமாயின், போலீஸ் கிளையைப்போன்ற மாந்தரைக் காக்கும் காரியத்தையே கவர்ன் மெண்டுக்காரர், ஜில்லா போர்டுகளுக்கே ஒப்புவித்து விடுவதற்கு இப்பொழுதும் அவகாசமிருக்கின்றது.

மேலே காட்டிய காரியங்களனைத்தையும் நடத்த வேண்டியவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களே யென்பது பட்டிக்காட்டு ஜனங்களுடைய அவாவாகும். அந்தந்த கிராமத்தார் தமக்குத் தகுந்தவாறு மாந்தர் நன்மையை தாமாகச் சாதித்துக் கொள்வதே சுயராச்சியத்தைச் சாதித்துக் கொள்வதாகும். அவ்வண்ணம் முடியாதாயின் 7 லக்ஷங் கிராமங்களிலெல்லாம் இத்தகைய வேலைகளை தினந்தோறும் நடத்திவர நெடுந்தூரத்திலுள்ள பட்டணங்களிலிருந்து உத்தியோகஸ்தரையனுப்பி வேலைசெய்துவரச் செய்வது இயலுமோர்க் காரியமாகுமா? அவ்வேலைக்காரருக்கும் உத்தியோகஸ்தருக்குச் சம்பளங்களும், சிலவுகளும் கிடைப்பதெங்ஙனம்? கிராமத்திலிருப்போரே அவ்வேலைக்காரர் ஆகாவிடில் வேலையில் அவர்களுக்கு எவ்வித அக்கரையுண்டாகும். அவர்களுடைய வேலைகளை மேற்பார்வையிட்டு அப்பொழுதைக் கப்பொழுதே திறுத்துவோர் யார்! தமக்கு நன்மையைத் தரும் வேலைகளைத் தாமேசெய்து கொள்ள விரும்பாது வேண்டா வெறுப்புடன் காலத்தைத் தள்ளுவோர்க்குச் சுயராச்சியக் கவலை ஏன்? அதனால் வேலையு

மென்ன? இனி சுதந்திர மேன்? இப்பொழுது அர சாட்சியில் நடக்கும் மாறுதல்களுக்கேனும், நாட் டிற்கு விடுதலை யளிக்கவேண்டுமென்று மகாத்துமா காந்தி முதலிய தேசியத்தொண்டரின் முயற்சிகளுக்கு மோக்ஷமே கிடையாமற் போகுமல்லவா?

VII

செல்வ முறை.

Finance.

ஓர் குடும்பத்தில் யஜமானனுயிருப்பவன், வே ளாண்மையோ, அல்லது வேறெந்த வாழ்க்கை யையோ செய்து, பணத்தைச் சம்பாதித்து தன் வீட்டாருக்கு உண்ண உடுக்க வழி தேடுவான். ஆரோக்கியத்தையும் சம்பாதிப்பான். குழந்தைக ளுக்கு கல்வி கற்றுக்கொடுப்பான். இன்னும் பல விதமாய் உதவிவருவான். இந்த காரியங்களையே சம் சாரம் என்பார்கள். முழு கிராமத்து ஜனங்களுடைய நன்மைக்காக உழைக்கும் பஞ்சாயத்துக்களும், அவற்றின் மேலாக அதே வேலைகளைப் பின் னும் கொஞ்சம் பெரிதான வேலை செய்துவரும் டிஸ்டிரிக்டு போர்டுகளும், டிஸ்டிரிக்டு போர்டுக ளுக்கு ஆதாரமாய் நிற்கும் மதராஸ் கவர்ன்மெண் டைப்போன்ற உள்நாட்டு அரசாட்சியும், அதற்கு மேல் இந்தியா கவர்ன்மெண்டும், தமது தமது நிலை

மைகளில் சிறிய பெரிய சம்சாரங்களென்று சொல்ல வேண்டும். இந்த சம்சாரங்களுக்குத் தக்கபடி பணம் கிடைத்தாலன்றி சர்க்கார் நடக்காது.

ஒரு குடும்பத்து சம்சாரத்தை நடத்தவேண்டுமென்றால், வீடுகள், பசுக்கொட்டகைகள், ஜமீன்கள், கவலைக் கிணறுகள், இவைகளைப் போன்ற அசையாப் பொருள்கள், சாமான்கள், கருவிகள் முதலிய அசையும் பொருள்கள், இவையெல்லாம் வேண்டும். இத்துடன் முடியாது. நாள்தோறும் செலவுக்கு வருடாவருடம் சம்பாதனை யிருந்தே தீரவேண்டும். சர்க்காராயினும் இப்படியே. எந்த சர்க்காருக்காயினும், குறையாத செல்வமிருக்கிறதென்றும், வரிகளுக்காக வேளாளரை வற்புறுத்துவது கொடுமையென்றும்,பலர் முணுமுணுத்துக்கொள்வார்கள். இது பைத்தியம். பழைய காலத்து இராம இராச்சியத்திலும் வேளாளர் வரிகளைச் செலுத்திக்கொண்டே வந்தனர். அந்தந்த தேசத்து ஜனங்கள் சம்பாதனைக்குத் தக்கபடி, வரிகள் ஏற்றக்குறைவுகள் ஏற்பட்டு வருவது தடுக்க முடியாததே. ஒரே ராச்சியத்திலும், ஒவ்வொரு வகுப்பு அரசாட்சிக்கும் ஆதாய வழிகள் வேறு வேறாக இருக்கும். இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ரயில்கள், வருமானவரி, உப்புவரி, வியாபார சுங்கத்தில் வரும் ஆதாயம் இவையெல்லாம் முக்கியமானவை. நிலவரி, ஆப்காரி, ஸ்டாம்பு

பத்திரங்களில் வரும் ஆதாயங்கள், மதராஸைப் போன்ற இராஜதானி அரசாட்சியைச் சேர்ந்தவை.

இனிமேலாக, லோகல் போர்டுகளைப் போன்ற உள் நாட்டுச் சபைகளின் பொருள்கள் யாவை? ஆதாயங்கள் எவை? சிலவிடும் ஒழுங்கு எத்தன்மையையுடையது? என்ற பகுதிகளை வேறு வேருக ஆராய்ந்து பார்க்க வேண்டியது நமது கடமையாகும்.

சொத்துகள்.

ரோட்டுகள், வண்டிப்பாதைகள், கால்நடைவழிகள், அவற்றின் இருபுறங்களிலுமுள்ள வாய்க்கால்கள் பாலங்கள், வாராவதிகள், கற்பரப்புகள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், சத்திரங்கள், ஆடுமாடுகளை வதைக்கும் கட்டடங்கள், கிணறுகள், நீர் ஆதாரங்கள், அந்தந்த போர்டைச் சேர்ந்த அசையாப் பொருள்களாகின்றன. தெருக்களைக் கூட்ட வைப்பதிலிருந்து கிராமங்களை வேறு எவ்விதத்திலாயினுஞ் சுத்தஞ்செய்யும் முயற்சிகளிலும், தினந்தோறும் திரண்டுவரும், குப்பை, சாக்கடைச் சேர், வேண்டாத குப்பை மண், கக்கூஸ்களின் மலப்பெருக்கு, வண்டி மோட்டுகளில் உள்ள குப்பை, ஆடுமாடுகளை வதைக்குமிடங்களில் குவியும் எலும்புகள், முதலாகிய எருவுக்கு உதவும் பொருள்களும் அப்படியே அந்தந்தபோர்டுக்குச் சேர்ந்த அசையும் பொருள்களாகின்றன. இவற்றை அடிக்கடி ஏலத்தில் விற்ருே, அல்லது வேறெவ்விதத்திலேனும் விற்பனை

செய்தோ, லாபத்தைச் சம்பாதிக்கலாம். அசையும் பொருள்களில், குப்பை கூட்டும் துடைப்பம் முதல், ரோட் தம்மஸ் குண்டுகள், மோட்டார் வண்டிகள், ஆபீஸுக்கு வேண்டிய நாற்காலிகள், மேஜைகள், முதலாகிய மரச்சாமான்கள், புத்தகங்கள், டைப்ரைட்டர் என்னும் சிறிய அச்சியந்திரங்கள், ஆஸ்பத்திரிகளிலுள்ள மருந்துகள், ஆயுதங்கள், பாத்திர சாமான்கள், எழுதுவதற்கு வேண்டிய மை முதலிய சாமான்கள், ஒவ்வொரு போர்டும் தேவையான பொழுது வாங்கிக்கொள்ள வேண்டியவைகளே.

கடன்கள்.

ஓர் குடும்பத்து யஜமானன் சம்சார வேலை நடத்திவர கடன்களை வாங்குவான். தனது சிலவுக்கு மிஞ்சிய செல்வத்தை தக்க ஜாமீனைக் கொண்டு மற்றவர்க்குக் கடனாகக் கொடுப்பான். இந்த பணமும் வேளாளரின் அசையும் பொருள்களைச் சேர்ந்ததே. எந்த சர்க்காரானாலும், லோகல் போர்டு ஆனாலும் இம்மாதிரியே நடந்துகொள்ள வேண்டும். புதிதாக ரோட்டுகள் போடுவதற்காகவோ, அல்லது ஏற்ற நீர் ஆதாரங்களைத் தேடி தண்ணீர் வசதியை யுண்டாக்குவதற்காகவோ, ஒவ்வொரு போர்டும் சர்க்காரிடமிருந்து கடன் வாங்க வழியிருக்கின்றது. சிற்சில போர்டுகளுக்கு மூலதனமிருக்கும். அப்பணத்தை லோகல் கவர்ன்மெண்டார் சட்டங்களுக்கு உட்பட்டு பாங்கிகளில் வட்டிக்கு விட்டு

வைக்கலாகும். அப்பணமும் அந்த போர்டினு டையதே.

புதிய ரோட்டுகளைப் போடுவதற்காகவோ, பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் முதலான கட்டடங்களைக் கட்டுவதற்காகவோ, லோகல் கவர்ன்மெண்டார் பணத்தை அப்பொழுதைக் கப்பொழுது போர்டுகளுக்கு பங்கிட்டுக் கொடுக்கும் வழக்கமுண்டு. இம்மாதிரி பங்கிட்டுக் கொடுக்கும் பணமும் போர்டினுடையதே.

தரும ஆதாயங்கள்.

அன்ன சத்திரங்கள், இளைப்பாறு மிடங்கள், தேவாதாயங்கள், மஸீதுகளுக்குக் கொடுத்த இனும் நிலங்கள், தண்ணீர்ப்பந்தல்களைப்போன்ற தருமங்களை இப்பொழுதுங் காணலாம். இவற்றை மேல் பார்த்து வருவது ரிவின்யூ போர்டார். அவர்கள் லோகல் கவர்ன்மெண்டார் செய்யும் சட்ட விதிகளுக்குட்பட்டு அப்படிப்பட்ட தருமாதாயங்களை அவ்வவ்விடத்து உள்நாட்டுச் சபைகளுடைய சுவாதீனத்திற்கு அளித்து விடலாகும். அப்படிக் கொடுத்துவிட்டால் அவற்றைச்சேர்ந்த இனும் நிலங்கள்வகைரூக்கள் எல்லாம் அப்போர்டுகளுக்கே கொடுத்து விடுவார்கள். அப்பொழுது அவைகூட போர்டுகளுடைய சொத்தாகி விடுகின்றன.

சத்திரங்களைக் கட்டுவதற்காகவோ, பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்காகவோ, கிணர் முதலான

வற்றை வெட்டவேண்டியதாயிருந்தாலோ, அல்லது யாராகிலும், ஏதாயினும் பலருடைய நன்மைக்காக ஓர் காரியத்தைச் செய்ய போர்டுகளுக்கு தருமங்களை யளிக்கவுங் கூடும். அச்சமயங்களில் போர்டாரே அக்காரியங்களைச் செய்யுந் தரும கர்த்தாக்களாய், தருமமளித்தவரின் கோரிக்கையை நிறைவேற்று மதிகாரம் பெற்றவராய் நிற்பார்கள். இப்படிப்பட்ட தரும திரவியமும் அப் போர்டுகளைச் சேர்ந்தவையே யாகின்றன.

ஏதேனும் ஓர் கிராமத்தில் ஜனங்களுடைய நன்மையை நாடி பேருபகாரம் செய்து பெயர் பெற்ற ஒருவன் இறந்து விடுவானுனல், அப்பெரிய மனிதனுடைய நினைவுக்காக, அவ்வூரார் எல்லாம் கலந்தோ, அல்லது அவனுடைய ஆஸ்திக்கு வார்சுதாரர் தாமாகவோ, ஓர் தெரு லாந்தரை நட்டு வைக்கலாகும். ஆஸ்பத்திரிக்காவது, பள்ளிக்கூடத்திற்காவது கட்டடங்களைக் கட்டிக்கொடுக்கலாகும். அவ்வூரில் படிப்பு சொல்லிக் கொடுக்கும் வாத்தியாருக்கு ஸ்திரமானியமாக ஓர் நிலத்தை எழுதிவைக்கலாகும். ஜனங்களுடைய உபயோகத்திற்காக கிணற்றையோ, குளத்தையோ, வெட்டிவிடலாம். குழாய்த்தண்ணீர் வரும்படி யமைத்து வைத்து உதவி செய்யலாகும். புத்தகாலயங்களை ஏற்படுத்தலாம். இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து அவற்றை யொழுங்காக நடத்தி வருவதற்கு அங்கிருக்கும் போர்டுக்காரரை நியமித்து

விட்டால், அத்தருமப் பொருள்களும் போர்டுடைய பொருள்கள் ஆகிவிடும்.

பட்டிக்காட்டு காடுகளையும், உழவுத்தொழிலுக்குவேண்டிய ஜலாதாரங்களையும், லோகல் கவர்ன மெண்டார் எந்த போர்டுக்காகிலும் சுவாதீனப்படுத்துவார்களாகில் அவையும் அப்போர்டைச் சேர்ந்தவைகளாய்விடுகின்றன.

சிற்சில வேளைகளில் போர்டு வேலைகளுக்காக வேண்டி, நிலங்களையோ, கட்டடங்களையோ, அல்லது வேறு எந்தவிதமான அசையாப் பொருளையோ, சமயோசிதமாய் போர்டார் விலைக்கு வாங்கிக் கொண்டு சுவாதீனம் செய்துகொள்ள அதிகாரமிருக்கின்றது. அப்பொழுது அந்த ஆஸ்திகளும் போர்டைச் சேர்ந்தவைகளாகின்றன.

எப்படிப்பட்ட சர்க்காராயிருந்தாலும், ஆட்சி முறையை யொழுங்கே நடத்தி வருவதற்கு வேண்டிய சிலவுகளுக்காக வரி வசூல் செய்வது இயற்கையேயென்று கூறினோம். லோகல் போர்டுகளும் அவ்வவ் வரவுசிலவுகள் அவ்விடங்களில் இருக்கும் ஜனங்களுடைய நன்மையை நாடி யுழைத்துவரும் சிறிய சிறிய சர்க்காரைப் போன்றதையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இப்படிப்பட்ட சர்க்காரை சுதந்திரத்துடன் நடத்திக்கொள்ளும் அதிகாரம் அவ்வவ்விடங்களில் உள்ள ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து சபையைப்போன்ற உள் நாட்டுச் சபைகளுக்

கும் உண்டு என்பதை இதை வாசிப்போர் மறந்து விடலாகாது. இப்படிப்பட்ட சர்க்கார் வேலைகளை நடத்துவதற்கு வருடா வருடம் வேண்டிய வரும்படியை அவ்வவ் விடங்களிலுள்ள ஜனங்கள் வரிகள் மூலமாய் சமாளித்துக் கொள்ளவேண்டியதே. அம்மாதிரி வரிகளை கிரமப்படி விதிக்கும் அதிகாரம் போதிய மட்டும் அந்தந்த சபையைப் பொறுத்ததாகின்றது.

இச்சபைகள் ஜனங்களுடைய நன்மையை நாடிச் செய்யவேண்டிய காரியங்களை 6-ம் அத்தியாயத்தில் கூறியிருக்கின்றோம். அத்தகைய வேலைகளைச் செய்ய வேண்டுமென்றால், வேண்டியமட்டும் பணத்தைச் சம்பாதிக்காமற் போனால் எப்படி காரியத்தைச் செய்யலாம்? எந்த எந்த இடத்தில் எக்காரியங்களைச் செய்ய வேண்டுமோ அங்குள்ள ஜனங்களே கொடுக்கும் வரிப்பணத்திலிருந்து அவ்வேலைகளுக்காக வேண்டிய சிலவுப்பணத்தையும் ஏற்று வருவது தருமம். அப்படிக்கில்லாமல் நெல்லூர் ஜில்லாவில் உள்ள ஜனங்கள் கொடுக்கும் வரிப்பணத்திலிருந்து தஞ்சாவூர் ஜில்லாவில் மாயவரத்து ஜனங்களுக்காக சிலவு செய்வது தருமமா? ஆனதால் அவ்வவ்விடங்களிலுள்ள உள் நாட்டுச் சபைகள், ஆங்காங்கிருக்கும் ஜனங்களிடமிருந்தே வரிகளை வசூல்செய்து வருவது அவசியமாகின்றது. எந்நாட்டிலாயினும் இதுவே வழக்கமாயிருக்கின்றது. நாளை

க்கு நமக்கு சுயராச்சியம் கிடைத்த போதிலும், இவ் வழக்கமல்லாது வேறு வழியே கிடையாது.

லோகல் போர்டுகளுக்குச் சேரவேண்டிய வரிப் பணங்கள் இன்னின்னவை யென்று விசாரிப்போம்.

ஸெஸ்கள்.

பழைய காலத்தில் "ரோட் பண்ட்" என்பதே "ஸெஸ்" என்பது. இது நிலங்களுக்குத் தக்கபடி ஒரு ரூபாய் தரத்திற்கு ஓர் அணு ரேட்டுடனிருந்தது. இவ் வாறு வசூலானபணத்தை சாதாரணமாய் ரோட்டுக ளைச்செம்மை செய்வதற்கேவழங்கி வருவதால்இதற்கு 'ரோட்பண்டு' என்ற பெயர் வந்தது. இப்பொழுது ரேட் ரூபா யொன்றுக்கு ஒன்றறை யணுவாக விருக் கின்றது. இது நிலவரியின்மேல் விதிக்கப்பட்ட ரேட் டாகும். நிலங்களின் முழு குத்தகையின்பேரிலும் இதே ரேட் விதிக்கலாம். இனும் நிலங்களானல் ஸெஸ் பணம் நிச்சயிக்கப்படுவது அவற்றின் வரிப் பணத்தைத் தழுவியேயாகும். வரியில்லாமலும், குத் தகையாகிலும் இல்லாத நிலங்களானல், சுற்றுப் பக் கத்து நிலங்களைக் கவனித்து, வரவேண்டிய ஸெஸ் பணத்தை ஜில்லா கலெக்டர் முடிவு சொல்வார். இந்த ஸெஸ் பணத்தை ஸர்க்கார் வரியுடன் ரிவினியூ உத்தியோகஸ்தர்களே வசூல் செய்து அந்த அந்த போர்டுகளுடைய கணக்குகளில் வரவு வைத்து விடு வார்கள். இதை வசூல் செய்யும் சிலவுகூட போர்டு கள் மேல் விழாது.

இந்த ஸெஸ் பணத்தில் அதிகப்பட்ட பாகம் பட்டிக்காட்டு விடங்களிலிருந்தே வசூல் செய்யப்படுவதாயிருக்கிறது. முன்னுல் இந்தவரும்படியிலிருந்து பட்டிக்காட்டின்வளர்ச்சிக்காக எவ்வளவும் வேருய் எடுத்து வைக்கப்பட் டிருக்கவில்லை. இப்பொழுது அப்படியல்ல. அந்தந்த கிராமத்து எல்லைக்குள் வசூலாகும் முழு ஸெஸ் பணத்திலிருந்து ஆரிலொரு பங்கு ($\frac{1}{6}$) அந்தகிராம்த்திற்கென்றே தனிப்பட எடுத்து வைக்க வேண்டுமென்பது விதியாகின்றது. அந்த கிராமத்தில் பஞ்சாயத்து போர்டு இருந்தால் அந்த பாகப் பணத்தை ரிவினியூ இலாகாதார்கள் வருடாவருடம் அந்த போர்டு பேருக்கு வரவு வைத்துவிடுவார்கள். அதை தமக்கு வேண்டியபடி சிலவு செய்துகொள்ள அப் பஞ்சாயத்து சபையார் சுதந்தரமுடையவர்களாவார்கள்.

மிச்சமாகும் ஒவ்வொரு போர்ட்டுக்கும் ஸெஸ் பணத்தைப் பங்கிட்டுக்கொடுப்பது ஜில்லா கலெக்டருடைய வேலையாகும்.

தொழில் வரி.

வெள்ளாமைப் பண்ணயம் அல்லாமல் மற்ற தொழில்களைச் செய்து வயிறு வளர்ப்போர் யாவரும் தொழில் வரி செலுத்த கடமைப்பட்டவர்களாகின்றனர். மறுபடியும் இந்த தொழில்வரிப் பாரத்தை ஏன் ஏற்றவேண்டும் என்று சிலர் கேட்கலாகும். இந்த வரி வியாபாரம் செய்து வரும் கம்

பெனிக்கள், கடைகள்,இவற்றின்மேல்போடலாகும். பாரம் முழுவதையும் வெய்யலென்றும் மழையென்றுமில்லாமல் ஏறைப் பிடித்து உழுது வரும் வெள்ளாளன்மேல் மாத்திரம் சுமத்துவதும், நிழலில் வட்டிக்குப்பணத்தை விட்டு சம்பாதித்தோ, துணிகளைத் தைத்துவியாபாரம் செய்தோ,அதிக லாபத்தையீட்டி வரும் ஒருவனைப் போன்றவரை விட்டுவிடுவது நியாயமாகுமா? போர்டார் செய்துவரும் வேலைகள் எல்லாம் கிராமத்திலுள்ளோர் அனைவருக்குமல்லவா? அப்படி யானபோது வேளாளன் மேலேயே எல்லாச் சுமையையும் போட்டு அழுத்தி மற்றவரை விட்டுவிடுவது பக்ஷபாதமல்லவா? இந்த வரியானுலும் 6 மாதங்களுக்கு ரூ. 150 வரும்படி குறைவதானல் அந்த ஆசாமியிடமிருந்து வசூல் செய்யக் கூடாது. அதற்குமேல் சம்பாதிப்பவர்கள் எல்லாம் தமது நிலைமைக்குத் தக்கபடி தமது வரும்படிக்கு ஏற்றவாறு 6 மாதங்களுக்கு ஓர் முறை எட்டு அணு முதல் ரூ. 275-வரையிலும் வரிகொடுக்கக் கடமைப் பட்டவர்களாவார்கள். தொழில்வரி கிராமபஞ்சாயத்துக்களுக்கு மாத்திரம் சேர்ந்ததாகும். அம்மாதிரி பஞ்சாயத்து சபைகள் இல்லாத விடங்களில் ஜில்லா போர்டாரும் வசூல் செய்யும் அதிகாரம் உண்டு. தமக்காகவே இது வரும்படியல்ல.

இத்தொழில் வரியை கிராமங்களில் விதித்து வருவதில் பல துன்பங்களிருக்கின்றன. கிராம மணி

யக்காரரும், கணக்கப்பிள்ளைகளும் எவனாவது ஒரு வேளாளன்மேல் தமது பழைய பகையைச் சாதித்துக்கொள்ளவேண்டுமானால் இதுதான் அவர்களுக்குச் சரியான சாதனம். எலெக்ஷனில் தாம் வேண்டியவர்களுக்கு வோட்டுக் கொடுக்காத வோட்டர்மேல் கத்திகட்டி வதைப்பதற்கு தொழில்வரி சமய சஞ்சீவி போன்றது. போர்டு ப்ரெஸிடெண்டாக இருப்பவன் இனிமேல் நடக்கப்போகும் எலெக்ஷனில் தனக்கு பலத்தைச் சேர்த்துக்கொள்ளவும் பகைவனை அவமானப்படுத்தவும், தொழில்வரி அப்படியே உபயோகப்படுவதாகும். தக்ஷிணைகள் கொடுத்தவர்களுக்கு—வரி கொடுக்கக்கூடியவராயிருந்தாலும்—விடுதலை யளிப்பதும், முடியாதவர்கள்மேல்—யோக்கியதையற்றவராயினும்—சுமையைத் தூக்கி வைப்பதும், சில கிராம உத்தியோகஸ்தர்களின் ப்ரைவேட் வரும்படிக்கு மூலமாகின்றது. கிராமபஞ்சாயத்துகள் இருக்கும் கிராமங்களில், சில ப்ரெஸிடெண்டுகளே இந்த வேலைக்குள்ளாவார்கள். தனக்கும், தன்னைச் சேர்ந்தவர்களுக்கும், எலெக்ஷனில் உதவி செய்தவர்களுக்கு வரிகள் போடாமல் விட்டுவிடுதலும், உதவி செய்யாதவர்கள்மேல் அநியாயமாய் வரிகளைப் போட்டுத் துன்பப்படுத்துவதும், அபரூபமானதன்று. ஒருவன்மேல் வரி போட்டுவிட்டால் அவன் அதிலிருந்து தப்பித்துக்கொள்வது வெகு கஷ்டம். அப்பீல் செய்துகொண்டால் அது விசாரணைக்கு

வருவது எந்த நாளோ! இதற்கும் அப்பீல் செய்வதற்கு முன்னல் போட்ட வரி செலுத்திவிட வேண்டியதுதான். ஓர்வேளை அப்பீலில் அனுகூலமானலும் அந்தப் பணத்தை அவன் கண்ணுல் காண்பதும் அபரூபமே. இவ்வளவுக்கும் வரிந்துகட்டி நின்று காரியத்தைச் சாதித்துக் கொண்டானே, இதற்கெல்லாம் அவன் முயன்ற சிலவெல்லாம் வரிப்பணத்தை விட அதிகப்பட்டதாய்விடும். இதற்கெல்லாம் காரணமென்னவென்றுல் போர்டு மெம்பர்களுக்குச் சிரத்தையும், தர்மபுத்தியுமில்லாமற் போவதேயாகும். வீட்டு வரியிலும் இப்பேர்ப்பட்ட துன்பங்கள் ஆங்காங்கு நடந்தே வருகின்றன. பட்டிக்காட்டு பஞ்சாயத்து சபையாரும், அவை யில்லாத விடங்களில் ஜில்லா போர்டாரும், இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவதில்லை யாதலால் கெட்டபேர் சம்பாதித்துக் கொள்கிறுர்கள். "இது என்னடா! இழவு சுயராச்சியம்" என்று ஜனங்கள் வெறுத்து கூறுவார்.

வீட்டு வரி.

கிராம பஞ்சாயத்து சபைகளுக்கு வீட்டு வரியே முக்கியமான வரும்படி. எந்த கிராமத்திலாகிலும் இதை விதிப்பதற்கு லோகல் கவர்ன்மெண்டாரோ, அல்லது மீட்டிங்கில் டிஸ்டிரிக்ட் போர்டாரோ, தீர்மானம் செய்து ஆரம்பிக்கலாம். கோவில்கள், பூசை செய்யும் இடங்கள், பஜனைக் கூடங்கள், சத்திரங்கள், பள்ளிக்கூடங்கள், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளு

டைய வசதிக்குப் போஜன சாலைகள், பசுக்களைக்கட்டு மிடங்கள், களஞ்சியங்கள், திக்கற்றவர்க்கு நிழலைத் தரும் கட்டட தருமங்கள், தரும ஆஸ்பத்திரிகள், தருமத்திற்காகவே உபயோகப்படும் வேறுஎந்தவிதமான கட்டடங்கள், லைட் ஹவுஸ்ஸுகள், இவற்றிற்கெல்லாம் வீட்டு வரி போடக்கூடாது. வீட்டுவரி 6 மாதங்களுக்கு ஒரு தபா முப்பதுநாள் முடிவதற்கு முன்னதாகவே செலுத்திவிடவேண்டும். எந்தவீடானாலும், எந்த 6 மாதங்களிலும், 60 நாட்கள் காலியாக விருந்தால் அந்த பட்டிகைப் பிரகாரம் வரிப்பணம் பாதியை விடக் குறைந்து விடாமல் தள்ளிவிடுவதற்கு ப்ரெஸிடெண்டுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் தன் வீடு காலியாயிருக்கின்றதென்ற சங்கதியை ப்ரெஸிடெண்டுக்கு முன்னாடியே தெரியப்படுத்தி யிருக்கவேண்டும். ஒருவன் தன் வீட்டை மற்றொருவனுக்கு விற்பானால், அந்த சங்கதியையும் அப்படியே ப்ரெஸிடெண்டுக்கு முன்னாடியே தெரியப் படுத்தினாலல்லது செல்லாது. அப்படித் தெரியப்படுத்தும் வரையிலும், வீட்டு வரியைக் கொடுக்க அவனே கடமைப்பட்டவனாகின்றான். எந்த வீட்டையாகிலும் அதை யுடையவன் இடித்து வீழ்த்தவோ, அல்லது ஒழுங்குபடுத்திக் கட்டவோ, நினைத்தானால் ப்ரெஸிடெண்டுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் சில வேளைகளில் வரிப்பணத்தில் கொஞ்சம் பாகத்தைத் தள்ளிவிட ப்ரெஸிடெண்

டுக்கு அதிகாரமுண்டு. எவனே ஒருவன் மிக்க ஏழை யென்றால் வீட்டு வரியைத் தள்ளிவிட பஞ்சாயத்து போர்டுக்காரருக்கு சுதந்திரம் இருக்கிறது. யாதாயினும் ஓர்விதமான வீட்டுகளுக்கு வரிபோடக் கூடாதென்று டிஸ்டிரிக்டு போர்டார் தீர்மானஞ் செய்யலாம். யார் யார்மேல் வீட்டுவரி, தொழில் வரிபோட வேண்டுமோ, அவர்களுடைய பெயர்களேயும், கம்பெனிகளுடைய பெயர்களேயும், எழுதி பஞ்சாயத்து போர்டு ப்ரெஸிடெண்டு வேறு வேருன ரிஜிஸ்டர்களை தயார்செய்து வைத்திருக்கவேண்டும். எவனவது ஒருவன்மேல் தெரியாமல் வரிபோடாமற் போனலும், குறைவாய்ப் போட்டாலும், ரிஜிஸ்டர்களை சீர் திருத்திக்கொள்ள பஞ்சாயத்துக்காரருக்கு அதிகாரம் உண்டு. எந்த வீட்டுக்கு எவ்வளவு வரி போட வேண்டுமென்று தீர்மானிப்பதற்கு ப்ரெஸிடெண்டுக்கு அதிகாரமிருக்கின்றது. ப்ரெஸிடெண்டு தானகவே சுயமாய்க் கொடுக்கும் வீட்டு வரியோ, அல்லது தொழில் வரியோ, இவ்வளவென்று தீர்மானம் செய்யும் அதிகாரம் பஞ்சாயத்துமெம்பர்களைச் சேர்ந்ததாகும். வீட்டு வரியை, வீட்டின் விலேயைப் பார்த்தாகிலும், அல்லது வாடகையைப் பொருத்தாகிலும் நிச்சயப்படுத்த வேண்டுமேயல்லாது மற்றுஎந்தவிதத்திலும் நிச்சயிக்கக்கூடாது. ஒவ்வொரு பஞ்சாயத்தவரின் தீர்மானத்தை யனுசரித்து விலேயை யுத்தேசித்தோ அல்லது வாடகையை யுத்தேசித்தோ வீட்டு வரியை விதிக்கவேண்டும்.

குக்கிராமங்களில் எழுதப் படித்தலை பரவ வைக்கவேண்டுமென்றே பின்னுமொரு சிறியவரி போடப்படுகிறது. இதைப் போடுவது எலிமெண்டரி எஜுகேஷன் ஆக்ட் (ஆரம்பக் கல்வி)ன் படியாகும். ஒருவன் கொடுக்கும் ஸெஸ் மொத்தத்தின் மேலாவது வீட்டு வரி மேலாவது, அல்லது தொழில் வரிமேலாவது ஒரு ரூபாய்க்கு நாலு அணவைவிட அதிகப் படக் கூடாததாகும். இந்த அளவுக்குடன்பட்டு ஒவ்வொரு போர்டார் நியமிக்கும் மதிப்பில் லோகல் கவர்ன்மெண்டார் சம்மதத்தின்மேல் கட்டி வசூல் செய்வதாகும். ஸெஸ்மேல் வரவேண்டிய கல்வி வரியை ஸெஸ்ஸுடன் போர்டுகளுக்கு சிலவில்லாமலே கலெக்டர் வசூல் செய்து ஒவ்வொரு போர்டிற்கும் கொடுத்து வருவார்.

டோல்கேட்டுகள்.

இதுவரையிலும் டோல்கேட்டுகளுடைய சுங்க வரும்படி டிஸ்டிரிக்ட் போர்டுக்காரருக்குப் பெரிய ஆதாயமாயிருந்து வந்தது. இதனல் பாரவண்டிகளுக்கும், வரப்போகவிருக்கும் பிரயாணிகளுக்கும் நடந்துவந்த தொந்திரவு கொஞ்ச நஞ்சமல்ல. 1931-ம் வருஷத்தில் சென்னை சட்ட சபையார் மோட்டார்கார்களின் மேல் சுங்கத்தைப் போட்ட பொழுது இந்த டோல்கேட்டு சுங்கத்தைப் பூராவைத் தள்ளிவிட்டார்கள். இந்தப் புதிய வரிப் பணத்திலிருந்து அந்தந்த டிஸ்டிரிக்டு போர்டு டோல்கேட்

வருமானத்தை தழுவினற்போல, பணத்தை ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் போர்டுக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். இந்த மாறுதலால் டிஸ்டிரிக்ட் போர்டுக்கு முன்னைய ஆதாயம் குறைந்துவிட்டது. இதனால் சில டிஸ்டிரிக்கு போர்டார் முன்போல டோல்கேட் சுங்கமிருப்பதே நலமென்று எண்ணுகிறார்கள். டோல்கேட் சுங்கத்திற்குமாறாய் தேசத்திலிருக்கும் வண்டிகளுக்கெல்லாம் வண்டிக்கு வருஷத்திற்கு இவ்வளவென்று ஓர்வரி போடவேண்டுமென்று கூட யோசனைசெய்து வருகிறார்கள். ஓர் விதமாய் டோல்கேட் சுங்கத்தைவிட இது சுலபமானதென்று தெரிகிறது. சுங்கச்சாவடி தாண்டும்போதெல்லாம் வேளைக்கு வண்டிக்கு நாலணாவீதம் கொடுப்பதைவிட வருஷத்திற்கு ஒரு தபா ஒன்றிரண்டு ரூபாய்களைக் கொடுத்துவிடுவது உபத்திரவமில்லாமல் போவது நிஜமே. டோல்கேட்டு கண்டிராக்டர்களுடைய வேதனை தப்பும். ஆனல் ரோட்டுக்கு வரட்டும், வராமற் போகட்டும், ஒவ்வொரு வண்டிமேலும், வரிபோட்டால் பட்டிக்காடுகளில் குடியானவர்க்கு இது வொரு புது சுமையாய்த் தோன்றலாம். இந்த விஷயத்தை ஒவ்வொரு கிராமத்தாரும் யோசனை செய்து ஒவ்வொரு போர்டு மூலமாய் சரியான முறையில் தீர்மானங்களைச்செய்து லோகல் கவர்ன்மெண்டாருக்கு முன்னடியே அனுப்பிக்கொள்வது நலம்.

புதிய வரிகள்.

மேலே குறிப்பிட்ட வரிகளேயன்றி கிராம பஞ்சாயத்தார்கள் தமக்குச் சரியென்று தோன்றுமாகில் வேறுவிதமான வரிகளைக்கூட லோகல்கவர்ன்மெண்டாருடைய சம்மதம் பெற்று வசூல்செய்து கொள்ள சுதந்திரமுண்டு. இந்த காரியங்கள் ஸ்பெஷல் மீட்டிங்குகளை நடத்தி ஒட்டு மொத்தம் மெம்பர்களில் பாதிப்பேராயினும் ஒப்புக்கொண்டு தீர்மானித்தாலன்றி செல்லாது. அதன் மேல் லோகல் கவர்ன்மெண்டார் சம்மதப்படவேண்டும். கிராம அபிவிருத்திக்காகத் தகுந்த வரும்படி இல்லாதபோது புதிய வழிகளில் வரும்படி தேடவேண்டியது தப்பாது. இந்த வரி ரொக்கமா யிருக்கவேண்டிய அவசரமில்லை. ஏதேனும் ஓர் வேலையைச் செய்வதற்கு வாரத்திற்கு ஓர் முறையோ, மாதத்திற்கு ஒரு முறையோ, வீட்டிற்கு ஓர் மனிதன் வந்து வேலை செய்யவேண்டுமென்றும், அது முடியாதுபோனல், அதற்கு தண்டனை விதித்து வசூல் செய்வதும், பஞ்சாயத்து போர்டுக்கு ஆதாயமாகும். ஒவ்வொரு கிராமத்தைச் சுத்தமாயும், அழகாயும் அமைத்துக்கொள்ளவேண்டுமென்ற அக்கரை ஒவ்வொரு ஊராருக்கும் உண்டானல் இம்முறை மிக சுலபமானதாயிருக்கும்.

யாத்திரை வரி.

யாத்திரை வரி மற்ெருரு ஆதாய வழி. கோதாவரி புஷ்கரம், கும்பகோணத்தில் நடக்கும் மகாமகத்தைப் போன்ற புண்ணிய க்ஷேத்திரங்களில் உற்சவக் காலங்களில் ஆயிரம் ஆயிரமாய் ஜனங்கள் கூடுவார்கள். அச்சமயத்தில் கூடும் ஜனக் கூட்டத்திற்கு கக்கூஸுகள், தண்ணீர் சவுகரியம், விளக்கு வைத்தல் முதலான அனுகூலங்களை ஏற்படுத்தல் இவையெல்லாம் அந்தந்த இடங்களிலிருக்கும் லோகல் போர்டுகள் செய்ய வேண்டிய காரியங்கள். இந்த வேலைகளுக்கெல்லாம் அதிகமாக சிலவு செய்ய வேண்டியிருக்கும். இந்த அதிகச் சிலவுக்கென்றே தனிப்பட இந்த சங்கமும் ஏற்படுத்தப்படுவது. யாத்திரை செய்பவரின் அனுகூலங்களுக்கல்லாமல் வேறே எதற்கும் இந்த பணத்திலிருந்து சிலவு செய்யக்கூடாதென்று ரூலிருக்கிறது. இந்த வரி ரைல் வழியாய் வரும் ப்ரயாணிகளிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமேயன்றி வேறு வழியாய் வருபவரிடமிருந்து வசூல் செய்யக்கூடாது. திருப்பதி, காசி, இராமேஸ்வரம் முதலிய பெரிய புண்ணிய க்ஷேத்திரங்களில் வருஷம் நெடுக இந்த வரி வசூலாய்க் கொண்டே வரும். மற்ற விடங்களில் தேர் திருவழா முதலிய நாட்களில் மாத்திரம் ஒவ்வொரு போர்டாரும் வசூல் செய்துகொள்ள அதிகாரமிருக்கின்றது. இந்த வரி ரைல் வழியாய் வருகின்ற யாத்திரிகள் மேலே மாத்

திரம் போட்டு வசூல் செய்வதனுல் இதை ரைல்வே வேலையாட்களே டிக்கட்டு விலையுடன் சேர்த்து ஒரே தபா மொத்தமாய் அந்தந்த போர்டுக்குக் கொடுத்து விடுவார்கள்.

அந்தந்த வகுப்பு பிரயாணிகளுக்குத் தக்கபடி இரண்டு அணு முதல் எட்டு அணு வரையிலும் இந்த வரி போடப்படும். வருடம் முழுவதும் வசூல் செய்கின்ற பெரிய திருவிழா இடங்களில் இந்த ரேட்டில் பாதியே வாங்கிக்கொள்ளவேண்டியிருக்கும்.

வேறே ஆதாய வழிகள்.

சந்தைசுங்கம், வண்டிமோட்டு சுங்கம், சத்திரத்து வாடகைகள், ஆடுமாடுகளை வதைக்குமிடங்களுடைய லைஸென்ஸு மொத்தம், இவைகளும் ஆதாய வழிகளே. தோல் பதன் செய்தல், எருவுக்காக எலும்பைச் சுடுவது, கரிக்கடைகள், கம்பளி மயிர் கழுவுதல் முதலான அஸஹ்யமான வேலைகளைச் செய்து வாழ்பவர் ஊருக்குச் சிறிது தூரத்தில் தனிப்பட்ட இடங்களில் தத்தம் வேலைகளைச் செய்துகொள்ள வேண்டியிருக்கும். அந்த இடங்களில் வசூலாகும் லைஸென்ஸ் பணமெல்லாம் அந்தந்த போர்டைச் சேர்ந்ததாகும்.

பள்ளிக்கூடச் சம்பளம்.

கிராம பஞ்சாயத்தார் நடத்தி வைக்கும் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் கொடுக்கும் சம்பளங்களும், கிராண்டு மொத்தமும் மற்றொரு ஆதாய வழியாகும்.

போர்டு வேலைகளுக்காக லோகல் கவர்ன்மெண்டார் கல்வி வரிக்கு இணையாக வெவ்வேறு வழியாய் ஒவ்வொரு போர்டுக்கும் பணத்தைக் கொடுப்பார்கள். ரோட்டுகளுக்கென்றும், கிணறுகளுக்கென்றும், தனியாய் கவர்ன்மெண்டுக்காரர் அப்பொழுதைக்கப்பொழுது பொருளுதவி செய்து வருவார்கள். இவையெல்லாம் போர்டுக்கு ஆதாயமே. கிராம அபிவிருத்தி நிதியிலிருந்து (Village Development Fund) வரும் உதவியும் இந்த ஆதாயங்களுடன் சேர்ந்ததாயிருந்தது. இப்போது இதை எடுத்து விட்டார்கள். மீன் குத்தகைப்பணம், நதிகளைத் தாண்டுவதற்கென வைத்திருக்கும் படகுகள் சுங்கம் இவையும் ஆதாயத்திற்கு வேறொரு வழியாகின்றன. லோகல் போர்டு ஆக்டிற்கு யாராயினும் எதிர்த்து தண்டனை யடைவாராயின், வசூலாகும் அபராத மொத்தமும் அந்தந்த போர்டுகளுக்குச் சேர்ந்துவிட வேண்டியதே.

வட்டி.

போர்டாருடைய பணம் பாங்கிகளிலிருந்தால் அதன்மேல் வரும் வட்டியும், குடியானவர் வரி கொடுக்க ஆலசியமானபோது அதன்மேல் விழும் வட்டியும் மற்றொரு ஆதாயம்.

விற்பனை செய்த பணம்.

போர்டைச் சேர்ந்த சாமான்களை தமக்குச் சரியான வழியில் விற்பதற்கும் போர்டாருக்கு அதிகார

முண்டு. இந்தப் பணமும் போர்டு பணத்துடன் வரவு வைத்துக் கொள்ள வேண்டியதே.

டெபாஸிட்டுகள்.

கண்டிராக்டர்களாயினும், போர்டு வேலைக்காரராயினும் டெபாஸிட் பணம் கொடுத்திருப்பார்கள். அந்த ஆஸாமிகள் திரும்பி வாங்கிக்கொள்ளாமற் போனாலும், தெண்டமாக போக்கடித்துக் கொண்டாலும் அந்தப் பணமும் போர்டு ஆதாயங்களுடன் சேர்த்து விடப்படும்.

ரயில்வே வரும்படி.

ரயில் வண்டிகள், டிராம் வண்டிகள், மோட்டார் வண்டிகள், இவையெல்லாம் ஜனங்களுடைய உபயோகத்திற்காக டிஸ்டிரிக்டு போர்டார் அமைப்பார்கள். அவற்றில் வரும் ஆதாயமும் டிஸ்டிரிக்டு போர்டாருடையதே.

பென்ஷன் பணம் கொடுத்தல்.

கிராம பஞ்சாயத்து வேலையாட்களில் யாராவது பென்ஷன் வாங்குவதற்கு அருகராயிருந்தால் அந்த பென்ஷன் பணத்தையும் அந்தந்த ஜில்லா போர்டாரே கொடுக்க வேண்டியிருக்கும். இதற்காக பஞ்சாயத்து போர்டார் ஓர் படியாக ஜில்லா போர்டாருக்கு வருடா வருடம் மொத்தமாகக் கொடுத்து வருவார்கள். இதுகூட ஜில்லா போர்டுக்கு ஆதாயமே.

மேலே குறித்த வழிகளே யல்லாமல் வேறெந்த விதமாக லாபம் வந்தாலும் அந்த ஆதாய மொத்

தம் முழுவதும் அந்தந்தபோர்டுக்குச் சேர வேண்டியதேயாகும்.

லோகல் கவர்ன்மெண்டாருக்கு அனுகூலமென்று தோன்றும்பொழுது ஆப்காரி வரும்படியிலிருந்து சிறிது பாகத்தை போர்டுகளுக்கு பங்கிட்டுக் கொடுக்கலாம். அந்த உதவியும் போர்டுக்கு ஆதாயமாகும். பொம்பாய் இராஜதானியில் இப்பொழுது இந்த வழக்கம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. கிராமமொன்றுக்கு ஓர் பஞ்சாயத்து ஆகிறதினுல் ஒவ்வொன்றும் தம்மைத்தாம் பார்த்துக் கொள்ளவேண்டிய பணம் கிடைக்காது. சென்னை கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரத்திலேயே இம்மாதிரி உதவி செய்ய வேண்டியிருக்கும். இனிமேல் நாட்டில் சுயராச்சிய முறை ஆரம்பிக்குமானுல் ஆப்காரியைப் போன்ற வரும்படி நின்று விடுமோ?

கணக்குகள்.

ஒரே ஜில்லாவிலிருந்தாலும், பஞ்சாயத்துகள், ஜில்லா போர்டுகள் இவை தத்தம் கணக்குகளையெல்லாம் தனிப்பட எழுதிவைத்திருக்க வேண்டும்.

பணமிருக்கப் பட்டவிடம்.

அருகாமையிலிருக்கும் சர்க்கார்கஜானுக்களில் ஒவ்வொரு போர்டு பணத்தையும் வைத்திருக்கவேண்டும். கிராம பஞ்சாயத்தார்கள், தமக்குச் சமீபத்திலிருக்கும் ஸேவிங்க்ஸ் பாங்கில் தமது பணத்தைவைத்துக் கொள்ளலாம். அருகாமையில் தபாலாபீஸ்

இல்லாமற்போனல் ஜில்லா போர்டார் சம்மதத்தின் மேல் தக்க ஜாமீனேக்கொண்டு ப்ரெஸிடென்டினிடத்திலாவது, அல்லது ஏதாவது ஒரு பணக்காரனிடத்திலாவது பத்திரப்படுத்திக் கொள்ளலாம்.

செக்குகள்.

லோகல் கவர்ன்மெண்டார் அதே மாதிரி சம்மதிப்பார்களானல், ஜில்லா போர்டார் தமது பணத்தை பாங்கிகளிலோ, அல்லது கோஆபரேடிவ் ஸொஸைடிகளிலோ, வைத்துக்கொண்டு சிலவு செய்து கொள்ளலாம். போர்டு சிலவிற்கு பணம் வேண்டியபோது செக் எழுதி பணத்தை வரவழைத்துக் கொள்ளலாம். அந்த செக்கில் கையெழுத்து போடும் அதிகாரம் ப்ரெஸிடெண்டுடையது. ப்ரெஸிடெண்டு சம்மதித்தால் வேறு யாராயினும் செக்குகளில் கையொப்பம் இடலாம். இம்மாதிரி செக்குகளே கையெழுத்துடன் கிரமமாய்க்கொடுத்தால் ஒவ்வொரு போர்டு பேரில் இருக்கும் பணம் முடியும் வரையில் கஜானக்காரர் செக்குகளுக்குப் பணம் கொடுக்கவேண்டுமென்ற விதியுண்டு.

இந்த இடுக்கண்களேக் குறித்து ஓர் அம்சத்தை ப்ரெஸிடெண்டுகள் முக்கியமாய்க்கவனிக்கவேண்டும். கஜானவில் போர்டார் பணம் இருக்கும் வரையிலும், ப்ரெஸிடெண்டு கையெழுத்துடன் ஹாஜர் செய்யப்பட்ட செக்குகளே யனுசரித்து எவ்வளவு பணமாயினும் ட்ரெஷரி ஆபீஸர் கொடுத்துவிட வேண்டியதே.

இவ்வளவு பெரிய தொகை எதற்கென்று ட்ரெஷரீ ஆபீஸர் கேள்விகேட்க அதிகாரமில்லை. சில ப்ரெஸிடெண்டுகள் செக்குகளைத் தமது பெயராலேயே (Self cheques) எழுதிக் கொண்டு கஜானுவிலிருந்து பணத்தை வரவழைத்துக் கொள்வதும், அந்த பணம், கிரமமாய் பட்டுவாடா ஆகும் வரையில், குமாஸ்தா விடத்திலோ, தன்னிடத்திலோ, அல்லது தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலோ நின்று கணக்கே அகப்படாமற் போவதும், நடந்து வரக்கூடும். இந்த வழக்கம் பல துன்பங்களுக்குக் காரணமாகின்றது. செக்குகள் எழுதுவதில் யாருக்குப் பணம் சேரவேண்டுமோ, அவர்கள் பெயராலேயே செக்குகளை எழுதிக் கொடுத்து விடுவது உத்தமமான காரியம். இச்சங்கதியை ஒவ்வொரு ப்ரெஸிடெண்டும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டும்.

வசூல் வேலை.

இந்த வேலையைக் குறித்து போர்டு ப்ரெஸிடெண்டுகள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன. வீட்டு வரி, தொழில் வரிகளைப் போன்ற வரிகளை வருடாவருடம் 6 மாதங்களுக்கு ஒரு தடவை காலத்தவணையாகாமல் வசூல் செய்ய வேண்டுமென்பது விதி. இப்படி வசூல் செய்யாமற் போனபொழுது பணமில்லாத காரணத்தினல் ஒவ்வொரு போர்டினுடைய வேலைகளெல்லாம் பூரணமாய் நின்றுவிடும். கக்கூஸுகளை,

தெருக்களைப் பெருக்குவோருக்கும் சம்பளம் கொடுக்க வகையில்லாமல் போய்விடும். இதுவுமல்லாமல் வரிகளை அப்பொழுதைக் கப்பொழுது வசூல் செய்யாமல் பாக்கி நின்றால் குடியானவர்மேல் சுமை ஏறிக் கொண்டே வரும். இப்படிச் சேர்ந்த பாக்கிகளுடன் வசூல் வேலை முடிய வேண்டுமென்றால், எந்த ப்ரெஸிடெண்டானாலும் ஜனங்களுடைய நிந்தைக்கு ஆளாவது திண்ணம். ப்ரெஸிடெண்டுகளில் சிலர் பின் நடந்த எலெக்ஷனில் தமக்கு உதவி செய்தவர்களுடைய வரிகளை வசூல் செய்யாமல் பாக்கியாக நிறுத்தி வருவார்கள். இப்படி சிலநாள் நடந்து வந்துவிடவே மறுபடியும் எலெக்ஷன் சமயம் வந்துவிடும். அந்த சமயத்தில் வசூல் வேலை கைப்பிடியாய் நடக்குமானால், எலெக்ஷனில் வோட்டுகள் கிடைக்குமோ கிடைக்காதோ வென்ற பயத்தால் சில ப்ரெஸிடெண்டுகள் வசூல் வேலையையே நிறுத்தி விடுவார்கள். புதிய எலெக்ஷனில் மற்றொருவன் ப்ரெஸிடெண்டாக வருவானானால் பழைய பாக்கிகளுடன் வரிகளை வசூல் செய்யும் பாரம் முழுவதும் அவன்மேல் விழும். அந்த ப்ரெஸிடெண்டு "எனக்கென்னத்திற்கு இந்த இழவு" என்று கவனியாமலிருப்பதுவுங் கூடும். இவ்வளவில் போர்டு சபையில் கக்ஷிகள் ஏற்பட்டாலோ, இனிநடக்கும் துன்பங்களுக்கு அளவே இராது. இம்மாதிரி சமயத்தில் சில ப்ரெஸிடெண்டுகள், தமது வழக்கப்படி சிலவிற்காக

டிஸ்டிரிக்ட் போர்டை கடன் கேட்கவும் நேரிடும். இப்படி வாங்கிவந்த கடனை வருடாவருடம் கொஞ்சங் கொஞ்சமாய்க் கொடுத்துவிடவும் முடியாமல் திண் டாடப்படுவதுண்டு. ஏதாவது கொஞ்சம் பணம் வசூலானாலும், அதை தெருவிளக்கு ஏற்றுவதற்கென்றோ, சிலவான மண்ணெண்ணெய் பில்லு (Bill)க் கென்றோ, கண்டிராக்டர்கள் செய்த வேலைகளின் பில்லுகளுக்கென்றோ சாக்குவைத்து முதலிலேயே சுளயம் செய்துவிட்டு கிராமத்தைச் சுத்தம் செய்யும் தோட்டிகள், நரகல் வேலை செய்யும் வேலைக்காரர் இவர்களுக்கு சம்பளத்தைக் கொடுக்க முடியாமல் போர்டு ப்ரெஸிடெண்டுகளில் சிலர் அவர்களை பட்டினி கிடக்கவைப்பார்கள். இந்த நிலைமைகளால் போர்டு வேலை முழுவதும் ஒழுங்காக நடைபெறாததன்றி போர்டுக்கே கெட்ட பெயர் வருவதற்கும் தடையேயில்லை. இதனால் போர்டு மெம்பர்களும், ப்ரெஸிடெண்டுகளும், அவர்கள் மேலிருக்கும், ஜில்லா போர்டார், கடைசியாக கவர்ன்மெண்டாரும், ஆதாயங்களில் பாக்கி விழாமல் பாதுகாக்க வேண்டுமென்பது முக்கியமான விதி. ப்ரெஸிடெண்டு ஒவ்வொரு தலைப்பின் கீழும், டி. ஸி. பி. ஸ்டேட்டுமெண்டு (D. C. B. Statement) என்றால் வரவு, வசூல், பாக்கி கணக்கு பட்டிகளை மாதாமாதம் காட்டி வரவேண்டும். அந்த கணக்குகளை போர்டு மெம்பர்கள் சரியாய்க் கவனித்து அப்பொழுதைக் கப்பொழுதே பாக்கி வசூலாகும் முயற்சிகளைச்செய்து வருவது சரியாகும்.

கிராம பஞ்சாயத்து வியவகாரங்களில் கவனிக்கத்தக்க விசேஷம் பின்னுமொன்றிருக்கின்றது. ப்ரெஸிடெண்டு எலெக்ஷன் ஆனவுடனே, பின்னே வந்தவன், முன்நடந்த எலெக்ஷனில் தனக்கும், தன்னைச் சேர்ந்தவர்க்கும் வோட்டுகள் கொடுக்காதவர் யாரோ தேடி, அவர்களுக்காவது, அவர்களைச் சேர்ந்தவர்களுக்காவது வீட்டுவரியை உயர்த்துவதும், அல்லது தொழில் வரியை யுயர்த்துவதும், இம்மாதிரி செய்து தொந்திரவு செய்வதும் உண்டு. தமக்கு அந்த எலெக்ஷனில் உதவி செய்தவர்கள்மேல் தயை காட்டி அவர்களிடமிருந்து நியாயமாய் வரும் வரியை விடக் குறைந்த வரியை வசூல்செய்து போர்டுக்கே நஷ்டத்தை யுண்டாக்குவதுமுண்டு. இந்த விஷயங்களில் ஒவ்வொரு மெம்பரும் எச்சரிக்கையுடன் கவனித்து சீர்ப்படுத்த வேண்டியது தாம் செய்யவேண்டிய வேலைகளில் முக்கியமானதாகும்.

கக்ஷி கிராமங்கள் எத்தனையோ விருக்கின்றன. அந்த விடங்களில் பஞ்சாயத்து போர்டு ப்ரெஸிடெண்டுகள், போர்டு மெம்பர்களில் மெஜாரிடியாரைத் தமது கக்ஷியில் சேர்த்துக்கொண்டு அடத்திற்காகவே எதிர் கக்ஷியை யவமானஞ் செய்ய வேண்டுமென்று எப்படிப்பட்ட கெடுதியையும் செய்யத் துணிவார்கள். மீட்டிங்கு முடிந்தபின்பு தமக்கு அனுகூலமாயிருக்கும்படி தீர்மானத்தையே மாற்றி விடுவார்கள். இன்னுஞ் சில புண்ணியாத்துமாக்கள், புஸ்தகத்தி

விருக்குங் காகிதத்தையே கிழித்து விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள்மேல்தான் (No Confidence) "நோ கான்பிடென்ஸு" நம்பிக்கையற்ற தீர்மானங்கள் செய்து வருவார்கள்.

சிலவு செய்யும் முறை.

இந்த அம்சம் மிக முக்கியமான அம்சம். ஓர் குடும்பத்திற்கு தலைவனானவன் தன் சம்சாரத்தை நடத்துவதில் தன் வரவுக்கு மிஞ்சிவிடாமல் சிலவை யொழுங்காய் நடத்திவருவான். அப்படியே போர்டுகளுங்கூட தத்தம் வரும்படிக்குத் தக்கவாறு சிலவுகளை ஓர்வறையிலிருத்திக் கொள்ளவேண்டியது முக்கியம்.

இதற்காகவே புதிய வருடம் ஆரம்பமாகுமுன் ஒவ்வொரு போர்டாரும் தத்தம் வரும்படி எவ்வளவு பட்ஜெட்டு யென்று யோசனை செய்து குறிப்பிட்டுக் கொள்வதும், அந்த வரும்படிக்கு மிஞ்சாமல் அந்த வருடத்தில் தாம் செய்யவேண்டிய காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் சிலவுகளை நிர்ணயித்து ஏறக்குறைய இவ்வளவாகுமென்று கணக்கிட்டு வைப்பதும் வழக்கம். இந்த சிலவு கணக்குகளில் ஒவ்வொரு போர்டாரும் கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்க வேண்டிய கடன் இருக்குமாயின், அதை முதன் முதலாகவே குறிப்பிட்டுக்கொள்ள வேண்டுமென்பது விதி. இம்மாதிரி எழுதி வைத்தலே பட்ஜெட் என்பதாம். இதை முதலில் தயார் செய்யவேண்டியது ப்ரெஸி

டெண்டு. அப்படித் தயார் செய்தபின்பு அதை போர்டு மெம்பர்கள் மீட்டிங்கில் சோதனை செய்து வேண்டியபடி சீர்ப்படுத்திக் கொள்ளலாம். இப்படி எல்லோரும் சம்மதித்து தீர்மானம் செய்தபின்பு கிராமபஞ்சாயத்தார் ஜில்லா போர்டாருக்கு குறிப்பிட்ட நாட்களில் தமது பட்ஜெட் நகல்களை யனுப்பிவிடவேண்டும். டிஸ்டிரிக்ட் போர்டார் தமது பட்ஜெட்டுடன் ஜில்லாவில் இருக்கும் மற்ற போர்டு பட்ஜெட்டுகளையும் ஒன்ருய்ச் சேர்த்து லோகல் கவர்ன்மெண்டாருக்கு அனுப்புவார்கள்.

பட்ஜெட்டு—திருத்திக் கொள்ளுதல்.

வருஷ நடுவில் அனுபவத்தினுல் பட்ஜெட்டிலுள்ள வரவு செலவுகளில் வித்தியாசங்கள் தோன்றுமானுல் அதைத் திருத்தி வேறொரு பட்ஜெட்டு தயார் செய்து வைப்பது வழக்கம். இதையே 'ரிவைஸ்ட் பட்ஜெட்'' (Revised budget) என்பது. எந்த போர்டு வியவகாரத்திற் காயினும் இந்த பட்ஜெட் மூலாதாரமானது. வருஷம் நெடுக ஒவ்வொரு போர்டாரும் தமது வேலைகளுக்காக சிலவு செய்யும் சிலவெல்லாம் பட்ஜெட்டில் குறிக்கப்பட்ட கணக்குகளுக்குமிஞ்சிப் போகக் கூடாதென்பது சாமானிய விதி. பட்ஜெட்டில் அகப்படும் எந்த வேலையையாவது ஆரம்பிக்கு முன்பு அதை முறையாய் ஒவ்வொரு போர்டாரும் மீட்டிங்கில் சோதனைசெய்து தீர்மானித்து 'ஸாங்க்ஷன்' செய்து கொள்ளவேண்டும்.

அப்படி ஸாங்ஷன் ஆகாத சிலவு ஆக்ஷேபணைக்குள்ளாகிவிடும். ஒவ்வொரு போர்டும், தனது நாளுக்குநாள் வரும்படி சிலவு கணக்குகளை எழுதிவைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு சிலவுக்கும் சரியான ரஸீதுகளிருக்க வேண்டுமென்பது தப்பாதவிதி.

செல்வ முறையைக் குறித்து ஆக்டின் 6, 7, அத்தியாயங்களிலும், 4, 5, ஷெட்யூல் (Schedule) பட்டியிலும் ரூல்கள் இருக்கின்றன.

6-ம் அத்தியாயத்தில் குறிப்பிட்ட காரிய முறையைச் சாதிக்க வேண்டுமென்றால் நிலவரியிலிருந்து வரும் ஸெஸ்பணம், வீட்டுவரி, தொழில் வரிகளால் வரும் வரும்படி போதுமாவென்று சிலர் சந்தேகிக்கலாம். போராதது உண்மையே. வரிகளையும் அதிகப்படுத்துவதற்கும் வழியில்லை. பட்டிக் காடுகளில் தரித்திரமாதா தாண்டவமாடுகின்றாள். ஓர் நாளையில் ஓர் வேளை மாத்திரமாவது வயிறு நிறைய உண்பவர்களின் எண் பாதிக்கு மேலிருக்குமென்பதில் ஆச்சரியமேயில்லை. இதெல்லாம் உண்மையே. பஞ்சாயத்து போர்டார் வேலைகளைச் செய்வதற்கு பணமேவேணுமா? கைவேலைக்கு கூலியாய் கொடுப்பதற்கல்லாமல் வாரத்திற்கு ஓர் முறை முறைப்படி கிராமவாசிகள் வந்து வேலைசெய்து வருவார்களாகில் பஞ்சாயத்து வேலைகளை நடத்தபணமே வேண்டுமா? வெள்ளாமை வேலையோ வருஷத்திற்கு நான்கு மாதங்களுக்கு மேலிருக்காது. மற்ற எட்டு மாதங்களிலும் குடியான

வர் சும்மாயிருப்பவர்களே யல்லவா? அப்பொழுது பசுக்களுக்கும் வேலை யவ்வளவாக இருக்காதே! இம் மாதிரி பத்து பேர் ஒரே பிடியாய் வருடா வருடம் கலந்து முயன்று வருவார்களாகில் இரண்டு வருடங்களில்—வேண்டாம் நான்கு வருடங்களிலோ கட்டும்—எந்த கிராமத்தை அழகு படுத்தலாகாது? ஸ்ரீ இராமர் சீதா பிராட்டியாரை சிறை விடுவிக்கவேண்டி சமுத்திரத்தைத் தாண்ட சேதுவையே கட்டின சங்கதியை இராமாயணத்தில் காண்கிறோம். இராமர் வனவாசத்தில் இருந்தபொழுது இந்த பெரிய வேலைக்கு பணத்தைத்தான் வாரி யிறைத்தாரா? அணிப்பிள்ளையுங் கூட மணலைக்கொண்டு வந்து போடவில்லையா? அது கூலி வேண்டுமென்று கேட்டதா? 'ராம் - ராம் - ராம்- ஸீதா - ராம் - ராம் - ராம்' என்று தாளங்களுடன் பஜனையென்ற பெயருடன் அர்த்தமில்லாத கூக்குரல் போட்டு தொண்டை கிழியகத்துவார்களே யல்லாமல் இந்த இராமாயணக் கதையின் பொருளையறிந்து—சமுத்திரத்திற்கு பாலம் போடவேண்டாம்—தத்தம் கிராமங்களைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளாமற் போனலெப்படி?

இவ்வளவிற்கும் பட்டிக்காடுகளில் கிராமாபிவிர்த்திக்கு வேண்டியமட்டும் பணமில்லையென்பது ஒப்புக்கொள்ளவேண்டிய வார்த்தையன்று. ஒரு கிராமத்தில் கள்ளுக்கடையில் வசூலாகும் மொத்தத்தைக் கணக்கிட்டுப் பார்ப்போம். ஏலத்திலெடுப்பவன்

மாதா மாதம் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய பணம் சராசரி சுமார் 50 ரூபாய்கள் என்று வைத்துக் கொள்வோம். சாணுன் கூலி வகையரு குறைந்தது மாதம் ரூ. 50-வது ஆகும். மரங்களிலிருந்து கள்ளை பீப்பாய்களில் கொண்டுவரும் கூலி, சுமை கூலி ரூ. 50. மொத்தத்தில் ரூ. 150 ஆகின்றது. இதுவே வருடத்திற்கு ரூ. 1800 ஆகின்றதே! வருடா வருடம் ஏலமெடுப்போன் இந்தப்பணத்தை யாரிடமிருந்து வசூல் செய்கிறுன்? ஏழை மக்களிடமிருந்தே யல்லவா! இவ்வளவு பணம் அவர்களுக்கு எங்கிருந்து வந்தது? கள் குடித்து கெட்டுப்போக பணமிருக்கின்றது! கிராமத்தைச் செம்மை செய்து எல்லோரும் ஆரோக்கியமாய் வாழ வேண்டுமென்ருல் தரித்திரமோ? என்ன சித்திரம்!

இது அப்படி யிருக்கட்டும். ஸிவில் கிரிமினல் கோர்டுகளில் வீணுன வியாச்சியங்களுக்கென்று ஒவ்வொரு பட்டிக்காட்டிலும்சிலவாகும் பணம்சுமார் வருடத்திற்கு 100 ரூபாயாவது இருக்காதா? வீணுன வியாச்சியங்களுக்கு இவ்வளவு சிலவு செய்வோமாஞல், தத்தம் கிராமங்களில் ஆரோக்கிய நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதற்கு பணமில்லையென்பது பைத்தியக்காரத்தனமல்லவா? இதல்லாமல் எலக்ஷன்களில் இலவசப் பணங் கொடுத்தல், தெண்டச் சிலவு முதலான பண நஷ்டங்கள் வருடாவருடம் அதிகமாகி ஊர்களே பாழாகின்றவை எத்தனையோ?

VIII

தொழில் முறை.

Working Plan.

நமது நாட்டுப் புறங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீட்டுப் பெயரென்று தனிப்பட ஓர் பெயர் இருப்பது அபரூபமல்ல. அந்த குடும்பங்களில் கிழவரெல்லாம் இறந்துவிடுவார்கள். குழந்தைகள் பிறந்து வளர்ந்து வருவார்கள். 50 வருஷங்களுக்கு முன்னே இருந்தவரெல்லாம் இறந்து சின்ன வயதுடையவரெல்லாம் வளர்ந்து பெரியவர்களா யிருப்பார்கள். இம் மாதிரி ஓர் குடும்பத்தி லிருப்பவர்களுள் மாறுதல்கள் உண்டாயிருப்பினும் குடும்பம் மாத்திரம் அந்த ஓர் பெயருடன் விளங்கி நூற்ருண்டு நூற்ருண்டுகளாய் பெயர் பெற்று வருவது பலருமறிந்ததே. போர்டுகளென்ற உள்நாட்டு சபைகளு மப்படியே. இவற்றின் மெம்பர்கள் தமது மூன்றுவருட கெடுவு முடிந்தாலோ, அல்லது இறந்து விட்டாலோ, ராஜிஞமா கொடுத்துவிட்டாலோ, அல்லது வேறு எந்த காரணத்திஞலோ தமது பதவியை இழந்தாலோ, அவர்களுக்குப் பதிலாய் புதியவர் வருவதும் சம்பவித்துக் கொண்டே யிருக்கும். ஓர்வேளை ஆக்டின் 45வதுசெக்ஷன்படி ஓர் போர்டைக் கலைத்துவிட்டால் மறுபடியும் எலெக்ஷன் நடந்து கிரமமாய் புதிய மெம்பர்கள் வரும் வரையிலும் வேலைகளை நடத்திவர ஓர் அதிகாரி

நியமிக்கப்படுவார். இந்த வருஷம் இருக்கும் ப்ரெ ஸிடெண்டு அடுத்த வருடம் இல்லாமற் போக லாம். எல்லா மெம்பர்களும் புதியவர்களாகவே வர லாம். இந்த காரணங்களால் எந்த போர்டுக்காயி னும் கெட்ட பெயர் வரவே கூடாது. போர்டு சபை யில் எத்தனை மாறுதல்கள் உண்டான போதிலும் நடக்கவேண்டியகாரியங்களெல்லாம் போர்டினுடைய தீர்மானங்களை யனுசரித்து நடக்கவேண்டுமென்பது விதி. சிலசில பஞ்சாயத்து போர்டுகளில் ஏன், டிஸ் டிரிக்டு போர்டுகளின் மெம்பர்களும் ப்ரெஸிடெண் டும் தாம் வேலைக்கு வரும்பொழுது எந்தெந்த வேலை கள் நடந்திருந்தனவோ அவைகளை கவனிக்காமல் புது புது வேலைகளை ஆரம்பிப்பார்கள். இப்படிச்செய் வதால் அதற்கு முன் ஆரம்பித்த வேலைகள் முடிவாவ தில்லை. இதனால் ஜனங்களுடைய நன்மைக்கு பங்க மேற்படுவதே யல்லாமல் அதுவரையில் ஏற்பட்ட செல வெல்லாம் வீணாய்ப் போய்விடும். இம்மாதிரி நிலைமைகளை சரியாய்க் கவனித்து சமூகத்தில் எந்த போர்டாராயினும் ஒவ்வொரு மெம்பரும் கிராமத் தின் நன்மைக்காக எந்தெந்த வேலை எதுவரையி லும் நடந்திருக்குமோ (அவைகளை) கவனத்திலிருத்தி அந்த வேலைகள் விடப்பட்டது முதல், முடியும் வரை யிலும் முயலவேண்டும். இதையே, ஊக்கமுடைமை, (continuity) யென்பது.

பட்டிக்காடு பிரதேசங்களில் ஆங்காங்கு நிலை கொண்டிருக்கும் பஞ்சாயத்து போர்டுகள் பலவிதங் களிலும் நல்ல கதியடையும்படி செய்வது அந்த போர்டுகளுக்குக் குறிப்பாக வேண்டுமென்றோம். இதற்குத் தகுந்தாற்போல் போர்டார் அந்த விஸ் தீரணத்தை சரிவர யோசித்து (general survey) எந்த காரியத்தைக் கைக்கொண்டு வேண்டிய இடத்தை சுத்தமாயும் சுந்திரமாயும் அமைக்க முடியுமோ, அதை முன்னடியே நிச்சயப்படுத்திக்கொண்டு ஒவ்வொரு போர்டாரும் முதலில் செய்யவேண்டிய வேலையாகும். பட்டிக்காடுகளில் சில வீடுகளை பூரணமாய் இடித்து வீழ்த்தி சந்துகள் பொந்துகள் இல்லாமல் அகன்ற தெருக்களுடன் புதிதாய் கட்டவேண்டியிருக்கும். பின் னும் சில இடங்களில் கிராமத்திலிருக்கும் வெளிப் பிர தேசத்தை விரிவாக்கி புதிய வீடுகளைக்கட்டி கிரா மத்தையே பெரிதாக்க வேண்டியிருக்கும். அம்மாதிரி பட்டிக்காடுகளில் ஜனங்களுக்கு நீர் வசதி ஏற்பட வேண்டுமென்றால் எங்கெந்த இடத்தில் எத்தனை எத் தனை கிணறுகள் வெட்டவேண்டுமோ, அவை குழாய்க் கிணறுகளாயிருக்க வேண்டுமோ அல்லது இறைக்கும் கிணறுகளாயிருக்க வேண்டுமோ, முன் னடியே யோசனை செய்து நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படியே கக்கூஸுகள் எத்தனை, எப்படியிருக்கவேண்டும்என்பதையும், நிச்சயப்படுத் திக் கொள்ளவேண்டும். கிராமத்திலிருந்து சுற்

றுப் பக்கங்களிலிருக்கும் வண்டிப் பாதைகள், எத்தனை முக்கியமானவை யென்பதையும் கண்டுகொள்ளவேண்டும். ஓர் கிராமத்தில் இந்த வேலைகளெல்லாம் சாதித்து முடிக்க வேண்டுமென்றால் சில வருடங்களேயாகும். இப்படி நடக்கவேண்டிய காரிய கிரமம் முழுவதையும் முன்னடியே கணக்கிட்டுக்கொண்டு அந்த காரியங்களை சம்பூரணமாய் சாதித்துக் கொள்ளும் வரையிலும் தத்தம் வரும்படிகளை யனுசரித்து சுமார் எத்தனை வருஷங்களாகு மென்பதையும் நிச்சயித்துத் தீர்மானப்படுத்திக் கொள்ளவேண்டும். இப்படி காரிய கிரமங்களையெல்லாம் கவனத்திலிருத்தி ஒவ்வொரு போர்டாரும் தம் ஆதாயங்களுக்குத் தக்கபடி வருடாவருடம் கொஞ்சங் கொஞ்சமாய் வேலைகளை முடித்து வரவேண்டும். ஒரு போர்டில் பின்னலிருந்த மெம்பர்களெல்லாம் போய் புதிய மெம்பர்கள் வந்தாலும், மொத்தம் காரிய கிரமத்தில் கவனம் தப்பாது நடந்து வருவது ஜனங்களுடைய நன்மைக்கே லாபந் தருவதாகிறது. இதற்கெனவே ஓர் மனுவெழுதி மீட்டிங்கில் ஒப்புக்கொள்ள வைத்து ரிகார்டிலிருத்திக் கொள்வதும், ஒவ்வொரு போர்டாரும் முதல் முதலாகச் செய்யவேண்டிய வேலையாகின்றது.

காரிய முறை.

அப்படிச் செய்த தீர்மானப்படி காரியங்களை முடித்து வரவேண்டு மென்றால், பணத்தைப் பொரு

த்து நெடுநாள்களாகலாம். எத்தனைநாள் பிடிக்கு மென்பதையும் நிச்சயிக்க வேண்டியது போர்டார் வேலையே. அதன்பின் தத்தம் வரும்படிக்குத் தக்கபடி வருடாவருடம் எவ்வளவு பணம் சிலவழித்து எவ்வளவு வேலை முடித்துக்கொள்ளக் கூடுமென்பதையும் பட்ஜெட்டில் முன்னதாகவே காண்பித்து கொஞ்சங்கொஞ்சமாய்ச் செய்து முடித்துக்கொள்வதே நல்லது. தாலுக்கா போர்டாராயினும் டிஸ்டிரிக்டு போர்டாராயினும் இவ்வழக்கப்படி நடந்துகொண்டாலல்லது உபயோகமே கிடையாது. ருஷியா தேசத்து அதிகாரிகள் தமது அகன்ற தேசத்தை மேல் குறிப்பிட்டவாறு ஐந்து வருடங்களில் ஒழுங்கு படுத்திவிட வேண்டுமென்று தீர்மானித்து வேலைகளை நடத்தி வருகின்றனர்.

ஒற்றுமை.

போர்டு வேலைகளெல்லாம் ஜனங்களுடைய நன்மைக்கென்றே கூறினோம். இம்மாதிரி வேலைகளில் ஜனங்கள் ஒருவரோடு ஒற்றுமைப்பட்டு உழைக்கக் கற்றுக் கொண்டாலல்லது வேலைகள் நடக்க மாட்டா. ஜனங்களுடைய நன்மையும் பொய்யேயாகும். சில வழிக்கும் பணமும் வீணாகி கிராமம் கிராமங்களுக்கே நஷ்டமுண்டாகும். இதற்கு உதாரணம் கூறுவோம். ஓர் குடியானவன் தன் வீட்டு வாசல் முன் படிகளைக் கட்டி சந்தின் விரிவைஆக்கிரமித்துக் கொள்வான் என்று வைத்துக் கொள்வோம்.

இப்படிப்பட்ட அக்கிரமச் செயல்களை அப்பொழு தைக்கப்பொழுதே கவனித்து எடுத்துவிடுவது போர்டுகாரர் வேலையாகும். ப்ரெஸிடெண்டா யிருப்ப வன் ஆக்கிரமித்த நிலத்தை விட்டுவிட வேண்டி ஆக்ட் பிரகாரம் குடியானவனுக்கு நோட்டீஸ் கொடுப்பான். அந்த நோட்டீஸ் பிரகாரம் அதை எடுத்து விட்டால் அவனுக்குக் கொஞ்சம் அனுகூலம் குறைவது உண்மையே. ஆனல் அந்த சந்து வழியில் வரப்போக இருப்பவர்க்கு இடைஞ்சலில்லாமல் நன் மை யதிகமாகு மல்லவா? எனில் அந்த குடியானவன் பலபேருடைய நன்மையை யறிந்து தன் நன்மை யைச் சிறிதே தியாகம் செய்து கொண்டான். இது மிக்க பவித்திரமான அறிவு. ஒற்றுமையென்பதும் இதுவே. ஜனங்களுள் இம்மாதிரி ஒற்றுமைமனது உண்டாக உண்டாக அந்த கிராமம் சுவர்கத் துக்கு இணையானதாகிறது. இம்மாதிரி ஒற்றுமை (இல்லாது) போனல் கணக்கற்ற அனர்த்தங்கள் விளையும். அக்குடியானவன் ஜனங்களுடைய நன் மையை எண்ணது ப்ரெஸிடெண்டு தனக்கு நோட் டீஸ் எழுதுவதனல் கிராமத்தில் தன்னை யவமானப் படுத்துவதற்குச் செய்த வேலையென்று எண்ணின னென்று வைத்துக் கொள்வோம். இதனல்குடியான வனுக்கு உள்ளுக்குள்ளே ப்ரெஸிடெண்டுமேல் மன ஸ்தாபம் உண்டாகும். இதுநாளுக்குநாள் முற்றி கிரா மம் முழுவதிலும் கக்ஷிகள் விளையும். ப்ரெஸிடெண்டு

பக்கம் சிலரும், குடியானவன் பக்கம் சிலரும், நின்று போரிடும்பொழுது மெம்பர்கள்கூட அந்த கக்ஷிகளில் சேர்ந்து கொள்வது சகஜமாகின்றது. அப்படி நடக்கும்பொழுது போர்டு போர்டே குடிஜன நன்மையை முற்றிலும் மறந்துவிடும். அதனுல் பட்டிக் காட்டு ஜனங்கள் கொடுக்கும் வரிகளின் தொகையும் கிரமமாய் சிலவு செய்யப்படுவதில்லே. இவ்வளவேயல்ல. அந்த கிராமத்து ஜனங்கள் தமது காரியங்களே தாமாகவேசெய்து கொள்ளக்கூடிய யோக்கியதையில்லாதவரென்ற கெட்ட பெயரையும் சம்பாதித்துக்கொள்ள வேண்டிவரும். இம்மாதிரி கிராமங்கள் பல என்ருல் இனி நாட்டிற்கே கெட்ட பெயரல்லவா? இன்னெரு உதாரணம். ஓர் பஞ்சாயத்து சபையார் கிராமத்தில் தினந்தோறும் தெருக்களேக் கூட்டிச் சுத்தப்படுத்துவார்க ளல்லவா? தெருக்களேக் கூட்டுவோரின் சம்பளங்களே அவ்வூர்க்காரர் வருடா வருடம் கொடுக்கும் வரிப் பணத்திலிருந்தே கொடுக்க வேண்டும். கூட்டி சுத்தமான தெருக்களில் எச்சில் இலேகளேப் போடுவதும், வழி நெடுக சமையல் பாத்திரங்களேக் கழுவி அழுக்குத் தண்ணீரை இரைத்து ரோந்தை செய்துவைப்பது நம்மக்களில் அபரூபமான வேலேயன்று. வரிப்பணத்தை யளிக்கும் குடியானவர்க்கே இம்மாதிரி சுத்தமாயிருப்பதன் மேல் அக்கரையில்லாதபொழுது போர்டார் என்ன பிரயத்தனம் செய்தாலும் பிரயோசன மென்ன? ஆனத

ஞல் குடியானவ ரொவ்வொருவரும் தமது வீடுகளின் முன்னே தெருக்களை சுத்தமாக வைத்துக்கொண் டால் போர்டாருக்கும் துணைசெய்வதைப் போலா கும். இதையே ஒற்றுமை யென்பது. இன்னெரு உதாரணம். ஓர் கிராமத்தில் காலரா (வாந்திபேதி) வந்ததென்று வைத்துக்கொள்வோம். ஆரோக்கிய இலாகா அதிகாரிகள் அந்த கிராமத்தில் வந்து தங்கு கிறார்கள். தண்ணீர் முதலியவற்றை நன்றாகக் காய் ச்சி உபயோகப்படுத்த வேண்டுமென்று தண்டோரா போடுவார்கள். அப்படி எல்லோரும் செய்வார்களா ஞல் ஊருக்கே க்ஷேமமல்லவா! இதையே ஒற்றுமை யென்பது. இவ்வதிகாரிகளின் சொற்களைக் கேட்கா மல், ஒற்றுமையாயு மிருக்காமல் தண்ணீரைக் காய்ச் சாமலே குடித்து வந்தால் குடிஜனங்களுக்கே வினை யாய் முடியும். இதனுல் கிராமத்திற்கே கேடுகாலம் வரும். இன்னெரு திருஷ்டாந்தம். குக்கிராம வண்டிப் பாதைகள் ஒன்று இருக்கிறது—ஏன்? எத்தனையோ விருக்கின்றன. அவற்றில் குழியோ, அல்லது குறு க்கே ஓர் பாராங்கல்லோ, பெரிய குண்டோ, ஜனங் களுக்கும் ஆடு மாடுகளுக்கும் வண்டிகளுக்கும் போக வர அபாயம் விளைவிக்கக் கூடியதாயிருக்கலாம். அந்த வழியே செல்லும் குடியானவன், தன் வண் டியை நிறுத்தி, குழியை மூடியோ, அல்லது கல்லை யப்புறந் தள்ளிவிட்டோ செல்வானேயானுல், கிரா மத்து ஜனங்களுக்கேயன்றி வண்டிகளை யிழுக்கும்

வாயில்லாப் பிராணிகளுக்கும் உபகாரம் செய்ததாகிறது. தன் வண்டியை நிறுத்தி இந்த நல்ல காரியத்திற்கு முனையும்பொழுது தன் வேலைக்குக் கொஞ்சம் இடைஞ்சலுண்டாவது நிஜமே. ஆனால்தான் செய்த வேலையால் பல ஜனங்களுக்கே யல்லாமல் வாயில்லாப் பிராணிகளுக்கும் நன்மை விளைகின்றது. இப்படி பலருடைய நன்மைக்காக தன் நன்மையைச் சிறிதே மறந்து விடுவதையே தியாகமென்று சொல்வார்கள். இப்படி தியாக புத்தியை ஜனங்கள் சமூகத்தில் கற்றுப் பழகி வருவார்களானால் இணையற்ற சுயராச்சியத்தைத் தாங்க அவர்களுக்கு வல்லமையுண்டாகும்.

தாக்ஷிண்யம்.

நமது பட்டிக்காடுகளில் தாக்ஷிண்யம் என்ற எண்ணம் செய்கின்ற கொடுமையை வேறொன்றும் செய்யாது. தாக்ஷிண்யம் என்பது நல்ல குணமே. ஒருவனுக்குப் பொறுமையைக் காண்பித்து பத்து பேர்க்கு இடைஞ்சலுண்டாகுமானால் அது தாக்ஷிண்யமேயல்ல. சமூக நன்மையை நாடி எவராயினும் சில காரியங்களைச் செய்ய முயலும்பொழுது யாருக்காயினும் ஒருவருக்கு தொந்திரவு உண்டாகாமல் போகாது. உதாரணம். ஓர் கிராமத்தில் ஓர் வீட்டில் ப்ளேக் வியாதி வந்ததென்று வைத்துக்கொள்வோம். அந்த வீட்டாரை ஊரைவிட்டு நீக்கி தூரத்தில் குடியிருக்கவைத்து வருவோமானால் அந்த கிராமத்தி

லேயே பிளேக் வராமல்போய்விடும். கிராமத்திற்கே நன்மையாகும். அப்படியில்லாமல் தாக்ஷிண்ய மென்ற குணத்தை முழுக்கிராமத்திற்கே காட்ட வேண்டி வந்தபொழுது ப்ளேக் கண்ட வீட்டாரை ஊருக்கு வெளியே போகச் சொல்வதனுல் ப்ரெஸி டெண்டு தாக்ஷிண்யமில்லாமல் நடந்து கொண்டா னென்பார்கள். இம்மாதிரி சமயங்களில் குடி ஜனங் களே அகன்ற மனப்பார்வை யுடையவர்களாயிருக்க வேண்டும். அப்படி பிளேக் வந்த வீட்டுக்காரன் தான் கிராமத்திலிருந்தால் ஊருக்கே அபாயமென்று மற்றவருடைய நெருக்கம் இல்லாமலே தன் வீட் டுக்காரருக்கு அனுகூலம் குறைந்தாலும் வீட்டை விட்டுப்போகும் எண்ணங்கொள்வானே யானுல் அதையே ஒற்றுமையானது என்பதுமாகும். பல பிராணிகளின்மேல் தாக்ஷிண்யம் காட்டுவது மாகும்.

சமூகத்தில் போர்டு பணத்தைச் சிலவழிக்க வேண்டிவரும்பொழுது ஒவ்வொரு மெம்பரும் தன் பணத்தை சிலவிடும்பொழுது எவ்வளவு அக்கரை, ஒழுங்கு, ஜாக்கிரதை, எச்சரிக்கைகளுடன் சில விடு கிருனே அவ்வளவு அக்கரை சிரத்தைகளுடன் சில விடயோசிப்பது நலம். எந்த போர்டாயினும் தாம் செய்யவேண்டி எண்ணின வேலைகளில் எது அவ சரமாயிருக்கிறதென்று தெரிந்து அதை முதல் செய்ய முயலவேண்டும். அந்த காரியத்தைச் செய்ய பணம் சிலவழிக்க வேண்டியபொழுது போதுமான பண

வென்று, முதல் முதலாக ப்ரெஸிடெண்டு மெம்பர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அதன்மேல் ஒவ்வொரு மெம்பரும் தீர்க்காலோசனை செய்து அந்த சிலவை ஏற்றுக் கொள்வதற்கோ, விட்டு விடுவதற்கோ எல்லோருடன் கலந்து தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அப்படிக் கில்லாமல், "நம் சொத்தென்ன போகிறது" என்ற எண்ணத்துடன் மெம்பர்கள் இளக்காரமாய் நடந்து வந்தால் நஷ்டப்படுவது கிராமத்தாரே.

அதிகாரிகள் சகாயம்.

ஜனங்களுடைய நன்மையைக் காக்கவேண்டியே, ஆரோக்கிய கிளையிலும், வைத்தியக் கிளையிலும், கல்விக் கிளையிலும், ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிகாரிகள் மேற்பார்வையிட்டு வருவார்கள். போர்டார் தமது வேலை யாரம்பிக்குமுன் ஓர்வரி எழுதினாற் போதும். நேரே வந்து தக்க யோசனை சொல்லி வழி காட்டுவதற்கு அவ்வதிகாரிகள் சித்தமாயிருப்பார்கள். ஓர் கிராமத்தில் ஏதோ ஒரு காலத்தில் ஜுரம் அதிகமாகவந்திருந்ததென்றுவைத்துக்கொள்வோம். அவ்விடங்களிலிருக்கும் மெம்பரோ, அல்லது அக்கிராமத்திற்குச் சேர்ந்த போர்டு ப்ரெஸிடெண்டோ ஹெல்த் ஆபீஸருக்குஓர் கடிதம் வரைந்தால் தாமதமின்றி அவர் சுயமாகவேவந்து விசாரித்து வேண்டிய வேலையைச் செய்துவைப்பார். அல்லது தன்கீழ் இருப்பவரில் யாரையாவது அனுப்புவார். போர்டார்

முயர்ந்து இயலும் காரியங்களில் இவ்வதிகாரிகளின் உதவி மிகமுக்கியமானது. இந்த அதிகாரிகளுடைய சம்பளங்கள் பிரயாணச்சிலவுகளுக்கெல்லாம் பணம் கொடுத்துவருவது குக்கிராமக் குடியானவனே என்பதையும் ஒவ்வொரு போர்டாரும் நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும்.

மேற்பார்வை.

ஒவ்வொரு போர்டு மெம்பரும் ஒழிவேற்படுத்திக்கொண்டு போர்டு பிரதேசத்தை அடிக்கடி பார்வையிட்டு வரவேண்டும். அங்கங்கே பள்ளிக்கூடங்களிருக்கும். அந்தப் பள்ளிக்கூடங்களில் எத்தனை பிள்ளைகளிருக்கின்றார்கள்? பெண்பிள்ளைகள் எத்தனைபேர் ? வாத்தியார் தீண்டப் படாதாரை தடங்கலில்லாமல் சேர்த்துக் கொள்கிறாரா? கிராமத்தில் பள்ளிக்கூடம் போகாத பிள்ளைகள் இருக்கிறார்களா? அவர்களைப் பெற்றோர் ஏன் இவர்களைப் பள்ளிக்கூடம் அனுப்புவதில்லை என்ற அம்சங்களைக் குறித்து ஒவ்வொரு மெம்பரும் நீடித்து விசாரித்துத் தெரிந்து கொள்ளவேண்டும். இப்படித் தான் தெரிந்துகொண்ட விஷயங்களைக் குறித்து அப்பொழுதைக் கப்பொழுதே ஊர் பெரியவர்களுடன் நேரே வார்த்தையாடி தன்னாலான வரையிலும் குறைகளைச் சீர்ப்படுத்தவேண்டும். தெரிந்துகொண்ட விஷயங்களைக் குறித்து ப்ரெஸிடெண்டுக்கு உடனே எழுத வேண்டும். சில மெம்பர்கள் தமது அதிகாரத்தைக்

கண்டோர் மெச்சும்படி போர்டு வேலையாட்களிடம் மரியாதையில்லாமல் ஏளனமாய் நடந்து கொள்வது முண்டு. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்முன்னே, உபாத்தியாயரைத் தண்டிப்பார்கள். இப்படிச் செய்வதனால் பிள்ளைகள் நெறியடைவதெப்படி? ஓர் மெம்பர் தான் சென்ற கிராமத்தில் நீர்வசதி எப்படி யிருக்கிறது? நடைக்கிணறுகளில் குடிக்கத் தண்ணீர் எடுத்துச் செல்கின்றார்களா? குடிக்கும் தண்ணீர்க் கிணறுகள் இருக்கின்றனவா? தீண்டப் படாதார் தண்ணீருக்கு என்ன செய்கின்றார்கள்? அவர்களுக்குத் தனிப்பட கிணறுகளிருக்கின்றனவா? என்ற விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதுவுமல்லாமல் கிராமத்து வேளாண்மைப் பயிர்களுக்கு ஏதோ பூச்சிபிடித்து கெட்டு விட்டனவென்போம். அச் சமயத்தைத் தெரிந்து கொண்டு எந்த மெம்பராயினும் தமது ப்ரெஸிடெண்டுக்கு அந்த சங்கதியை தெரியப்படுத்தினால், ப்ரெஸிடெண்டு, வியவசாய அதிகாரிகளுக்கு எழுதி அவர்களைக் கிராமத்திற்கு வரவழைத்து செம்மை செய்யக்கூடிய அவகாசமிருக்கும்.

எக்கிராமத்திலாவது கக்கூஸுகள் நீர் வசதி செம்மை செய்யவேண்டிய விஷயங்கள் எத்தனையோ யிருக்கும். இவ்விஷயங்களில் ஹெல்து ஆபீஸர்கள் கேட்டவுடனே உதவி செய்ய சித்தமாயிருப்பார்கள். அங்கமெல்லாம் கண்கள் நிறைந்து சமூக நன்மை

யிலேயே அக்கரை பெற்று ஒவ்வொரு மெம்பரும் அக்கரையுடன் நடந்து கொள்வானேயானுல் ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவோ சாதித்துவரலாம்.

அக்கரை.

இந்த காரிய முறையெல்லாம் நினைவுக்கு வரும் பொழுது இதற்கு வேண்டியமட்டும் பணம் கிடைக்காவென்பது பலருடைய சந்தேகமும் பயமுமாகும். இந்த பண உதவி ஏற்படவேண்டியதற்கு முக்கியமான உபாயம் ஒன்றிருக்கிறது. பஞ்சாயத்து போர்டாராலுைம் தாம் நினைத்த காரியத்தை தாமே சுயமாய்ச் செய்யவேண்டுமேயன்றி கண்டிராக்டர்களுக்குக் கொடுத்துவிடக்கூடாது. இம்மாதிரி வேலைகளில் ஒல்வொருமெம்பரும் ஜனங்களுடைய நன்மையையே மனதிலெண்ணி, மேல்கண்ட காரியங்களைச் செய்ய முயன்றபொழுது ஒரு ரூபாய் சிலவு செய்ய வேண்டிய இடத்தில் எட்டு அணவுடன் வேலையை முடித்துவிடலாம். கிராமத்தில் குடியானவர்கள் வேலையில்லாமல் உட்கார்ந்திருக்கும்பொழுது மண் வேலை, கல் வேலை, முதலான வேலைகளெல்லாம் பேச்சு வல்லமையாலேயே சிலவில்லாமல் செய்து கொள்ளலாம். சமூகத்தில் பஞ்சாயத்து போர்டார் செய்துவைக்கும் வேலைகளெல்லாம் ஜனங்களுடைய நன்மைக்கென்று தெரிந்தால் பட்டிக்காட்டு ஜனங்களும் அக்கரையுடனும் விருப்பத்துடனும் உதவி செய்யக்கற்றுக்கொள்வது உண்மை இம்மாதிரி

அக்கரை ஜனங்கள் மனதில் தோன்றினல் ஜனங்களுடைய நன்மைகளுக்கான காரியங்களைச் சாதிப்பதற்கு பணமுமவ்வளவாக வேண்டியதில்லை. எந்த கிராமத்திலாயினும் ஜனங்கள் இம்மாதிரி நல்லமனதுடன் நடக்கவேண்டித் தூண்டிவந்தால் பெரிய உபகாரமேயாகும்.

மெம்பர்களெல்லாம் மேற்கூறியவாறு மேற்பார்வையிடாமல் மாதத்திற்கொருதரமோ, இரண்டு மாதங்களுக்கு ஒருதரமோ, மீட்டிங்குக்கு வந்தும், அந்த மீட்டிங்குகளில் நடக்கும் சங்கதியின்னதென்று தெரிந்துகொள்ளாமலே, ரிஜிஸ்டரில் கையொப்பமிட்டுவிட்டு போய்விடுவார்கள். அப்பொழுது பாரமெல்லாம் ப்ரெஸிடெண்டின்மேல் விழும். ப்ரெஸிடெண்டு தர்மிஷ்டனனலும், மெம்பர்களுக்கு அக்கரை யில்லையென்று தெரிந்துகொண்டதும் தானும் அக்கரையற்றவனய் விடுவான்.

ஒவ்வொரு போர்டும் நிரைவேற்றவேண்டிய வேலைகளை 5-ம் அத்தியாயத்தில் கூறினேம். இவ் வேலைகளை வருஷம் நெடுக நடத்திவர வேண்டுமென்றல், தக்க வேலையாட்களும், அவர்கள் மேல் அதிகாரிகளும், அந்தந்த இடங்களில் வேலைசெய்துவர வேண்டும். இந்த சிப்பந்திகள் எத்தனை பேரென்பதையும் எந்தெந்த வகுப்புகளிலிருக்கவேண்டியதையும், அவர்கள் சம்பளங்கள், அலவென்ஸுகள், இவற்றையெல்லாம் நிச்சயிப்பதும், தீர்மானிப்ப

தற்கும் அதிகாரம் பெற்றவர்கள் அந்தந்த போர்டாரேயாவார்கள். இஞ்சினீயர்கள், அவர்களுக்குக் கீழ் அஸிஸ்டெண்டு இஞ்சினீயர்கள், ஓவர்சீயர்கள், மேஸ்திரிகள், ஹெல்து ஆபீஸர்கள், ஹெல்து இன்ஸ்பெக்டர்கள், வியாக்ஸினேடர்கள், சப் அஸிஸ்டண்டு ஸர்ஜன்கள், கம்பௌண்டர்கள், மந்திரசானிகள், குப்பைகூட்டுவோர், தோட்டிகள், உபாத்தியாயர்கள், பெண் உபாத்தியாயர்கள், சூபர்வைசர்கள், வாச்சர்கள், அவ்வவ்வதிகாரிகளின் சேவகர்கள், ஆபீஸ் குமாஸ்தாக்கள் முதலிய பரிவாரங்களெல்லாம் போர்டைச் சேர்ந்தவையே. இப்படிப்பட்ட சிப்பந்திகள் அவசியமாயிருப்பதைப் பற்றி அப்பொழுதைக்கப்பொழுது போர்டாருக்கு வெளிப்படுத்தும் அதிகாரமுடையவன் ப்ரெஸிடெண்டு. ப்ரெஸிடெண்டு இந்த பாகத்தில் செய்யும் யுக்திகளை ஆராய்ந்து உண்டு என்பதற்கும் இல்லையென்பதற்கும் போர்டுக்கே அதிகாரம் இருக்கிறது.

இப்பொழுது டிஸ்டிரிக்ட் இஞ்சினீயர்களையும் ஹெல்து ஆபீசர்களையும் லோகல் கவர்ன்மெண்டாரே தமது சிலவில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் நியமித்து வருவார்கள். ஒவ்வொரு ஜில்லாவிற்கு ஒவ்வொரு பஞ்சாயத்து ஆபீசரை டிஸ்டிரிக்டு போர்டார் நியமிக்கவேண்டுமென்பது புதிய ஆக்டின் ரூல் ஆகிறது. ஜில்லாவில் பஞ்சாயத்து போர்டுகள் இல்லாத விடங்களில் அவற்றை யுண்டாக்குவதும், முன்

ஷடியே இருக்கிற விடங்களில் அடிக்கடி விசாரித்து குறைகளை நீக்கி வரவேண்டியதும் இந்தபுதிய உத்தி யோகியின் வேலை. நாடெங்கும் சிறிய சிறிய கிராமங் களால் நிறைந்திருப்பதனாலும், கிராம வளர்ச்சியே, நாட்டின் வளர்ச்சியாவதனாலும், இதற்காகத் தனிப் பட்ட உத்தியோகி யிருக்கவேண்டியது அவசரம். முதலாக எலெக்ஷனில் மெம்பராய்வந்தபின் ப்ரெஸி டெண்டாக வருவோன் அந்தந்த தாலுக்காவில் சொல்வன்மையுடையவனாயிருப்பது சகஜமே. எவ் விடங்களில் எவரெவர் ஜனங்களுடைய நன்மையை விரும்புகின்றார்களோ, யாருக்கு இம்மாதிரியான விஷயங்களில் அக்கரையிருக்குமோ, யார் யார் எடுத் துக்கொண்டபஞ்சாயத்துவேலைகளைச்சிரத்தையுடன் நடத்தி முடிப்பார்களோ, அப்படிப்பட்டவரை ஒவ் வொருவிடத்திலும் ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டு தெரிந்து கொள்வதற்கு எளிதேயாகும். ஒவ்வொரு மெம்பரும் இக்காரியத்தில் ப்ரெஸிடெண்டுக்கு சகா யஞ் செய்யக்கூடும். இம்மாதிரி உதவியைக்கொண்டு எந்த ப்ரெஸிடெண்டானாலும் ஒவ்வொரு இடத்திலும் குடிமக்களுடன் கலந்து களிப்பூட்டத் தகுந்தவனுமா கின்றான்.

டிஸ்டிரிக்ட் இஞ்சினீர், ஹெல்து ஆபீஸர், பஞ் சாயத்து ஆபீஸர் இவர்களை வேலையினின்றும் நீக்கி விட ப்ரெஸிடெண்டுக்கு அதிகாரம் கிடையாது. சமூக ஒழுங்கில் டிஸ்டிரிக்டு போர்டாருக்கே அதிகார

முண்டு. அதிலும் பாதிக்கு மேற்பட்ட மெம்பர்கள் ஒன்றுகூடி தீர்மானஞ் செய்தாலன்றி உத்தியோ கத்தைவிட்டு நீக்கிவிடமுடியாது. அப்படியானலும் அத்தீர்மானத்தை லோகல் கவர்ன்மெண்டார் ஒப் புக்கொண்டாலன்றி செல்லாது. மேற்கண்ட உத்தி யோகங்களில் காலி விழுந்தால் மறுபடியும் உத்தி யோகியை நியமிக்கும் அதிகாரம் டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடெண்டுடையதேயாகும். ஆனல் இப்பொழுது இஞ்சினீருக்கும், ஹெல்து ஆபீஸருக்கும் கவர்ன் மெண்டாரே சம்பளங்கள் கொடுத்து வருவதனுல் அந்த வேலைகளைக் கவர்ன்மெண்டாரே செய்து வரு வார்கள். அந்த உத்தியோகிகளை ஓரிடத்திலிருந்து மற்ரேரிடத்திற்கு மாற்றுமதிகாரமும் கவர்ன்மெண் டாருடையதேயாகும்.

இப்பெரிய உத்தியோகிகளைத் தவிர மற்ற அதி காரிகளையாவது, சேவகர்களையாவது நியமிக்கும் அதிகாரம் ப்ரெஸிடெண்டினுடையதே. இவ்விஷயத் தில் லோகல் கவர்ன்மெண்டார் ஏதாவது சட்டங் களை விதிப்பார்களானல் அச்சட்டங்களுக்கு உட் பட்டு நடந்து கொள்ளவேண்டும். மிக்க அவசர மான சமயங்களில் போர்டாருடைய சம்மதமில்லா மலே இசைந்த வழியில் புதிய வேலையாட்களை நிய மித்து ஏதேனும் ஓர் காரியத்தைச் செய்ய ப்ரெஸி டெண்டுக்கு அதிகாரம் உண்டு. அப்படி நியமித் தால் அச்செய்தியை யடுத்த மீட்டிங்கில் போர்டா

ருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பது சட்டமாகும்.

இக்காரியத்தில் ஒவ்வொரு போர்டாரும் தமக்குத் தோன்றியபடி தமது வேலையாட்களுடைய எண்களையும், அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளங்களையும், நியமித்துக்கொள்கின்றனர். பல விடங்களில் ப்ரெஸிடெண்ட் கேவலம் தாக்ஷிண்யத்திற்கு உட்பட்டு போர்டின் நன்மையைக் கவனிக்காமல், முடியாது என்று சொல்லவும் தைரியமில்லாமல், தம்மிடத்தில் வேலை செய்வோர்க்கு அவர்களுடைய யோக்கியதைக்கு மிஞ்சின சம்பளங்களைக் கொடுத்து வருவதும் அபரூபமல்ல. அப்படிப்பட்ட வேலையாட்களை மாற்றவேண்டுமானல் அந்த போர்டில் அவ்வளவு சம்பளம் இல்லாமலிருந்தால் அதுவும் ஒரு இடைஞ்சலே. போர்டில் பணமில்லாமல் சிலவைக் குறைக்கவேண்டுமானல் ப்ரெஸிடெண்டுக்கு தன் ஆபீஸ் குமாஸ்தாக்களுடைய சம்பளங்களைத் தொடுவதற்கேனும் தைரியம் போதாது. தமது காலத்தில் ஏழை சேவகர்களுடைய வயிற்றின்மேல் அடிக்க வேண்டியிருக்குமேயென்ற அபவாதத்திற்கு பயப்படுவார்களேயல்லாமல் வரிகொடுக்கும் ஏழை வேளாளருடைய நன்மையைக் கவனிக்கமாட்டார்கள். போர்டு வேலையாட்களுடைய சம்பளங்களில் மாறுதல்கள் உண்டாகும் வேளையில், வேலைக்காரரெல்லாம் மீட்டிங்குக்கு முன்னல் மெம்பர்களை ஒவ்

வொருவராகக் கண்டு மன்ருடுவதும், அந்த மெம்பர் களும் போர்டுடைய வரவு சிலவுகளைக் கவனிக்காமல் "நம்முடைய சொத்தென்ன குறைகிறது" என்ற எண்ணத்துடன் தாக்ஷிண்யத்திற்கு கட்டுப்பட்டவர் களாய் வேலையாளரைத் துன்பப்படுத்தலாகா தென்று, சம்பளங்களை யுயர்த்துவதற்கு சம்மதிப் பது வழக்கமாகிறது.

ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட ஸர்வீஸ் உடையவனுய் ரூ. 50-க்குக் குறையாமல் சம்பளம் வாங்கும் காயமான ஒருவனுடைய சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்று ஓர் ப்ரெஸிடெண்டு எண்ணினல் அந்த விஷயத்தைத் தீர்மானித்து விடுவ தற்கு ஓர் ஸ்பெஷல் மீட்டிங்கு கூடவேண்டும். ஆஜராயிருக்கும் மெம்பர்களில் பாதிபேர் ஒப்புக் கொண்டாலன்றி அம்மாதிரி குறைப்பதற்குச் செய்த தீர்மானத்திற்கு விலையுமிராது.

மிகுந்த வேலைக்காரருக்கு கொடுக்கும் சம்பளங் கள், லீவ்கள், லீவ் சம்பளங்கள், பிரயாணபத்தாப ணங்கள், கிராசூயிடி (Gratuity) பணங்கள், முதலா னவையெல்லாம் கவர்ன்மெண்டு வேலைக்காரருக் கெப்படியோ அப்படியே யிருக்கவேண்டுமென்பது சாதாரண விதியாகிறது. போர்டார் இதற்கு மீறி நடக்கவேண்டுமானல் லோகல் கவர்ன்மெண்டாரு டைய சம்மதத்தை அவசியம் பெறவேண்டியதே.

மேல் காணப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்டு வேலைக்காரரைத் தண்டிக்கும் அதிகாரமும் ப்ரெஸிடெண்டுடையதே. டிஸ்டிரிக்ட் போர்டு இஞ்சினியர், ஹெல்து ஆபீஸர், டிஸ்டிரிக்ட் பஞ்சாயத்து ஆபீஸர்களையும் லோகல் கவர்ன்மெண்டார் தவிர, ப்ரெஸிடெண்டுகள் தண்டிக்க அதிகாரங்கிடையாது.

எச்சரிக்கை செய்வது, அபராதம் போடுவது, பிரமோஷன் நிறுத்துவது, சம்பளங்களைக் குறைப்பது, ஸஸ்பெண்டு செய்வது, வேலையை விட்டு நீக்கி விடுவது, இவையெல்லாம் தண்டிப்பதின் வேற்றுமைகள்.

சட்ட விரோதமாய் நடப்பது, ஒழுங்கு தப்பி நடப்பது, அஜாக்கிரதை, ஆசாமியே சில சமயங்களில் இல்லாமற்போவது, யோக்கி யதையற்ற தன்மை, வேலையில் அலக்ஷியம், இன்னும் பலவிதமான கெட்ட நடத்தையெல்லாம், வேலை செய்வோன் தண்டனை யடையக் காரணங்கள்.

ஜில்லா போர்டு இஞ்சினீர், ஹெல்து ஆபீஸர், பஞ்சாயத்து ஆபீஸர், இவர்களுக்கு ரஜா கொடுக்கும் அதிகாரம் லோகல் கவர்ன்மெண்டாருடையது. ஜில்லா போர்டு பிரெஸிடெண்டு மற்ற வேலைக்காரருக்குரஜா கொடுப்பார். அப்படியே, பஞ்சாயத்து போர்டு ப்ரெஸிடெண்டுகளும் தத்தம் வேலைக்காரருக்கு லீவ் கொடுக்க அதிகாரமுடையவர்கள்.

எந்த லோகல் போர்டாராயினும் தமக்கு அவசரமான சமயங்களில் லோகல் கவர்ன்மெண்டைக் கேட்டு தமது வேலைகளுக்காக அவர்களுடைய வேலையாட்களை தற்காலத்திற்காக வரவழைத்துக் கொள்ளலாம். அவ்வேலையாளருடைய சம்பளத்தையும் பென்ஷன் பங்கு பணத்தையும், அச் சமயத்தில் போர்டாரே ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்த உத்தியோகியைத் தண்டிப்பதற்கும் ப்ரெஸிடெண்டுக்கு அதிகாரம் உண்டு.

அந்த உத்தியோகியை லோகல் போர்டு வேலையிலிருந்து மிக்க அவசரமாயிருந்தாலல்லாமல் லோகல் கவர்ன்மெண்டார் திரும்பி வரவழைத்துக் கொள்ளலாகாது. அப்படிவிரும்பியபொழுது மூன்று மாதம் நோட்டீஸ் லோகல்போர்டாருக்குக்கொடுக்க வேண்டும்.

லோகல் போர்டுகளுக்குச் சேர்ந்த எந்த வகுப்பு உத்தியோகஸ்தரையும், சேவகர்களையும் ஒரு வர்க்கத்தாராக ஏற்படுத்துவதற்கு லோகல் கவர்மெண்டாருக்கு சுதந்திரமுண்டு. அதற்கு வேண்டிய நிபந்தனைகளை யுண்டாக்கலாம். ரிவின்யூ இலாகாவில் இருப்பதைப்போலவே ஜில்லா முழுவதிலும் ஒவ்வொரு பிரிவையும் வேறு வேறு வர்க்கங்களாய் அமைத்து அவர்கள் சம்பளங்களையு மப்படியே கொடுத்துவிட வழி ஏற்படுத்தினல் இடைஞ்சலுக்கே இடமிருக்காது. இப்படிப்பட்ட ரூலுகளையிட்டு அதன்

படி நடத்தி வருவதற்கும் டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கு அதிகாரமிருக்கிறது. ஆனல் அந்த ரூல்கள் ஆக்டுக்கு மிஞ்சிப் போகக்கூடாது. கவர்ன்மெண்டாரும் அப்படிப்பட்ட கரூல்களை ஒப்புக்கொண்டு வெளியிட்டு வரவேண்டும்.

ஒவ்வொரு ப்ரெஸிடெண்டும் போர்டு வேலையாட்களிடம் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும். காரணமொன்று மில்லாமல் அவர்களை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு மாற்றக்கூடாது. சில ப்ரெஸிடெண்டுகள் காரண மொன்று மில்லாமலே உபாத்தியாயர்களை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு மாற்றிக்கொண்டு வருவது அபூரூபமானதல்ல. அப்படி மாற்றும்பொழுது அவர்களுக்குப் பிரயாணச் சிலவையும் கொடுப்பதில்லை. இப்படி டிரான்ஸ்பர் செய்து வருவதனுல் உபாத்தியாயர்கள் ஓர் நிலையாய் நிற்காமற் போவதனல் அவர்களுக்கு வேலையிலேயே சந்தோஷ மில்லாமற்போய் விடுகின்றது. எலெக்ஷன் காலங்களில் ப்ரெஸிடெண்டோ பிரெஸிடெண்டுக்கு வேண்டியவர்களே கியாண்டிடேட்டாய் நின்ருல் இப்படிப்பட்ட டிரான்ஸ்பர்கள் சித்திர விசித்திரமாயிருக்கும். இப்படிப்பட்ட விபரீதங்களால் வேலைக்காரருக்கு வெறுப்புத் தோன்றும். அதிகாரியிடத்தில் பயமொன்றே மிஞ்சுமல்லாது தாம் செய்யவேண்டிய வேலையில் அக்

கரையும் குறைந்து போய்விடும். போர்டு பணத்திற்கும் நஷ்டமுண்டாகும்.

பட்டிக்காடு உருப்பட்டாலன்றி நாடு நலம்பெருது என்றேம். பட்டிக்காட்டு ஜனங்கள் சமூகத்தில் அகன்ற பார்வை, ஒற்றுமை, அக்கரை, ஜனங்களுக்குநன்மையாகவேண்டுமென்ற எண்ணம்,இவையெல்லாம் உடையவரானுல் வேலைகளை நடத்துவதற்குப் பணத்தால் அவ்வளவு அவசரமில்லையென்பதையும் இதை வாசிப்போர் அறிந்திருப்பார்கள். இந்த உற்சாகத்திற்கு ஏழமை குறுக்கிடாது. இந்த காலத்திற்குத் தகுந்தபடி இங்கிலீஷ் கற்ற இளைஞர் கிராமம்கிராமங்களாய் நிறைந்திருக்கின்றனர். அவர்களிடம் தேசபக்தியும் தோன்றுகிறது. நாட்டிற்காக ஜெயிலுக்குப் போய் கஷ்டப்பட்டவரும், தியாகம் செய்தவர்களும் அதிகமாகின்றூர்கள். இதற்கு உதவியாய் ஒவ்வொரு கிராம உபாத்தியாயர்கள் புதிய புதிய எண்ணங்களுடன் குடி ஜனங்களுடைய மனதுகளைத் திருத்த பலவிதங்களாய் முயன்று வருகின்றனர். ஸ்கௌட் சபைகள் எல்லா விடங்களிலும் வளர்ந்து வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் நமது பழைய நாளைய இராம சேனையைப்போல் கூட்டமாய் நாட்டிற்கு உழைத்தல் இதுவேயென்ற எண்ணத்துடன் வாரத்திற்கு ஒரு முறையாயினும் பஜனை செய்துகொண்டு துடைப்பங்களைக் கையில் பிடித்துக்கொண்டு தெருக்களைக் கூட்டலாம். பாதை

களைச் செம்மை செய்யலாம். கிணறுகளை வெட்டலாம். கடைசியில் கக்கூஸுகளிலும் நுழைந்து சுத்தம் செய்யலாம். இப்படி முனைந்து நடந்தாலல்லவா "தேசமாதாக்கு ஜேய்" என்ற வெற்றிக்குரல் உண்மையாகும்.

IX

அதிகாரமுறை.

Powers.

ஓர் குடும்பத்திலாவது, கிராமத்திலாவது, பட்டணத்திலாவது, அல்லது தேசத்திலாவது எல்லோருங் கலந்து ஒற்றுமையான மனதுடன் எல்லோருக்கும் நன்மை யுண்டாகும்படி வாழும் வழக்கத்திற்கு ஒற்றுமை வாழ்வு (Corporate living) என்று பெயர். பலருக்கும் பலவித நன்மைகளைச் செய்ய வேண்டுமென்பதே இதன் சூக்ஷுமம். எறும்புகளிடத்திலும், பறவைகளிடத்திலும் இம்மாதிரி ஒற்றுமையுடன் கூடிய வாழ்வைக் காணலாம். இந்த வழக்கத்தை யனுசரிப்பதானல், ஒவ்வொருவனும் மற்றவனுக்காகத் தன் லாபத்தைச் சிறிதே விட்டுக்கொடுக்கவேண்டியிருக்கும். பிரஜைகளில் ஒவ்வொருவரும் பத்துபேர் நன்மைக்காக தமது லாபத்தைத் தாமாகவே பிறருடைய நெருக்கடியில்லாமல் கொஞ்சங்கொஞ்சம் விட்டு வருவார்களானல் அதுவே சுதந்

திரம் எனப்படும். ஒருவனுடைய பரலோக இன்பத்திற்கும் இதுவே தகுந்த சாதனமுமாகிறது. அப்படியில்லாமல் பிரஜைகள் சுயநலங் கருதுவோர்களாய் ஒவ்வொருவனும் தனது நலத்தையே விரும்புவானுகில் அண்டை வீட்டுக்காரனுக்கு துன்பமுண்டாகாமல் போகாது. அப்படிப்பட்ட துன்பத்தைத் தடுப்பதற்கே இராஜ சாசனங்கள் வெளித் தோன்றுவது. லோகல் போர்டு ஆக்டு, பட்டிக்காட்டு இடங்களுக்குச் சார்ந்த சாசனமென்று கூறினேம். இதனை யாராய்ந்து பார்த்தால், சமூகத்தில் ஜனங்களுடைய நன்மைக்கு எவனொருவன் இடைஞ்ச லுண்டாக்குகின்ருனே அவனுக்கே அதன் செக்ஷன்கள் எதிர்ப்பவை. முன்கூறிய உதாரணமே இங்கு ஒப்பிடலாம். ஓர் ஊரில் வண்டிகளின் போக்குவரத்துகளுக்கும், மனிதர்கள் பசுக்கள் நடந்து வருவதற்கும் மாத்திரம் போதுமான அகலமுடன் ஓர் வீதியிருக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். இதன் அகலம் குறுகிவிடாமல் கவனித்து வருவது ஜனங்களுடைய நன்மைக்கே. இதையறியாமல் அங்கே குடியிருப்பவனொருவன் தன் வாசலுக்கு முன்னே திண்ணைகளைக் கட்டி வீதியில் ஓர் பாகத்தை ஆக்கிரமித்துக் கொள்வானுனல் சர்க்கார் அதைப் பிடுங்கிவிட்டு அவனுக்குத் தியாக புத்தியைக் கற்றுக் கொடுக்க வேண்டி வரும். இம்மாதிரி சமயங்களில் ஜனங்கள் மேல் ஜனங்களுக்கே யதிகார மிருக்கவேண்டுமென்

பது சுயராச்சிய கிரமத்து முக்கிய தத்துவம். ஒருவன் தன் தப்புகளைத் தானகவே தெரிந்துகொண்டு திருத்திக்கொள்வானுனல் அவனே நல்லவன். சமூகத்தில் எல்லோரும் இப்படி நடந்து கொள்வார்களானல் இந்த நன்மை கிராமத்தில் வியாபித்துவரும்.

உள்நாட்டுச் சபைகளின் இயல்பிலும் இந்த தர்மமே குறிப்பாக விருக்கின்றது. இதில் வோட்டர்களுக்கும், மெம்பர்களுக்கும், ப்ரெஸிடெண்டுக்கும், போர்டுக்கும் உள்ள காரியமுறை அவரவர் பொறுப்புக்குத் தக்கபடி ஏற்பட்டிருப்பதைக் காணலாம். அப் பொறுப்பை ஒவ்வொன்ருக எடுத்து ஆராய்வோம்:

இந்த சபைகளை யுண்டாக்குவதற்கு மூல சக்தி வோட் என்பதே. இச்சபைகளே யல்லாமல், இராஜதானி சாசன சபைகள், சாம்பிராச்சிய சாசன சபை இவற்றையும் நிற்கவைப்பது வோட்டொன்றே. ஆனதனல் கிராமத்து வோட்டர் அறிவுடன் நன்மை தீமை யறிந்து தைரியத்தோடு நடந்து வருவானுனல் குடிமக்கள் பக்கம் எடுத்துக்கொள்ளப்படும் சபையாளனும் அவனிடத்திலிருந்துகொண்டு ஜனங்களுக்கு நன்மையைத் தருவிக்க அக்கரையுடையவனுய் நடந்து கொள்வான். அப்படியில்லாமல் பலமானவர் செய்யும் மிரட்டலுக்கும், நெருக்கடிக்கும், இலவசப் பணத்திற்கும், இடங்கொடுத்தால் வோட்டின் பலமே நசித்துப் போய்விடும். இந்த பலம்

நாசமாகாமல் இருப்பதற்காகவே இராஜ சாசனங்கள் உண்டாயிருக்கின்றனவென்று 5-ம் அத்தியாயத்தில் விரிவாய்க் கூறினேம். தான் வோட் கொடுத்த மெம்பர் அச்சபையில் கவனத்துடன் நின்று நன்மையுண்டாக்குவானு என்று கவனித்து வருவதற்கு வோட்டருக்கு அதிகாரமுண்டு. அப்படி முடியாதபோது தன்னுடன் இருக்கும் வோட்டர்களை யெல்லாம் சேர்த்து சபை நடத்தி அந்த மெம்பரை இராஜினுமா கொடுத்து விடும்படி நிர்ப்பந்தஞ்செய்யவாம். அதன்மேல் அவன் தன் வேலையை இன்னெருனுக்கு விட்டுக்கொடுத்து விடுவதும் ஒற்றுமையான வாழ்க்கையின் ஒழுங்காகும். வோட்டர்கள் அவரவர் சபைகளில் மீட்டிங்கு நடக்கும்பொழுது நேரே கண்டு தாம் அனுப்பியிருக்கும் மெம்பர்கள் எந்த மாதிரி நடந்து கொள்கின்ருர்களோவென்று கவனித்து வரவும் அதிகாரம் உண்டு. தம்மில் பலர் கூடி ஏதேனும் ஓர் நற்செய்கையைச் செய்யவேண்டுமென்ருல் தமது மெம்பரிடம் தெரிவித்து மீட்டிங்கில் அவ்விஷயத்தைப்பற்றி பிரஸ்தாபஞ் செய்யவேண்டிக் கூறவும் அவர்களுக்கு உரிமையுண்டு. இந்த வேலைகளுக்காக கிராமங்களிலும், தாலுக்காக்களிலும், ஜில்லாக்களிலும் வோட்டர்களுடைய சபைகள் நிறைந்திருக்கவேண்டும். அப்பொழுதைக் கப்பொழுது அவர்கள் மீட்டிங்குகள் நடத்தவேண்டும். அந்த மீட்டிங்குகளில் அவர்கள் செய்யுந் தீர்மானங்களை அவர்

களுடைய மெம்பர்களுக்குத் தெரிவித்து போர்டின் மீட்டிங்குகளில் பிரஸ்தாபஞ் செய்து காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட வோட்டர்களின் யோசனைகளை மெம்பர் ஒப்புக்கொள்ளாத போதிலும், ஓர்வேளை மெம்பர் ஒப்புச்கொண்டு, போர்டார் ஒப்புக்கொள்ளாதபோதிலும், ஊர்வோட்டர்களெல்லாஞ் சேர்ந்து சபைகூடி போர்டின்மேல் தமக்கு நம்பிக்கை யில்லையென்று தீர்மானஞ்செய்து போர்டையே எடுத்துவிடவும் சுதந்திரமுண்டு. இம் மாதிரி சமயங்களில் மெம்பர்கள் எல்லாம் இராஜினுமா கொடுத்துவிட்டு மற்றதொரு எலெக்ஷன் நடத்தவிடுவது சுயராச்சிய முறைக்கு மரியாதையாகும்.

எந்த வோட்டராயினும் பஞ்சாயத்து போர்டு ஆபிஸுக்குச் சென்று தீர்மான புத்தகங்களைச்சோதனைசெய்ய அதிகார முடையவனுயிருக்கிறுன். வரிப்பண புத்தகங்களையு மப்படியே சோதிப்பதற்கும், அவற்றில் தனக்கு வேண்டிய அம்சங்களைக் குறிப்பிட்டுக் கொள்வதற்கும் எந்த வோட்டருக்கும் சுதந்திரம் உண்டு. போர்டார் தம்மால் ஆகவேண்டிய காரியங்களைச் செய்யாமல் அதனுல் வோட்டருக்கு ஏதாவது நஷ்ட முண்டாகுமானுல் கோர்ட்டுக்குப் போய்த் தக்க நஷ்டபரிகாரம் வரவழைத்துக் கொள்வதற்கும் வோட்டருக்கு அதிகாரமிருக்கிறது. எப்பொழுதோ மூன்று வருடங்களுக்கு ஒருதபா வோட்

காமல் நடக்க முயல்வான். அம்மாதிரி சமயங்களில் ப்ரஸிடெண்டுமேல் நம்பிக்கை கிடையாதென்று தீர்மானஞ் செய்து அதன் மூலமாய் அவனை அவன் பதவியிலிருந்து நீக்கிவிட முடிவதாயிருப்பது நிஜமே. ஆனால் மெம்பர்கள் அலக்ஷியமாய் இதுவரையிலும் வர இடங்கொடுக்கலாகாது. இவையெல்லாம் மெம்பர்களுடைய அதிகாரத்தைத் தழுவினவைகளாகின்றன.

ப்ரெஸிடெண்டு மீட்டிங்கில் மெம்பர்களால் எலக்ஷனில் நியமிக்கப்படுவான். ஒரு தபா இப்படி பிரெஸிடெண்டானவன் இக்காலத்து சட்டத்தையனுசரித்து மறுபடியும் ப்ரெஸிடெண்டாவதற்குத் தடையே கிடையாது. எந்த பிரெஸிடென்டானாலும் ராஜீனமாக் கொடுத்துவிட்டு தன் நிலைமையை விட்டுவிட உரிமையுடையவனே. லோகல் போர்டு ஆக்டு பிரகாரம் வேலைகளை நடத்திவரும் அதிகாரமும் அவனுடையதே. பத்துபேர்க்கு உபயோகமானதோ அல்லது பிறருக்கு அபாயமாவதோ என்று தோன்றியபொழுது, அவசரமானால், போர்டார் சம்மதமின்றியே காரியத்தை நிறைவேற்ற ப்ரஸிடெண்டு அதிகாரமுடையவனே. ஏற்ற சமயங்களில் தன் அதிகாரத்தை வைஸ்ப்ரெஸிடெண்டுக்கோ, அல்லது வேறு யாராயினும் ஓர் மெம்பருக்கோ ஒப்புவிப்பதற்கு ப்ரெஸிடெண்டுக்கு அதிகாரமுண்டு.

போர்டார் நியமிக்கும் எந்த கமிட்டிக்காயினும் அத்தியக்ஷனாயிருக்க வேண்டியவனும் ப்ரெஸிடெண்டேயாவான். மீட்டிங்குகளை நியமித்து மெம்பர்களை வரவழைக்க வேண்டுமென்பது ப்ரெஸிடெண்டுடைய வேலையே. அந்த மீட்டிங்கில் யாதாயினும் ஓர் விஷயத்தைக் குறித்து மெம்பர் இரண்டு சம கக்ஷிகளாய் வோட்டு கொடுத்தால் தன் வோட்டைக் கொடுத்து அதிகார முறை எப்பக்கத்திற்காவது வோட்டை உயர்த்தி தீர்மானம் செய்வதற்கு ப்ரெஸிடெண்டுக்கு அதிகாரமிருக்கிறது. கியாஸ்டிங்கு வோட் (Casting Vote) என்பது இதுவே. தீர்மான புத்தகத்தில் கடைசியில் கையெழுத்து போடுவோனும் ப்ரெஸிடெண்டே. ஆபீஸ் ரிகார்டு முழுவதும் பிரெஸிடெண்டு சுவாதீனத்தி லிருக்கவேண்டும். வேண்டியவர்களுக்கு ரிகார்டு நகல்களைக் கொடுக்கும் அதிகாரமும் அவனுடையதே. ஒவ்வொருமீட்டிங்குக்கும் பெரியவனாய் அத்தியக்ஷதை வகித்து விசாரணை செய்யும் விஷயங்களில் தோன்றும் சந்தேகங்களை யப்பொழுதைக் கப்பொழுதே நீக்கி மீட்டிங்கில் ஒழுங்கு கெடாமல் நடத்துவதற்கும் பிரெஸிடெண்டுக்கு அதிகாரம் உண்டு. போர்டு வேலையாட்களை நியமிப்பதற்கும், அவர்களுக்கு ரஜா கொடுப்பதற்கும், அவர்கள் தப்பு செய்தபொழுது தண்டிப்பதற்கும் சுதந்திரம் அவனுடையதே. எந்தெந்த வகுப்பு வேலைகளில் எத்தனை எத்தனை வேலையாட்கள் இருக்க வேண்டுமென்பதை

நிச்சயப்படுத்தி, மீட்டிங்கில் போர்டாருடைய சம்மதத்தைப் பெறும் அதிகாரமும் பிரெஸிடெண்டுடையதே. போர்டாருக்கு வரவேண்டிய வரிப்பணங்களை வசூல் செய்வதற்கும், மற்ற வரும்படிகளை வரவு வைத்துக் கொள்வதற்கும், வசூலானபொழுது கிரமமாய் ரசீதுகளைக் கொடுப்பதற்கும், அதிகாரம் பிரெஸிடெண்டுடையது. பட்ஜெட்டை முன்னுடியே தயார் செய்வது ப்ரெசிடெண்டுடைய வேலையே. ஏதேனும், ஓர் கட்டடமோ, கிணருே, குழியோ, மரமோ, அபாய நிலைமையிலிருந்து ஜனங்களுக்கு கேடு விளைவிக்குமென்று தோன்றினுல், உடைமைக்காரனுக்கு நோட்டீஸ் கொடுத்து வேண்டியதைச் செய்ய உத்திரவிடுவதும், அவன் செய்யாமற் போனுல் தானே அவ்வேலையைச் செய்து அதற்கு ஆன சிலவை யவனிடத்திலிருந்து வசூல் செய்ய அதிகாரமுடையவனும் பிரெஸிடெண்டேயாவான். ஏதேனும் ஓர் இடத்தில் குடிக்கும் தண்ணீர் கெட்டதென்று தெரிந்தால், அத்தண்ணீரைக் குடிக்கக் கூடாதென்று வெளியிட்டு உத்திரவிடுவதற்கும் பிரெஸிடெண்டுக்கு அதிகாரம் உண்டு. உடைமைக்காரர் சமயத்திற்கு கிடைக்காமற்போனுல் அப்படிப்பட்ட அவசரமான காரியங்களை ப்ரெஸிடெண்டே செய்துவிடலாம். எந்த வீட்டின் பக்கத்திலாவது, மற்ற எந்த இடத்திலாவது பார்ப்பதற்கு அழகா யில்லாமல விருந்தாலும், செடி கொடிகள் வளர்ந்து புழு பூச்சிகள்

கூடி அதனுல் ஜனங்களுக்கு அபாயம் உண்டாகு மென்று தோன்றினுல், அந்த குப்பை கூளத்தை எடுத்தெரியச் சொல்வதற்கும் ப்ரெஸிடெண்டுக்கு அதிகாரமுண்டு. பாதைக்கு இரண்டு பக்கங்களிலு மிருக்கும் வீடுகளில் உடைமைக்காரர் புதிய ஜன்னல்கள், வாசல்கள் இவைகளை வைத்துக்கொள்ள எண்ணும்பொழுது, ப்ரெஸிடெண்டுடைய சம்மதமிருந்தாலன்றி செல்லாது. அப்படியே ப்ரெஸிடெண்டுடைய சம்மதமில்லாமல் பாதைகளில் குழிகளை வெட்டுவதோ, வேறு எப்படிப்பட்ட இடைஞ்சலை யுண்டாக்குவதோ இவையெல்லாம் குடி ஜனங்கள் செய்யக் கூடாது. கடைவீதியில் கொடுக்கல் விற்றல் முதலிய அளவுகளையும், நிறைகளையும் அப்பொழுதைக் கப்பொழுது பரீக்ஷை செய்துவியாபாரங்களில் மோசடி நடக்காமல் தடுக்கும் அதிகாரமும் ப்ரெஸிடெண்டுடையது.

போர்டுகள்.

ஜனங்களுடைய நன்மைக்காக 4-ம் அத்தியாயத்தில் கூறின காரிய முறைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் போர்டாரைச் சேர்ந்ததாகும். அதற்கு அசையும் பொருள்களையாவது அசையாப் பொருள்களையாவது சேர்த்து வைப்பதற்கு போர்டாருக்கு அதிகாரமுண்டு. இவ்விஷயத்திலும் கோர்டுகளில் வியவகாரஞ் செய்வதும் போர்டாருடைய வேலையே. காரியங்களை நடத்துவதற்கு வேறு யாருடனுனலும் உடன்

படிக்கை செய்துகொள்வதும் போர்டாருடைய வேலையே. வருடா வருடம் பட்ஜெட்டை நிச்சயிப்ப தற்கும், சமயத்திற்குத் தக்கபடி திருத்தி கொள் வதற்கும் போர்டாருக்கே யதிகாரமிருக்கிறது. அந்தந்த வருடம் செய்த வேலைகளை யெல்லாம் வருட முடிவில் விசாரித்து ஆன வரவு சிலவுகளுடன் ப்ரெஸிடெண்டு தயார் செய்து வாசிக்கும் பட்டியை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களும் போர்டாரே. போர்டின் காரியமுறையில் போர்டாரும் பிரெஸி டெண்டும் ஆக்டில் உள்ள சட்டத்தை யனுசரித்து, குடியானவர்கள் எதையாவது ஓர் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்று உத்திரவிட்டபொ ழுது அவர்கள் செய்யாமலிருந்தால் அக்குடியானவர் மேல் மேஜிஸ்டிரேட் முன்பாக பிரியாது செய்து அபராதம் போடவைக்கும் அதிகாரமும் ப்ரெஸி டெண்டுடையதே.

லோகல் போர்டு ஆக்டின்படி பிரெஸிடெண்டு மேலுள்ள காரியபாரம் பெரியதென்றும், மெம்பர் கள் பலவிதத்திலும் அவனுக்கு சகாயஞ் செய்தா லன்றி பலமிருக்காதென்றும் முன்னே கூறினேம். தமக்கு வேண்டியவர்களுக்கு உத்தியோகங்களைக் கொடுக்கவில்லை யென்றே, கண்டிராக்டு வேலைகளை தமது வார்த்தையை மீறி தமக்கு ஆகாதவர்களுக்கு கொடுத்தானென்றே, தான் மெம்பரானாலும் தன் மேலேயே ஆக்கிரமித்துக் கொண்டதாக நோட்டீஸ்

கொடுத்தானென்ருே, தான் விரும்பிய காண்டிடேட்டின் எதிர் கக்ஷிக்காரனென்ருே, மெம்பர்கள் பொருமையுடன் கக்ஷிகள் ஏற்படுத்திக்கொண்டு பிரெஸிடெண்டுடைய வேலைகளுக்கு இடையூறு செய்துகொண்டேயிருப்பார்கள். தனக்கு எலெக்ஷனில் உதவி செய்தவர்களுக்கும், அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் பிரெஸிடெண்டு சகாயஞ்செய்வதுசகஜமே. போர்டு வேலைகளுக்கு இடையூருவது, போர்டு பணத்திற்கு நஷ்டமாவது, ஆகாதவரையிலும் மெம்பர்கள் அப்படிப்பட்ட உபகார காரியங்களை பக்ஷபாதமென்று நிந்தை செய்யக் கூடாது. போர்டு வேலையாளர் சிலர் தமது ப்ரெஸிடெண்டுடைய அபிமானத்தைப் பெற வேண்டி எலெக்ஷன்களிலும், வேறு விதமாயும் அவருக்கு லாபத்தை யுண்டாக்க எண்ணி செய்யத்தகாதவற்றைச் செய்து கெட்ட பெயரைச் சம்பாதித்து வைப்பதுமுண்டு. இதற்கு உதாரணம். இப்பொழுதிருக்கும் பிரெஸிடெண்டு இனிமேல் வரப்போகும் எலெக்ஷனுக்கு கியாண்டிடேட்டாய் நின்றிருக்கின்ருனென்று வைத்துக் கொள்வோம். போர்டு வேலையாட்கள் எலெக்ஷன்களில் பிரவேசிக்கக் கூடாதென்று ஓர் ரூல் இருப்பதும் நிஜமே. அப்படியிருந்தாலும் கண்மறைவாய் தமது எஜமானனுக்கு எலெக்ஷனில் ஜயமடையவித்து மெப்பு பெற வேண்டுமென்று விரும்புவதும் அதற்கென்றே கண்டிராக்டர்களை வரவழைத்து

செலவு செய்ய வேண்டுவென்பதும், வோட்டர்களை போலிங்கு பூத்துகளுக்கு வரவழைக்க வேண்டி பஸ் காரரைத் தூண்டி தங்கள் தங்களுடைய பஸ்ஸு களை யோட்ட வேண்டுமென்று கூறுவதும், இந்த உபகாரங்கள் செய்தால்பிரெஸிடெண்டுடைய அனுக் கிரகம் அவர்களுக்கெல்லாம் பின்னே உண்டாகு மென்று தெரிந்தும் தெரியாதபடி காட்டுவதும், பகி ரங்கமான இரகசியமே. அப்படிப்பட்ட கியாண்டி டேட் எலெக்ஷனில் ஜெயித்து இரண்டாந்தரம் பிரெஸிடெண்டாக வந்தால் வேலையாட்கள் செய்யும் கொடுமைகள் தனக்குத் தெரிந்தாலும், நன்றிமறவா மையென்ற தேவதை குறுக்கே வந்து நின்று அப ராதிகளை மன்னிக்கத் தூண்டும்.

இம்மாதிரி நிலைமைகள் உள்ளேவந்து முதிர்ந்து வந்தால் பிரெஸிடெண்டு சம்பூரணமாய் தன் வேலை யாட்களுக்கு உள் படடவனுய் போர்டு வியவகாரங் களில் அனர்த்தம் உண்டாகி கேடடைவது நிஜம். இந்த பிரமாதங்களைத் தடுக்கவேண்டியே ஒவ்வொரு ஜில்லா போர்டுக்கும், எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் (Executive Officer) என்ருல் தாசீல்தாரைப்போன்ற தனிப்பட்ட உத்தியோகியை நியமிக்க வேண்டு மென்று லோகல் கவர்ன்மெண்டார் யோசனைசெய்து வருவார்கள். இந்த உத்தியோகி கவர்ன்மெண்டார் கைக்கீழ் இருப்பதனல் அவரை ப்ரெஸிடெண்டு தண் டிக்க முடியாது. போர்டார் தீர்மானங்களை யனு

சரித்தே வேலைகளைச் செய்து வருவான். போர்டு வேலையாட்களை நியமிப்பதற்கும், தப்பு செய்தவர்களைத் தண்டிப்பதற்கும், எலெக்ஷன் தாக்ஷணியமின்றி தக்கவருக்கு கண்டிராக்டுகளைக் கொடுத்து வேலைகளை நடத்தி வருவதற்கும் அதிகாரம் அந்த உத்தியோகியுடையதேயாகும். இந்த உத்தியோகியைத் தண்டிக்கும் அதிகாரம் கவர்ன்மெண்டாருடையதாதலால் அவர் போர்டுகக்ஷி வியவகாரங்களில் நுழைவதாவது இடைஞ்சல்களை யுண்டாக்கவாவது இடமே இருக்காது.

போர்டு வேலைகள் ஜனங்களுடைய நன்மைக்கேயாதலால் இரகசிமென்பதே வேண்டியதில்லை. ஆனதனுலேயே குடிஜனங்கள் யாராவது வந்து மீட்டிங்குகள் எப்படி நடக்கிறதென்று கவனித்துவர அதிகாரம் இருக்கிறது. பிரெஸிடெண்டைக் கேட்டு சங்கதிகளைத் தெரிந்துகொள்வதற்கும், போர்டு வேலைகளில் ஏதாவது குறையோ, பணநஷ்டமோ சம்பவித்ததென்று மெம்பருக்குத்தோன்றினுல் அதை ப்ரெஸ்டெண்டுக்கு எடுத்துக்காட்டுவதற்கும் அவசரமானுல் தீர்மானங்களைகொண்டுவரவும் மெம்பருக்கு அதிகாரமிருப்பது இந்த பகிரங்கமான வழக்கத்திற்கு சாக்ஷியாகின்றது. எதிர்த்தலையே பெரிதாக நினைக்கும் ப்ரெஸிடெண்டுகள் கேள்வியிட்ட மெம்பர்கள்மேல் கோபங்கொள்வதும், தீர்மானங்களை எதிர்த்தபோது அந்த மெம்பரை ஏளனமாய்ப் பார்ப்பதும் அபுரூப

மானதல்ல. சில மெம்பர்கள் ப்ரெஸிடெண்டுமேல் தமக்கிருக்கும் கக்ஷி வயறெரிச்சலினாலோ, பொறாமையினாலோ ப்ரெஸிடெண்டைக் காரணமில்லாமலே தொந்திரவு செய்வதும் நேரிடும். இந்த சமயங்களில் இருகக்ஷிக் காரரும் பொறுமையுடன் கக்ஷிமனஸ்தாபங்களை மனதில் வைத்துக்கொள்ளாமல் தங்கள் தங்கள் வேலைகளை யுதாரமான மனதுடன் நடத்திக் கொள்ளுதல் உத்தமம். அப்படியில்லாமல் பிரெஸிடெண்டும், மெம்பர்களும் எடுத்ததெற்கெல்லாம் சண்டைபோட்டுக்கொண்டு வந்தால் காரியத்திற்குத் தடங்கலுண்டாவது நிஜம். இம்மாதிரி மனஸ்தாபங்களையெல்லாம்விட்டுவிட்டு ஒற்றுமையுடன் தொண்டு செய்து வருவதே உண்மையான தேசபக்தியாகும்.

எப்படிப்பட்ட அரசாட்சிக்கானாலும் உள்நாட்டுச் சபைகளின் காரியமுறைகள் மிக்க ஒழுங்கானவையென்று காட்டப்பட்டது. நாடு முழுவதும் கிராமங்களால் நிறைந்திருப்பதால் அது இன்னும் விசேஷமே. இக் காரிய முறைகளெல்லாம் ஒழுங்கீனமல்லாமல்எக்காலத்திலும்நடந்துவர வேண்டுமென்பதையும் படிப்பார் அறிந்திருக்கலாம். இக்காரியங்களை யெல்லாம் வோட்டர் முதல் லோகல் கவர்ன்மெண்டுவரையிலும் படிப்படியாய்வேலைசெய்து வரவேண்டும். தப்பிதங்கள் நடக்கலாம். யாரோ சிலர் தம்முடைய சொந்த லாபத்தை பெரிதாக நினைத்து ஜனங்களுடைய நன்மைக்கே கெடுதலையுண்டாக்கலாம். இந்தக் குறைவு

களையெல்லாம் கவனித்து மேற்பார்வை முறை அப்பொழுதைக் கப்பொழுதே ஒழுங்குபடுத்தினல் அல்லாது செய்த வேலையெல்லாம் வீணுய்விடும். இந்த விஷயங்களையெல்லாம் அப்பொழுதைக்கப் பொழுதே கண்டுகொண்டு தடை செய்து பாதுகாப் பதற்கு ஒவ்வொரு அந்தஸ்திலிருக்கும் அதிகாரிக்கும் கொஞ்சங்கொஞ்சம் விசாரணையதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த விஷயங்களை இந்த அத்தியா யத்தில் விரிவாய்க் கூறுவோம்.

கிராம பஞ்சாயத்துக்களின் மேல்விசாரணை யதிகா ரிகள் ஜில்லா போர்டார். லோகல்கவர்ன்மெண்டார் இவர்கள் எல்லோருக்கும் பெரியவர்கள். லோகல் கவ ர்ன்மெண்டாருக்குமேற்பட்டிருப்பதுலோகல்போர்டு ஆக்டு. என்றால் கவர்ன்மெண்டாரைவிட ஆக்டை நியமித்த சாசன சபையோரே பெரியவர்களென்ப தாம். அப்படிப்பட்ட சாசன சபைகளுக்கு மூலமான வர் வோட்டர்களே. அரசாட்சி ஜனங்களுடைய சம் மதத்தினல் நடக்கவேண்டுமென்னும் காரிய முறை இப்படிப்பட்டதாகும்.

நியாயமென்று தோன்றினல் லோகல் கவர்ன் மெண்டார் எந்த லோகல் போர்டு ரிகார்டையாயி னும் வரவழைத்து பரீக்ஷை செய்வதற்கு அதிகார மிருக்கின்றது. நடைபெற்றுவரும் எந்த வேலையை யாயினும் இன்னொரு உத்தியோகஸ்தனைக் கொண்டு மேற்பார்வையிடச் செய்யலாம். அவசியமானல் அந்த

வேலைகளைக் குறித்த எஸ்டிமேட்டுகள், பிளான்கள், கணக்குகள் இவையேயன்றி வேண்டிய சமாச்சாரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கும் கவர்ன்மெண்டாருக்குச் சுதந்திரம் உண்டு. இவற்றை யெல்லாம் பரீக்ஷை செய்த பின்பு எந்தக் காரியத்தைக் குறித்தாவது அல்லது ஏதேனும் விஷயத்தைக் குறித்தாவது திருத்துதல் செய்யச்சொல்லுவதர்க்கு கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம்உண்டு. அவ்வளவே யல்லாமல் போர்டுதீர்மானங்களை மீறி இது இப்படியேயென்று ஆக்ஷேபிப்பது அவர்களுக்குத் தகுந்ததல்ல. அவர்கள் செய்த திருத்துதல்களையொட்டி நடக்க முடியாதென்று சொல்வதற்கும் போர்டாரே சுதந்தரமுடையவர்கள்.

பஞ்சாயத்து போர்டார்மேல் டிஸ்டிரிக்டு போர்டாருக்கு இப்படிப்பட்ட அதிகாரமுண்டு.

ஒரு போர்டாகிலும் அதன் பிரஸிடெண்டாகிலும் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமலிருந்தார்களோ லோகல் கவர்ன்மெண்டார் அந்த வேலைகளைத் தாமே செய்வித்து அதற்கான சிலவை போர்டு பணத்திலிருந்து வசூல் செய்துகொள்ள அதிகாரம் உண்டு. பஞ்சாயத்து போர்டுமேல் டிஸ்டிரிக்டு போர்டு பிரஸிடெண்டுக்கும் இப்படிப்பட்ட காரியமுறை சாசனஞ் செய்யப்பட்டிருக்கிறது.

இதுவேயல்ல. ஓர் லோகல் போர்டு செய்த தீர்மானமாவது, பிரஸிடெண்டு செய்த காரியமாவது

சட்டத்திற்கு விரோதமானதென்று தமக்குத் தெரிந்தாலும், அவரவர் அதிகாரத்திற்கு மிஞ்சினதென்று தெரிந்தாலும், ஜனங்களுக்கு அபாயமாகுமென்று தெரிந்தாலும் அந்தத் தீர்மானத்தையே ரத்து செய்ய கவர்ன்மெண்டாருக்கு சுதந்திரமுண்டு. ஓர் போர்டு வழக்கப்படி நடக்கவேண்டிய காரியங்களைச் செய்யாமல் அடிக்கடி அசட்டையாயிருந்து தமது கையாலாகாதத் தன்மையை வெளியிடுவார்களானல் அந்த போர்டை எடுத்து விட்டு மற்ஞெரு போர்டை எலெக்ஷன் மூலமாக நியமிக்கும் அதிகாரம் லோகல் கவர்ன்மெண்டாருடையது.

எந்த லோகல் போர்டு பிரெஸிடெண்டாவது தன் போர்டு தீர்மானங்களை அமலில் நடத்தி வைக்கத் தப்பினுலும், ஆக்டுக்கு விரோதமாய் நடந்தாலும், தனக்கு அதிகாரமிருக்கிறதென்ற எண்ணத்துடன் ஜனங்களுக்கு துன்பஞ் செய்தாலும், தக்கபடி விடை வாங்கிக்கொண்டு விசாரணை செய்து அப்படிப்பட்ட பிரெஸிடெண்டை வேலையிலிருந்து நீக்கி விடுவதற்கு கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு.

பிரெஸிடெண்டு மேல் போர்டாருக்கு நம்பிக்கையில்லாமல் போனல் அந்த போர்டார் மீட்டிங்கில் இந்த விஷயத்தைப்பற்றி பேசி தீர்மானித்தபொழுது பிரெஸிடெண்டு தன் வேலையை விடவேண்டிவரும்.

போர்டு சிலவு செய்யும் பணத்தில் நஷ்டமோ அல்லது குறைவோ கண்டுபிடித்தால், யாருடைய அஜாக்கிரதையால் அல்லது மோசத்தினுல் அந்த நஷ்டம் வந்ததென்று தெரிந்து அந்த நஷ்டத்தை அவர்களிடமிருந்து வசூல் செய்யவேண்டுமென்பதற்கும் சில விதிகளிருக்கின்றன. இவற்றையே சர்சார்ஜ் விதிகளென்று (Surcharge Rules) சொல்வது.

போர்டு காரியங்கள் நடைபெறுவதில் அனுபவத்தினுல் ஆக்டாயினும், அதன்மேல் விவரித்த ரூல்களாவது உபயோகமற்றவை யென்று தோன்றினுல் ஆக்டை சவரணை செய்வதற்கு சாசன சபையாருக்கும், ரூல்ஸுகளை சவரணை செய்வதற்கு லோகல் கவர்ன்மெண்டாருக்கும் அதிகாரமுண்டு.

லோகல் போர்டுகள் தம்முள் கக்ஷிகளை வளர்த்திக்கொண்டு நடக்கவேண்டிய வேலைகளை நடத்தாமலிருப்பதும், அதையே காரணமாக வைத்துக்கொண்டு லோகல் கவர்ன்மெண்டார் அந்த போர்டுகளை அடியோடு எடுத்து விடுவதும் இப்பொழுது சாதாரணமாய் நடந்து வரும் சங்கதிகள். இந்த நிலைமைகளுக்கெல்லாம் இடங் கொடுப்பதும் ஜனங்களுக்கே அபகீர்த்தி. சுயராச்சியத்திற்கு நாம் தகுதியற்றவர்கள் என்பதற்கு பிரபலமான சாக்ஷியமே யாகிறது.

X

பல சுருதி.

(Resulting good.)

மேற்கண்ட அத்தியாயங்களில் குறித்த விஷயங்களை வாசிப்போர் தீர விசாரித்து யோசிப்பார்களாயின் அதிலிருக்கும் காரிய முறை சுயராச்சிய சாதனத்திற்கு கசரத்தை போன்றதென்று தோன்றாமற் போகாது. அவ்வளவேயல்ல. பேரின்பத்தைப் பெறுவதற்கும் இதுவே தகுந்த வழியென்று உறுதிக் கூறலாம். இது யாரோ சொல்லும் வார்த்தையல்ல. கபிலனுடைய தாய் தேவ ஹூதிக்கு "ஜனங்கள் நன்மையை நாடி யுழைப்பதே சாத்துவிக யோகமென்பதாம்" என்று போதித்த மகா பாகவத இரகசியம். அதாவது தமது வாழ்நாட்களில் மானிடருடைய நன்மையை நாடி யுழைப்பவரே பக்தர் கோடியில் மிக்க உயர்ந்த நிலைமையைப் பெறுவர் என்பது இதன்பொருள். பிறருடைய நலம் முன்னே, தமது நலம் பின்னே யென்ற தருமத்தை ஒவ்வொருவனும் எண்ணத்திலும், வார்த்தையிலும், காரியத்திலும், இளமையிலிருந்து கற்றுப் பழகி வருவானேயானல் அதுவே அவனுக்கு மேலும் மேலும் ஆனந்தத்தை உண்டாக்கும். செய்ததன் பலனென்னவென்று காத்திருக்க வேண்டியதில்லை. முயற்சியிலேயே இன்பமுண்டாகும். இதில் இன்னொரு பெரிய இரகசியமிருக்கிறது. ஓர் நல்ல வேலை

யைச் செய்தால் பின்னுமொரு நல்ல வேலையைச் செய்ய எங்கிருந்தோ பலம் தனக்குத் தானகவே வருகிறது. லோகல் போர்டுகளைப் போன்ற உள் நாட்டுச் சபைகள் எக்காலத்திலும், எந்த நாட்டிலும் நற்காரியங்களைச் செய்ய கசரத் இடங்களைப் போன்ற தென்றேம். எவனுயினும் தினந்தோறும் தனது நன்மையை நாடி வாழ்ந்து வருவது தருமமே. அவ் வண்ணம் நடப்பதிலும் மற்றவனுக்கு இடைஞ்சலை யுண்டாக்காமல் வாழ்க்கையை நடத்தக் கற்றுக்கொள் ளுதல் இன்னும் மேலான தருமமல்லவா? முன்னே அண்டைவீட்டுக்காரனுடைய நலம், பின்னே என் சவுகரியம், என்ற தருமத்தைக் கையாண்டு வருவது உத்தமோத்தமமானது. இந்த வழக்கம் எவனிடத்தி லானுலும் இளமையிலிருந்தே பிடிபட்டு வந்ததோ அவனுடைய ஜன்மமே ஜன்மம்! இவ்வழக்கத்தில் பயன்பெற விரும்புவோன், பிறருடைய நலத்தை நாடி உழைக்கும்போது தனது நலத்தை யடியோடு மறந்து விடுவான். இதையே தியாகமென்பது. வேதாந்திகள் யக்ஞமென்றழைப்பதும் இதுவே. இம் மாதிரியான யக்ஞங்களே மழை பெய்ய சக்தி பெற்ற வையென்று வேதங்களே வெளியிடுகின்றன.

அன்னுத்பவந்தி பூதானி
பர்ஜன்யாதன்ன ஸம்பவ:
யக்ஞாத்பவந்தி பர்ஜன்யோ
யக்ஞ: கர்ம ஸமுத்பவ: ||

இதன் அர்த்தம். ஜனங்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்வதிலிருந்து யக்ஞமென்பது பிறக்கின்றது. அந்த யக்ஞத்திலிருந்தே மழை யுண்டாகிறது. மழை உணவைத் தருகின்றது. உணவே ஜீவராசிகளையெல்லாம் காப்பாற்றி உயிரளிக்கின்றது. யக்ஞமென்றால்—யக்ஞசாலை, அக்னிஹோத்திரம், ருத்விக்குகள், வேதகோஷம், பிராமணர் போஜனங்களுடன் முடிவதல்ல. ஜனங்களுடைய நன்மையே குறிப்பாகவுள்ள உள்நாட்டுச் சபை ஒவ்வொன்றும் நாடெங்கும் பரவியிருக்கிற யக்ஞசாலைகள். பிரெஸிடெண்டு அதன் யஜமானன். வோட்டர்களாயும், மெம்பர்களாயு மிருப்பவர்களே ருத்விக்குகள். சுயநலம் என்பதே யக்ஞபசு. பிறர் நன்மையே யக்ஞதீக்ஷை. இப்படிப்பட்ட யக்ஞமே இகபர சௌக்கியத்துக்குத் தகுந்த வழியாம்.

அநுபந்தம்.

SUPPLEMENT.

மதராஸ் லோகல்போர்டு ஆக்ட் சுருக்கம்.

கோர்த்திருக்கும் விதம்.

[இவ்வுள் நாட்டுச் சபைகளை குடிகள் தமக்குத் தாமாய் எலெக்ஷன் மூலம் நிலைத்து நடத்தி வருவதாய் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கும் சாசனம் லோகல் போர்டு ஆக்ட் (Local Boards Act) என்று புத்தகத்து முகவுரையில் கூறினோம். இச்சாஸநத்தை ரசியித்தது சனங்களால் எலெக்ஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களுடன் விளங்கும் சாசன சபையே யென்பதையும் நாம் மறக்கலாகாது. இந்த ஆக்ட் இவ்விதமாய் ஜன சம்மதத்துடன் விளங்குவதாம்.]

இந்த ஆக்டானது 14 அத்தியாயங்களுடன் 6 பாகங்களாய் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குச் சேர்ந்து 9 பட்டிகளும் (Schedules) இன்னம் சில சங்கிரமண சூத்திரங்களும் (Transitory Rules) பரிசிஷ்ட பாகங்களாய் (Supplimentary Provisions) அமர்ந்திருக்கின்றன

இப்பட்டிகைகளிலுள்ள அம்சங்கள் காரிய முறைக்கு உபவிதிகள். இவை அனுபவத்தை அனுசரித்து திருத்த வேண்டிவந்தால் கவர்ன்மெண்டாருக்கே அதிகாரம் உண்டு. சாசன சபை வரைக்கும் போகவேண்டிய அவசரமில்லை.

பிரிவுகள்

இந்த ஆக்டு 6 பாகங்களாய் பிரிக்கப்பட்டிருக்கின்றன வென்று சொன்னேம். முதல் பாகத்திற்கு அத்தியாயம் ஒன்றே. இதில் 3-வது செக்ஷன் மிகவும் முக்கியமானது. ஆக்டில் வழங்கியிருக்கப்பட்ட முக்கியமான பதங்கள் ஒவ்வொன்றிற்கும் அதன் பொருள் விவரிக்கப்பட்டிருக் கிறது. இதற்கே 'பத நிரூபணமெ'ன்று சொல்லுவார். எந்த ஆக்டுக்காகிலும் இந்த பதநிரூபணபாகமானது ஆரம் பத்திலேயே கோர்ப்படுவது வழக்கம். சந்தர்ப்பங்கள் விகடித் தால் தவிர அந்தந்த பதங்களுக்கு அந்தந்த பொருளே என் பது விதி.

2-வது வகுப்பிற்கு அத்தியாயங்கள் நான்கு. இவை 2, 3, 4, 5. 2-வது அத்தியாயம் எந்தெந்த விஸ்தீரணத்திற்கு எப்பேர்ப்பட்ட போர்டை நிலைவிக்க வேண்டுமோ அதை நிர்ணயிக்கும்.

3-வதில் அப்படிப்பட்ட கூட்டங்களைக் கோர்ப்பதற்கு ரூல்ஸ்களும், காரியமுறையும், அக்கூட்டங்களின்மேல்கவர்ன் மெண்டாருக்கு உண்டான விசாரிக்கும் அதிகாரமும் காட் டப்பட்டிருக்கின்றன. எலெக்ஷன்களுக்கு சம்பந்தப்பட்ட ரூல்ஸை விதிக்கிறது 4-வது அத்தியாயம். 5-வது அத்தியா யத்தில் போர்டுசொத்துகளின்பேரிலும் அதிகார வர்க்கத்தின் பேரிலும் அக்கூட்டங்களுக்குள்ள உடைமையைக் குறிக்கும்.

3-ம் வகுப்பிற்கு அத்தியாயங்கள் இரண்டு. இவை 6-ம், 7-ம். செல்வ முறைக்கு (Finance) சம்பந்தமான சூத் திரங்களே இவைக்கு விஷயமாகும். ஆக்ட் கடைசியில் சேர்த் திருக்கும் 9 பட்டிகளில் (Schedules) 4-வது, 5-வது இவைகளில் இந்த செல்வ முறையைப் பற்றின உபவிதிகள்,

உண்டு. படிப்பவர் இந்த அத்தியாயங்களையும், உபவிதிகளையும் ஒன்ருய்க் கவனிக்க வேண்டிவரும். காரிய முறையின் வழிகளே இவையில் காட்டப்பட்டிருக்கின்றன.

4-வது வகுப்பு இந்த ஆக்டு கோர்வையில் நெஞ்சத்தை (Heart) ப் போன்றதாகும். இதற்கு அத்தியாயங்கள் 8 முதல் 11-வரைக்கும். ஆரோக்கியம், க்ஷேமம், அநுகூலங்கள் இவைகளில் குடிகளானவர் தமக்குத் தமக்காகவே பத்து பேர் நன்மையை உள்ளத்திலிருத்திக்கொண்டு காரியங்களை சாதிக்க முயற்சி செய்யத் தவறினுல் அப்பேர்ப்பட்டவரைக் கட்டாயப்படுத்தி வேலை செய்வித்து அம்மூலமாய் அவர்களுக்கு தியாகமும் ஒழுங்கும் கற்றுக்கொடுக்கும்.

5-ம்வகுப்புக்கு அத்தியாயங்கள் இரண்டு. இவை12-வது, 13-வது. ஆக்டில் விதிக்கப்பட்ட நியமங்களை அநுசரித்து கவர்ன்மெண்டாரும், ஜில்லா போர்டாரும் ரூல்ஸை விதிக்க வேண்டும்பொழுது கவனிக்கவேண்டிய சூத்திரங்கள் இவைகளில் இருக்கும். ரூல்ஸுக்கு பங்கமாய் நடக்கும் அபராதிகளுக்குத்தண்டனைகளை நிர்ணயிப்பது 13-வது அத்தியாயம். ஆக்ட் கடைசியில் 8-வது, 9-வது பட்டிகள் இவைகளுக்குச் சேர்ந்தனவாக கிரகிக்கத்தக்கினது.

6-ம் வகுப்பிற்கு அத்தியாயம்ஒன்றே. இதில்குடிகள், ஆக்டிலுள்ள நியமங்களுக்கு விகடித்து நடக்க வேண்டிய சமயங்களில் முன்னதாக போர்டாரிடத்திலிருந்தோ, பிரசிடெண்டிடத்திலிருந்தோ லைசென்சுகள் (Licences) அடைவதற்கு விதிதிகள் உண்டு. குடிகள் போர்டாரின் மேல் கோர்ட்டுகளேறி வியாச்சியங்கள் தாகல் செய்வதற்குமுன் நோட்டீஸ் வகைரு கொடுக்க வேண்டிய விஷயத்திலும் இன்னம் சில விஷயங்களிலும் நிபந்தனைகள் இதில் காணலாம்.

பட்டிகைக்கள்

Schedules

[இந்த பட்டிகைகள் ஆக்டுக்கு சேர்ந்தவை யென்று காட்டினேம். ஆக்டில்போல் இவைகளில் மூல தர்மங்கள் இல்லை. காரிய முறையை மாத்திரம் நிர்ணயிக்கும். இவையை திருத்திக்கொள்ள வேண்டியவர் கவர்ன்மெண்டாரா யிருப்பதினல் இப்பட்டிகை ஆக்டிற்கு வெளியே சேர்க்க காரணமா யிற்று. இந்த விதிகள் ஆக்டிலேயே சேர்த்திருந்தால் அவை சமயோசிதமாய் அனுபவத்தை அனுசரித்து திருத்திக் கொள்ள அதிகாரம் உள்ளவர் சாசன சபையாராயிருப்பார். அதனல் அவை திருத்தவேண்டி வருமெனில் காலமும், சிலவும் அதிகமாக வேண்டியிருக்கும்.]

1. முதல் பட்டிகையில் இதுவரையிலும் அமுலில் இருந்து ரத்தான பழைய ஆக்டுகள் காட்டப்பட்டிருக்கின்றன.

2-வதில் மீட்டிங்குகள் நடத்துவதற்கு ரூல்ஸ்கள் உண்டு. இவை, 3-ம் அத்தியாயத்தில் 30, 31, 32, இந்த செக்ஷன்களுடன் கிரகிக்கலாகும்.

3-வது எப்பேர்ப்பட்ட குடிகள் வோட்டர்களாயிருப்பதற்கு தகுந்தவரென்பதை விவரிக்கும். ஆக்டினுடைய 52 முதல் 55-வது செக்ஷன்களுடன் இவை படிக்கத்தக்கனவை.

4-வது பட்டிகையில் இக்கழகங்களுக்கு ஆதாயங்களைக் கொடுக்கும் வரிகளைக் குறித்தும், அவை குடிகளின்மேல் போடவேண்டிய விதத்தையும், அதன்மேல் ஆக்ஷேபனைகள் வந்தபொழுது விசாரிக்கும் வழிகளையும், வசூல் வேலைநடத்த வேண்டிய கிரமமும் காட்டும் சூத்திரங்களை இதில் பார்க்கலாம். ஆக்டில் 6, 7 இந்த அத்தியாயங்களுக்கு இவை சேர்த்தியாக கவனிக்கத்தகும்.

போர்டாருடைய திரவியத்தை பத்திரப்படுத்துவதற்கும், சிலவு செய்வதற்கும் சூத்திரங்கள் 5-ம் பட்டிகையில் காண லாகும்.

ஆக்டு மூலத்தில் அபாயகரமான வியாதிகளைக் குறித்து அங்கங்கே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த வியாதி அபாயகர மென்பது 6-ம் பட்டிகை வெளியிடும்.

தொழில்களில் சிலதுகள் அபாயகரமாகவும், அசிங்கிய மாகவிருந்தும் குடிகளால் பிழைப்பாய் தொடுக்கப் படும். இப்பேர்ப்பட்ட தொழில்களை பேர்க்கொள்வது 7-ம்பட்டிகை.

8, 9-ம் பட்டிகைகளில் ஆக்டுக்கும், ரூல்ஸுக்கும் விக டித்து நடந்து வருகிற அபராதிகள் எந்தெந்த தண்டனைக்கு உள்படவேண்டியிருக்குமென்பதும் காணலாகும். இவை ஆகடுடைய 13-வது அத்தியாயத்துடன் சேர்த்து கவனிக் கத் தகும்.

சங்கிரமண சூத்திரங்கள்.

(Transitory Rules.)

சிற்சில சமயங்களில் அந்தந்த போர்டு பிரதேசத்து எல்லைகளையே மாற்றவேண்டியதா யிருக்கும். ஆக்டு 45-வது செக்ஷன் பிரகாரம் சில காரணங்களில் போர்டையே எடுத்து விடவேண்டி வரும். மற்றொரு சமயத்தில் ஆக்டே மாறுத லாக வேண்டி வரும். இப்பேர்ப்பட்ட சந்தி சமயங்களில் நடந்து வரும் உள்நாட்டுக் கூட்டங்களுடைய காரியமுறைக்கு தடையில்லாமலே வேலைகள் நடத்துவதற்கு பிரத்தியேகமாய் ஆக்ட் கடைசியில் ரூல்ஸ் உண்டு. சங்கிரமன சூத்திரங்கள் (Transtiory Rules) என்பது இவைக்குப் பெயர்.

முடிவு.

CONCLUSION.

ஜனங்களில் எழுதப் படிக்கக் கற்றவர் தொகை 100-க்கு 10-க்கு மிஞ்சாது என்று சொன்னோம். அக்கொஞ்சம் ஜனங்களிலாகிலும் படிக்க ஆவல் கொண்டவர் அரிது. அப்பேர்ப்பட்டவராகிலும் கதைப் புஸ்தகங்கள், அல்லியரசாணி மாலையைப் போன்ற பரிணயங்கள், புராணங்கள் மாத்திரம் படிக்க வழக்கமுண்டா யிருப்பதே தவிர, இந்தப் புஸ்தகத்தைப் போன்ற எழுத்துகளை வாசித்து அறிவ தற்கு புதியதான நெறியே வேண்டியதா யிருக்கும். இந்த பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் சாசிக்கப்படும் சட் டங்கள் எல்லாம் ஆங்கில மொழியிலேயே ரசிக்கப் படும். தேச பாஷைகளில் இவைக்கு ஈடானவையை அந்த ஆங்கிலேய பாஷையில் எழுதியிருக்கிற சட்டங் களைக் கொண்டே கோர்க்கப்படுமாம். வாக்கியங் களை ஜோடித்து எழுதவேண்டிய கிரமத்தில் ஆங்கி லேய பாஷைக்கும், சுதேச பாஷைகளுக்கும் வித்தி யாசம் எவ்வளவோ உண்டு. ஆதலால் ஆங்கிலேயத்தி லிருந்து மொழிபெயர்க்கப்பட்ட (Translation) எழுத் துகள் படிப்பவர்க்கு வியங்கியமாகியும் கஷ்டமாகி யும் தோன்றுவது ஆச்சரியமல்ல. அவைகளில் பாவங்களாவது படிப்பவர்க்கு மனதிற்கு தட்டுவதும் சிரமமே. இக்காலத்தில் க்ஷணக்ஷணத்திற்கும் புது

புது பாவங்கள் பிறந்து வருகின்றன. அப்படிப்பட்ட புதிதான பாவங்களுக்கு தகுந்தாற்போல் புது பதங் களும் எழுதும் வகையும் மாற்றவேண்டுதல் தப்பாது. இப்பேர்ப்பட்ட விகல்பங்களை கவனித்து கையாலான வரையிலும் படிப்பவருக்கு சுலபமாய் மனதிற்கு வரும் விதத்தில், லோகல் போர்டு ஆக்டிலுள்ள மூல தர்மங்களை இந்தப் புஸ்தகம் காட்டும். இம்முயற்சி எவ்வளவு பலித்ததாயிற்றோ படிப்பவர் தங்கள் அனுபவத்தினல் நிர்ணயித்துக் கொள்ளத் தக்கவ ராக்கும்.

தேச பாஷைகளில் இக்காலத்தில் இப்பேர்ப் பட்ட எழுத்துகள் வியாபிக்கச் செய்கிறதற்கு அவ சரம் அதிகமாக்கும். இவை முன்பாகவே எழுதி வைத்தாலொழிய படிப்பவர்க்கு இவைகளில் பரிச் சயம் உண்டாக்குவது சாத்தியமல்ல. இக்காலத்தை யறிந்து ஜனங்கள் தகுந்தபடி நடந்து வரவேண்டு மென்றல் இப்படிப்பட்ட புதிய எழுத்துகள் திக்கு திக்குக்கு பரவ வேண்டியதாயிருக்கும். இந்த மார்க் கத்தில் இது முதல் முயற்சி. இந்த முயற்சியில் பிழை கள் ஏதாவது காணப்பட்டு முன் எழுதப்போகிற வர்க்கு எச்சரிக்கை கொடுப்பதேயாகில் அதுவரைக் காவது லாபமே.

முற்றிற்று

SELECT OPINIONS

on the Telugu original of which this is a Tamil version.

I

Extract from the Foreword of Dewan Bahadur N. Gopalaswami Iyengar.

" In a society which is growing more complex every day and whose ordered life demands a high degree of organisation, the efficient functioning of local authorities is an indispensable condition. In spite of its great importance, there is a lamentable lack of books on Local Government. The author's attempt to supply this want so far as Madras Local Boards are concerned deserves therefore the gratitude especially of the people who speak the language in which the book is written."

"The Local Board is as much an organ of Government as the Provincial or Central Government in India, and is as necessary and important for ministering to the needs and amenities of civilised life. This elementary fact is not infrequently forgotten in quarters where one would expect better knowledge to prevail; it is of course not clearly realised by the great mass of ignorant folk in rural areas. The author has therefore done well in devoting the first four chapters of the book to an explanation of Government in general, of Swaraj and its implications, of the distribution of governmental functions among different authorities and of the place of local boards in an ordered scheme of Government."

"The rest of the book brings together in a few chapters the contents of the law relating to local boards and of the rules framed under it. This summary however is not a dry list of taxes, powers and functions. It is full of the life which emanates from an intelligent and understanding grasp of the principles behind the facts narrated and of the public purposes which such principles are intended to subserve."

"To the task which he sets to himself in writing this book, Mr. Sivasankaram brings a long and intimate experience of Local board administration as President, and member of taluq and district boards and as honorary organiser of Village Panchayats;

a mind whose level of general cultural equipment is above the ordinary; a disregard of trifling and unhealthy non-essentials; a genuine appreciation of fundamentals; and a flow of Telugu diction dignified and full of literary flavour yet simple and easily understood even by the unlettered. No wonder, the result is an eminently informing and readable volume."

II

Circular dated 13th April 1934 by the Inspector of Municipalities and Local Boards.

"The Inspector desires to bring to the notice of all Local Boards the Telugu book 'STHANIKAKUTAMULU' by Mr. T. Sivasankaram of Penukonda to which M.R.Ry. Dewan Bahadur N. Gopalaswami Iyengar Avl., has written an appreciative Preface. The book contains many useful hints on Local Boards and valuable information and notes connected with their administration and is bound to be of use to Panchayat and District Boards in the conduct of their business."

III

Appreciation by the Hon'ble Sir V. Ramesam Pantulu.

"By the kindness of my old friend Mr. T. Sivasankaram, I was able to peruse a copy of his book in Telugu entitled 'STHANIKAKUTAMULU' (Local Boards.) The book exhaustively treats of various aspects relating to Local Boards—such as election, their functions, finance, constitution and control. I have no doubt it will be useful to all persons whose knowledge of English is inadequate but yet wish to play the role of useful citizens in these institutions."

IV

Appreciation by Mr. Gulum Dastagir B.A., L.T., District Educational Officer of Cuddapah and Anantapur.

"The treatment of the book is very comprehensive and effective and you have brought to the subject your very intimate and vast experience of the administration of the Local Bodies."

"In these days of ballot-boxes and the demand for adult franchise, your book comes quite handy and I am sure that the perusal of the book will be an eye-opener to many a Villager."

"As teachers in the far away Villages have to play an important part in the impending administrative reforms, it is but necessary that they should have this book to inculcate correct ideas into the masses about their civic duties and responsibilities."

V

Review by the Hindu in the Educational Supplement dated 25th February 1934.

" This is a useful volume on the working of Local Boards in the Madras Presidency. The author brings to his subject an intimate knowledge of the administration of these bodies, gathered from an experience extending over a whole generation. He is fully alive to the fact that the administration of these bodies has fallen into a slough from which it will be a rather difficult task to rescue them. But the thing must be done. And the only way it can be done is to make public opinion intelligent and assertive. His own book is a modest attempt at achieving this. It is not a mere commentary on the Local Boards Act or a description of the powers and functions of Local Bodies and of their working in practice. More than that it is an appeal to every intelligent person who has anything to do with the business of Local Government to bring a responsible and informed mind to his task and to discharge it in the true spirit of public service."

VI

The Mysore Economic Journal for August '34 says—

We welcome this timely publication, especially now when, India is on its onward march to Swaraj from the pen of Mr. T. Sivasankaram of Penukonda. It is written in chaste but simple Telugu and can be easily understood by the ordinary reader. To those electors and elected to the District Boards, who are not acquainted with the English language and who know only their vernacular Telugu Mr. Sivasankaram's book should prove very useful and an eye-opener. Dewan Bahadur N. Gopalaswamy Iyengar has contributed a Foreword to this book in which he rightly remarks that the author's attempt in writing this book deserves the gratitude of people, who speak the language in which it is written.

In the first four chapters of the book, Mr. Sivasankaram gives a brief account of the working of the Governmental machinery and the place of Local Boards, in it. The other chapters are devoted to the discussion of the Election System, duties of Local Boards, Finance, Working Plan, Powers, Supervision and a summary of the Madras Local Boards Act. We recommerd a close study of the book by every villager in the Telugu Districts of the Madras Presidency. We hope that ere long books on this subject will be written in Tamil and other vernacular language spoken in the Madras Presidency.

C. T. R.

VII

The Government have on the recommendation of the Inspector of Municipal Councils and Local Boards, approved in the G. O. reproduced below the principle of the District Boards supplying at the cost of District Board Funds copies of the book 'STHANIKA-KUTAMULU' of which this book is a Tamil version—to all the Village Panchayat Boards in its area.

LOCAL SELF-GOVERNMENT DEPARTMENT.

G. O. No. Ms. 3497 L. & M., dated 1st August 1934.

Read the following papers :—

From the President, District Board, Anantapur No. 63 dated the 3rd May 1934.

"From the Inspector of Municipal Councils and Local Boards No. 13144 dated the 26th May 1934".

"From the President, District Board, Anantapur No. 63 dated the 17th July 1934".

ORDER :—

The Governmunt sanction the proposal of the Anantapur District Board to purchase 150 copies of 'STHANIKAKUTAMULU' for use of Village Panchayats in the District.

(By order of the Government, Ministry of Local Self-Government.)

E. CONRAN SMITH,

Secretary to Government.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS—1934.

Government of Madras.

(LOCAL SELF GOVERNMENT DEPARTMENT).

LOCAL AND MUNICIPAL.

G. O. No. 4866 L. & M., 5th November 1934.

Books—On Local Boards in Tamil and Telugu—Commended to Local Bodies—Purchase for the use of Panchayat boards from funds of the District Board—Permitted.

Read—the following paper:—

From Mr. T. Sivasankaram, Ex-Member, Madras Legislative Council, Penukonda dated 15th September 1934.

Order—No. 4866, L. & M., dated 5th November 1934.

The Government wish to bring to the notice of local boards the Telugu book " Sthanikakutamulu " and the Tamil book " Ulnattu Kazhakangal " by Mr. T. Sivasankaram of Penukonda. Under Rule 203 of the Local Boards Manual—the sanction of the Local Board concerned is sufficient to the purchase of copies of these books for the use of the institutions—Elementary and High Schools under it. The Government also permit District-Boards to purchase and supply copies of these books for the use of Panchayat Boards in their Districts, subject to the condition that not more than two copies are supplied to each board.

(By order of the Government, Ministry of Local Self Government.)

T. B. RUSSELL,
Secretary to Government.

To all Presidents of District Boards (with copies for pre-unions).

To the Inspector of Municipal Councils and Local Boards.

To the Examiner of Local Fund Accounts.

FORWARDED.

(By order)
(Sd.) W. KRISHNASWAMI.
Superintendent.

Office of the Inspector of Local Boards and Municipal Councils, Madras.

Subject:—Books and Publications—'ULNATTU KAZHAKANGAL' (Local Boards.)

No. R.O.C. 30971-34/22-10-1934.

The Inspector desires to bring to the notice of all Local Boards in Tamil Districts the Tamilwork named 'ULNATTU KAZHAKANGAL' (உள்நாட்டுக் கழகங்கள்) published by Mr. T. Sivasankaram of Penukonda. The Rt. Hon'ble V. S. Srinivasa Sastri P. C. has written a foreword to this book aud the Hon'ble Dewan Bahadur S. Kumaraswami Reddiar Avl., B.A., B.L., an introduction. The book contains many useful hints and much valuable information regarding Local Board administration and is bound to be very useful to Panchayat and District Boards in the conduct of their business.

The price of the book is Re. 1 only.

(Sd.) A. TAMPOE,

Inspector.

By order

(Sd.) ILLEGIBLE.

Manager 27-10-34.

To All Panchayat Boards in Tamil districts (in vernacular)

,, Presidents, District Boards. ,, ,,

,, District Panchayat Officers. ,, ,

M.R.Ry., T. Sivasankaram Avl., Vakil, Penukonda.

(True Copy).

Interviewed by the Associated Press on Nov. 22nd at Santhiniketan on the White Paper Scheme, Dr. Rabindranath Tagore says:—

* * *

"I have never believed that the salvation of my country will come from any political machine, however modern and dazzling, imported from the foreign market. Swaraj is not a question of apportionment of seats and Votes. There can be no Swaraj for us till seven-hundred thousand dead villages are again brought to life and that ean be done only through our work."

(THE 'HINDU' OF 22ND NOV. 34.)